# முரசொலி

## பொங்கல் மலர் -1977



ஆசிரியர்: முரசொலி மாறன் எம்.ஏ.,எம்.பி

விலை ரூ.3


பிப்ரவரி
வெளியீடு...
மெரினா
மூவிஸ்...
எல்லாம்
அவளே
டைரக்ஷன்
அமிர்தம்
T.N.பாலு / M.S.விஸ்வநாதன்



# தம்பிக்கு அண்ணா எழுதியவை

## பொங்கல் வாழ்த்து!

உழைப்பின் பலன் கண்டு உவகை கொள்ளும் நன்னாள்! பொங்கல் நாள்! என்று உங்களையெல்லாம் எண்ணி யெண்ணி மகிழ்வெய்துகிறேன்.

ஏர் முனை விழாவும், தமிழ் பொங்கும் விழாக்களில் இன்று இடம் பெற்று புத்தாடை புனைந்து கன்னலும் செந்நெலும் கண்டு, குழந்தையர் மகளிர் அனைவரோடும் நீங்களெல்லாம் இன்புற்றிருக்க வாழ்த்துகிறேன்.

சென்னைத் திருநகரம் சென்ற சில நாட்களாகத் தமிழுக்குச் சூட்டிய புகழாரம் அறிவீர்!

அதன் மணத்தோடு தாய் மொழியாம் தமிழின் பெருமை பேசும் பல்வேறு நாட்டு அறிஞர்களும் தமிழகத்தின் மூதூர்களிலே இன்று பவனி சென்றுள்ளனர்.

இந்தப் பெருமையும் புகழும் நம் உயிர்த் தமிழ் பெற்றிருக்கும் மாட்சியினை இப்பொங்கலின் போது நான் பெற்ற புதுப் பேறாக எண்ணுகின்றேன்.

பிரச்சினைகள் பல! சிக்கல்கள் நிரம்ப! எனினும் நீங்களெல்லாம் பணித்துள்ள பொறுப்பினை ஏற்று நடத்தி எல்லோரும் நல்வாழ்வு பெற என் பணி எப்போதும் தொடருமென்பதைத் தவிர இந்நன்னாளில் நான் சொல்ல என்ன இருக்கிறது.

உழவர் பெருமக்களும், பாட்டாளித் தோழர்களும், மாணவ நண்பர்களும் மற்றோரும் இந்நாளில் என் மன உணர்வையே கொள்வார்களென்று நான் எதிர் பார்க்கிறேன்.

உழைப்பே நம் செல்வம்! அமைதியும் அன்புமே நமது கண்கள்! உங்களுக்கெல்லாம் என் மனம் நிரம்பிய வாழ்த்துக்கள்! வணக்கங்கள்!

(1968 ஆம் ஆண்டு பொங்கல் நன்னாளில் விடுத்த வாழ்த்துச் செய்தி.)



## திருவிளக்கே உனைமடியவிடேன்!

ஒரு திங்களுக்கு முன்பு, நான் எழுதிக்கொண்டிருந்த போது, திடீரென மின்சார விளக்குகள் ஊரெங்கும் அணைந்துவிட்டன — ஒரே மையிருட்டாகிவிட்டது. ஓடிப் போய் ஒரு மெழுகுவத்தி கொண்டுவந்தான், எனக்கு உதவி செய்வதில் மகிழ்ச்சிகாணும் எண்ணம்கொண்டுள்ள பல்லாயிரக்கணக்கான தம்பிகளிலே ஒருவன், அந்த மெழுகுவத்தியைக் கொளுத்தினான் — கப்பிக் கொண்டிருந்த இருளைக் கிழித்துக்கொண்டு, சின்னஞ்சிறு சிங்காரச்சுடர், எங்களை மகிழ்வித்தது. என்ன குளிர்ச்சி! எத்தனை மகிழ்ச்சி! மின்சார விளக்குக்கு உள்ள பளபளப்பு, இதற்கு நிச்சயம் இல்லை — ஆயினும், இருள் கப்பிக்கொண்டபோது, இதோ என்னால் முடிந்த அளவு நான் ஒளி தருகிறேன் என்று கூறுவதுபோலலவா மெழுகுவத்தி இருந்தது.

நான் எழுதுவதை நிறுத்திக் கொண்டு, அதையே பார்த்துக் கொண்டிருந்தேன். சின்னஞ்சிறு திரி! அழகான ஒளி! எரிச்சலூட்டாத வெளிச்சம்!! ஒளியின் அளவு குறைவுதான் — வலிவுகூட அதிகம் இல்லை! காற்றடிக்கிறது. திரியினின்றும் கிளம்பும் ஒளி நடுக்கத்தோடு ஆடுகிறது! கையைத் திரைபோலாக்கி, அசையும் ஒளிக்குப் பாதுகாப்பளித்து, அணையவிடாமல் பார்த்துக் கொள்ளவேண்டி இருந்தது. அவ்வளவு வலிவற்றது பாவம், எனினும் தன்னால் முடிந்த அளவு இருளை ஓட்டுகிறது! அதனிடம் பேசவேண்டும்போலத் தோன்றிற்று பேயேன்!!

தம்பி! மெழுகுவத்தி எரிவதைப் பார்த்துக்கொண்டே இருந்தேன் — சில விநாடிகள் சுடர் விடுகிறது. ஒளி தருகிறது, பயன் அளிக்கிறது! எந்தவிதமாக என்பதைச் சொல்லவா, தம்பி! ஒளி அளித்துக்கொண்டிருப்பதால், மெழுகுவத்தி தன்னைத்தானே மாய்த்துக்கொள்கிறது! உருகிக் கொண்டே போகிறது! பார்த்துக்கொண்டிருக்கும்போதே கரைகிறது! ஒளியா தந்து கொண்டிருந்தது தம்பி! தன் உயிரையே தந்து கொண்டிருந்தது. அணு அணுவாக!! தன்னை மாய்த்துக்கொள்கிறது. இருளை விரட்ட ஒளிதர! நமக்குப் பயன் தருவதற்காகவே, தன்னைத் தந்துவிடுகிறது!! ஒரு ஜாண் அளவு இருந்தது, கொளுத்தும்போது—பார்த்துக் கொண்டே இருக்கும்போது, சுட்டுவிரல் அளவுக்கு வந்து விட்டது — உடலிலே மட்டுமல்ல, உயிரிலேயே ஒரு பெருமளவு இழந்துவிட்டது — இருளகற்றும் தொண்டாற்றி இன்னும்சிறிது நேரமானால் உருவமே இருக்காது — உயிரும் இருக்காது — ஒளி அளித்த மெழுகுவத்தி இருந்த இடம் வெற்றிடமாகிவிடும்! எனக்கென்னவோ அதனை அடியோடு மாண்டுபோகவிடக்கூடாது! என்று தோன்றிற்று. உருகி உடல் குறைந்துபோவதைக் கண்ணால் பார்க்கும்போதே மனம் ஏதேதோ எண்ணுகிறது — அது உருத்தெரியாமலாகிவிடும் கொடுமையைக் காணமுடியாது — காணக்கூடாது என்று தோன்றிற்று. மின்சார விளக்குகள் திடீரென எரியலாயின — ஒளி தந்தது போதும், இருளகற்ற உன்னை நீ கூற்றுயிராக்கிக்கொண்டது போதும் தியாகியே! திருவிளக்கே உன்னை மடியவிடமாட்டேன்! என்று கூறுவதுபோன்ற நிலை பெற்றேன். மெழுகுவத்தியை அணைத்து, கரத்தில் எடுத்து, வைத்துக்கொண்டேன், எனக்கு கவி பாடத் தெரியாது!!



தம்பி! தம்மைத்தாமே வருத்திக்கொண்டு, தமது வாழ்வைச் சிதைத்துக்கொண்டு, இருளகற்றி ஒளிதருவது போல, இனம் வாழக் கழகத்தை வலிவுள்ளதாக்க, தமது வலிவை எல்லாம் தந்துகொண்டிருக்கும் இலட்சக்கணக்கானவர்களின் இதயம் வாடாமல், நம்பிக்கை சிதையாமல் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு, நம்முடையது என்ற உணர்ச்சியால் உந்தப்பட்டவனானேன், மாநாட்டிலே மக்கள் காட்டிய பேரார்வத்தைக் கண்டபோது.

விழிப்புற்ற மக்கள், உதயசூரியனைக் கண்டு; வாழ்வுக்கு வளம் தேடும் வாய்ப்பு கிடைத்தது என்று நடந்திடும் உழவன்போல, நடைபோடுகின்றனர்.



# நோயும் கொண்டாட்டமும்

கழகத் தோழர்கள், குடும்ப பாசத்தோடு, கொள்கைப் பற்றுடன், தோளோடு தோள்சேர நின்று பணியாற்றுவதை காணும்போது, சிலருக்கு கடுகடுப்பாகிறது; இந்த வலிவான அணிவகுப்பு வளருகிறதே என்ற கிலி ஏற்படுகிறது. எத்துணை தோழமை இவர்களிடம்! ஒருவருக்கொருவர் துணை நின்று பணியாற்றி வருகிறார்களே!! ஒரு துளியும் இவர்களுக்குள் போட்டி, பொறாமை, பகை மூளவில்லையே, என்றெல்லாம் எண்ணிப் பயம் கலந்த ஏக்கம் கொள்கிறார்கள். நமது ஒற்றுமை அவர்களுக்குத் திகைப்பை உண்டாக்குகிறது. ஆதிக்கம் அழிக்கப்பட்டுவிடும் என்ற அச்சம் அவர்களைப் பிடித்து உலுக்குகிறது.

ஆனால்; நமது தோழர்களிடையில், காரணத்துடனோ காரணமின்றியோ, தோழமை கெடத்தக்க, கட்டுப்பாடு குலையத்தக்க, பகை மூண்டிடத்தக்க நிலை ஏற்பட்டு, கழகத் தோழர்கள் ஒருவரை ஒருவர் தூற்றவும்எதிர்க்கவும் தொடங்கினால்; அவர்களுக்குக் கண்ணுக்குக் குளிர்ச்சியான காட்சியாக இருக்கிறது! பயம் நீங்கி, மகிழ்ச்சிபிறக்கிறது. பயல்கள் பிளவுபட்டுவிட்டார்கள்; இனி அணிவகுப்புக்கு, அழிவுதான் என்று எண்ணுகிறார்கள். நமக்குள் பிளவு ஏற்படுவதிலேதான் அவர்களுக்குப் புது வலிவு கிடைக்கும் என்பதற்குக் காரணம் அதிகம் கூறத்தேவையில்லை.

சடுதியிலே உணர்ச்சிவயமாகக்கூடியவர்களை, சிறிதளவு தந்திரம் தெரிந்தவர்கள், தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பது எளிதான காரியம்!! தூண்டுபவர்களுக்குச் சுவையாகக்கூட இருக்கும்! எருதுமீதுள்ள புண்ணை காக்கை கொத்தும்போது பார், தம்பி! என்ன சுறுசுறுப்புடன், காகம் இருக்கிறது என்பது தெரியும். பழத்துண்டு வீசினால்கூடப் பயந்து பயந்து வரும், கொத்தும் அகப்பட்டவரையில் எடுத்துக்கொண்டு பறந்தோடிப்போகும். மாட்டின் மீது உள்ள புண்ணைக் கொத்தும்போது அப்படி அல்ல! மாடு வாலைச் சுழற்றி சுழற்றி அடிக்கும், தப்பித்துக்கொள்ள இப்படியும் அப்படியும் பறந்திடும், ஆனால், மீண்டும் வந்து, கொத்தும். அதற்கென்னவோ அந்தக் காரியத்தில், அத்துணை உற்சாகம், சுவை!!

அதுபோன்றே, சிலர் கிளறிவிடுவதில், குத்திவிடுவதில் மிகுந்த சுறுசுறுப்பாக இருப்பார்கள்; சுவை பெறுவார்கள்.

# அடுக்கு மொழி

நமது கழக வளர்ச்சி கண்டு அகத்தில் குடைச்சலும் முகத்தில் கடுகடுப்புங் கொண்ட யாரோ ஒருவர், தமிழில் அடுக்கு மொழி பேசிப் பேசி மக்களை மயக்கி விடுகிறீர்கள். அப்பாவி மக்களும் ஓசை நயத்தில் மயங்கி உள்ளத்தைப் பறிகொடுத்து வருகிறார்கள். அதனாலேயே உங்களால் கூட்டம் சேர்த்திட முடிகிறது. என்று ஏளனம் பேசினாராம். அதைக் கேட்டு கடுங்கோபம் கொண்ட தம்பி ஒருவர் ''அண்ணா! இவ்விதமெல்லாம் பேசுகிறார்கள்'' என்று கூறி குறைபட்டுக் கொண்டார். அதனால் என்மனம் அடுக்கு மொழி, இரட்டைக்கிளவி, எதுகை மோனை ஆகியவற்றின் எழில் பயன் மீது சென்றது.

ஓசை நயம் தேடுவதும் தருவதும் குற்றமல்ல, இசைக் கலையே ஓசைநயத்தைத் தரப்படுத்தித் தரப்படுவதுதானே! ஆனால் சிலர், ஓசை நயம் என்பது ஏதோ ஓர் இழுக்கான செயல்போலவும் அதன் பயனாக மாபெருங் கேடு மனித இனத்துக்கு ஏற்படுவது போலவும் பேசுவர். ஆராய்ந்து பார்த்தால் அவர்தம் போக்குக்கு காரணம் கோபம் என்பதும் அந்தக் கோபத்துக்குக் காரணம் கவலை என்பதும் கவலைக்குக் காரணம் அவர்கள் ஓசை நயம் காட்ட முயன்று ஏற்பட்ட தோல்வி என்பதும் விளங்கிவிடும்.

வீட்டிலே, சின்னத் தம்பி இருந்தால் அவன் எதிரில் குமல் கொண்டு இசை எழுப்பிப்பார் — சிறுவன் சிரித்து மகிழ்வான். சிட்டுப்போல பறப்பான், எனக்கு எனக்கு — என்று கெஞ்சுவான், கொடுத்தால், ஊதிப் பார்ப்பான். ஓசை நயம் கிடைக்காது, ஒவ்வொரு முயற்சியும் ஒவ்வொரு ஓசைக் கொலையாகும். தோல்வி கண்டு துயருற்று கோபமுற்று ஊதுகுழலை ஒங்கிப் பூமியில் அறைவான்.

மொழியில் ஓசை நயம்பெறவும் காட்டவும் முயன்று முடியாததால் கவலை கொள்பவர்கள், கோபம் கொண்டு, தமக்குத் துணைவர மறுக்கும் ஓசைநயம், பிறரிடம் பேரன்பு காட்டுவது கண்டு பெரும் கோபம் கொண்டு ஓசை நயம் என்பதே தவறானது, தீதானது என்று தூற்றத்தொடங்குவர்

....ஓசை நயம் தமிழில் நிரம்பக் கிடைக்கும்—ஆனால் அதை மட்டுமே நம்பி 'நடை' காட்டினால், சிறிது நாட்களில் தமிழின் இனிமை பற்றி அனைவரும் இன்று ஏற்றுக்கொண்டிருந்திடார்களே, அதற்கேகூட ஊனம் வந்துவிடும்.

ஓசை நயம், அடுக்குத் தொடர் — இரட்டைக் கிளவி— பூங்காவிலுள்ள கவின் மலர்கள் போன்றவை. தாமாக மலர வேண்டும் — மணமுள்ளவைகளைப் பதமாகப் பறித்து பக்குவமாக மாலை தொடுக்கவேண்டும் — அப்போதுதான் கவர்ச்சி கிடைக்கும். ஓசை நயத்தை எப்படியும் பெற்றுத் தீர வேண்டும் என்று முயற்சித்தாலோ காது குடைச்சல் ஏற்படுவது மட்டுமல்ல; மொழிக்கு ஏற்பட்டுள்ள பெருமதிப்பும் குன்றும்; குறையும்.

ஓசை நயத்தில் இயல்பாகவே அமைந்து, பொருள் செறிந்த பொலிவு தருபவையே தேவை. பொருளற்றுப்பொலிவற்று வலிந்து கொண்டுவருவது மொழிக்கு நாமே நம்மையும் அறியாமல் செய்துவிடும் தீங்காகும்.

# பனங்குலை

## கலைஞர்

உன் அப்பா அம்மா—இருக்கிறார்களா?''

''இல்லை. அம்மா இறந்துவிட்டாங்க! அப்பா உயிரோடே இருக்கிறாரோ இல்லியோ எனக்குத் தெரியாது. என் தாயாரு வயத்திலே நான் இருக்கும் போதே அப்பாமேலே ஒரு அபாண்டமான கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு அவரு எங்கேயோ கண்காணாச் சீமைக்கு ஓடிப்போயிட்டாராம். எனக்கு மூத்தது ஆண்பிள்ளையாம். அதுவும் ரெண்டு வயசிலே காணாமப் போயிட்டதாம். குடும்ப சுகத்து மேல விழுந்த இடியை நினைச்சு அழுது அழுது எங்கம்மாவும் கண் மூடிட்டாங்க! இப்ப நான் அனாதை!''

''அனாதை யென்று சொல்லாதே! நேற்றுவரையில் அப்படி! இன்றுமுதல் அந்த வார்த்தைக்கே இடமில்லை கமலம்! ஏறத்தாழ என் வாழ்வும் உன் வாழ்வும் ஒரே மாதிரிதான்! நீயாவது தாயின் அரவணைப்பிலே வளர்ந்தாய். அன்னையின் முகத்தைக் கண்டு, அது பொழியும் அன்பை உண்டு செழித்து வளர்ந்திருக்கிறாய். தாயின் மடியில் தந்தையின் தோளில் கிடைக்கின்ற சுகம் எப்படிப்பட்டது என்பதையே நான் அறியமாட்டேன். அவர்கள் முகத்தைக் கண்டதாகக் கூட எனக்கு ஞாபகமில்லை. அனாதை விடுதியொன்றின் கடமைக் கரங்கள்தான் என்னை வளர்த்து ஆளாக்கிவிட்டன. இன்று இரு அனாதைகளும் கூடினோம். அனாதை என்ற அடைமொழிக்கு வேலையில்லாமல் விரட்டிவிட்டோம்!''

—என்றவாறு அவன் கமலத்தைத் தழுவிக்கொண்டான். அவள்கண்கள் நீரைப் பொழிந்தன. எத்தனையோ நாட்களாக எதிர்பார்த்த இன்பம் இருவருக்கும் அப்போது கிடைத்தது.

கமலத்தின் தாயார் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றபடி இட்லிக் கடை, அங்காடி வியாபாரம், இளநீர், பனநுங்கு இப்படிப் பற்பல வியாபாரங்களைச் செய்து தன் மகளைக் காப்பாற்றிவந்தாள்.

அவள் இறந்துபோன பிறகு, கமலம் தாயாரின் தொழில்களை மேற்



கொள்ள நேரிட்டது. ''பனநுங்கு பருவமாதலால் கமலம் அந்த வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தாள். பனங் காய்களை மொத்தமாக விலைபேசி வாங்கி அவைகளை விற்று வரும் சிறிய லாபத்தைக் கொண்டு வயிறு கழுவிக்கொள்ள வேண்டிய நிலைமை.

அப்போதுதான் ஒருநாள் அவளிடம் 'பனநுங்கு' வாங்க வந்தான் வேலன். ஒருநாள் வந்தவன் மறுநாளும் வந்தான். அடிக்கடி வந்தான். அவன் வந்து 'பனநுங்கு' வாங்காவிட்டால் அவளுக்கும் அன்று வியாபாரம் நடந்ததாகவே தெரியாது. வியாபாரத்தில் பெரிய நஷ்டம் வந்ததுபோலவே முகத்தை வைத்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்புவாள். ஒருநாள் அவன் அவளைக் கேட்டான்.

''இந்த வியாபாரத்தில் என்ன லாபம் வரும்?''

அவள் விபரம் சொன்னாள்.

''நாளைமுதல் நானே பனங்குலைகள் கொண்டு வருகிறேன். வெட்டி, வியாபாரம் செய். நிறைய லாபங் கிடைக்கும்'' என்றான்.

''அதெல்லாம் வேண்டாம்'' என்று தலையசைத்துவிட்டு வீட்டுக்குத் திரும்பிச்சென்றாள் கமலம்.

மறுநாள், நாலைந்து பனங்குலைகளைத் தூக்கிக் கொண்டு வேலன் வந்தான். ''ஏது இவைகள்?'' என்று கமலம் கேட்டாள். ''நானே பனைமரத்தில் ஏறி வெட்டிக்கொண்டு வந்தேன்'' என்று பூரிப்போடு பதில் கூறி அவளது முகத்தையே நோக்கிக்கொண்டு நின்றான்.

''உங்களுக்குச் சொந்தமான மரமா?'' என்று அவள் கேட்டாள்.

''புறம்போக்கிலே இருக்கிற மரம் யாருக்குச் சொந்தம்?எல்லோருக்கும் சொந்தந்தானே!'' என்று அவன் கூறிமுடிப்பதற்குள்,

''அடேய்! திருட்டுப் பயலே! யாருடைய மரத்திலேடா திருடுகிறாய்? என்னை யாருன்னு நினைச்சே?'' என்றவாறு ஒரு முரட்டு மனிதன் வேலனின் தலையில் பெரிய தடியொன்றால் தாக்கினான்.

வேலன் சுருண்டு வீழ்ந்தான். கமலம் வேலனைக் கவனிக்க ஓடினாள்.

முரடன் அங்கு கிடந்த பனங்குலைகளையெல்லாம் தூக்கிக் கொண்டு, ''குட்டி ஆசைக்குப் பயல் பனங்காய் திருடுகிறானா? அதுவும் என்கிட்ட?'' என்று கேலி செய்தவாறு அதை விட்டு நடந்தான்.

நடந்தவன் நின்றான்.

கமலத்தின் பரபரப்பைக் கவனித்தான். அங்குமிங்கும் ஓடி அவள் வேலனின் முகத்தில் தண்ணீர் தெளிப்பதையும், முந்தானையால் விசிறுவதையும் கண்டான். முரடன் முகத்தில் சபலக்குறி தலைகாட்டியது. கமலத்திடம் திரும்பி வந்தான்.

''இந்தா குட்டி! பனங்காய் வேணும்னா என்னைக் கேட்டா தரமாட்டேன்? இந்த மாதிரி பயலுகளை நம்பலாமா? இந்தா எல்லாத்தியும் வச்சுக்க! உனக்கு ஏன் இள வயசிலே இந்த வியாபாரம்! என்னைக் கேட்டிருந்தா நம்ப நாடகக் கம்பெனியிலே அயர்ன் ஸ்த்ரீ பார்ட்டா ஆக்கியிருப்பேனே..'' என்றவாறு முரடன் பல் இளித்தான்.

''சரிதான் போய்யா, வேலையைப் பார்த்துகிட்டு!'' என்றவாறு வேலனை கவனிப்பதில் முழுமூச்சாக ஈடுபட்டாள் கமலம்.

முரடன் தலையை அசைத்தவாறு ஏதோ முடிவுடன் அதை விட்டகன்றான்.

முருகானந்தா மோகன கான சபாவின் உரிமையாளர் மோதகவிநாயகம் பிள்ளைதான் அந்த முரட்டு மனிதன் என்பது கமலத்துக்குத் தெரியாமல் இல்லை.

அவர் ஊர் சொத்தைத் திருடி வாயில்போட்டுக்கொள்ளும் பெருச்சாளி என்பதும் அவளுக்குத் தெரியும். புறம்போக்கு நிலத்தில் உள்ள பனைமரங்களுக்கு அவரே பாத்யதை கொண்டாடி வருகிறார் என்பது மட்டுமே அவளுக்குத் தெரியும். விரைவில் கமலத்துக்கும் தானே பாத்யதை கொண்டாடப் போகிறார் என்பது யாருக்கும் தெரியாது.

அடிபட்டு வீழ்ந்த வேலனுங்கு மயக்கம் தெளிந்ததும் அவனைத் தன் குடிசைக்கு அழைத்துச் சென்றாள் கமலம். தேவையான சிகிச்சைகளுக்குப் பிறகு அவன், அவளுக்கு நன்றி தெரிவித்துவிட்டுப் புறப்படும்போது கமலம் விடையளிக்க மறுத்துவிட்டாள். அவனும் காரணம் புரிந்துகொண்டான்

இருவரும் தங்கள் பிறப்பு வளர்ப்புகளைப் பற்றிப்பேசிக்கொண்டார்கள்.

இருவருமே அனாதைகளாய் சந்தித்தார்கள். இருவரையும் விட்டு அனாதைப்பட்டம் ஓடிவிட்டது. ஆரத்தழுவினர். ஆனந்தங் கொண்டனர். அன்றிரவு இன்ப கீதம் பாடி மெல்ல மெல்ல நகர்ந்தது.

அவர்கள் தடுத்தும் கேளாமல் சேவல் கூவிற்று. சேவல் கூவாவிட்டால் நான் உதித்தே தீருவேன் என்றது கதிர். வாழ்விலே புதிய களிப்பு!உற்சாகம்! தனியொரு பெண்ணின் பெருமூச்சுக்களை எதிரொலித்துக்கொண்டிருந்த அந்தக் குடிசை காதல் பாடல்களை எதிரொலித்து மகிழ்ந்தது.

ஒரு நாளிரவு – பல நாட்களுக்குப் பிறகு!

நடுநிசி. காதலர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர். கதவு தட்டப்பட்டது. கமலம் சென்று திறந்தாள். வாட்டசாட்டமாக வளர்ந்து, ஆனால் வயதேறிக் காணப்படும் வெண்தாடிக் கிழவன் ஒருவன் எதிரே நின்றான்.

''யார் நீங்கள்?'' கமலம் கேட்டாள். அதற்குள் வேலனும் எழுந்து வந்தான்.

''என்னை யாரென்று கேட்கிறாய்? மகளே! கமலம்! என்னைத் தெரியவில்லையா உனக்கு? தெரியாதுதான். இந்தப் பாவியைத் தெரியாதுதான். வயிறும் வாயுமாக உன் தாய் மீனாட்சியைத் தனியே விட்டுவிட்டு ஓடிய இந்தப் படுபாதகனை உனக்குத் தெரியாதுதான்! அம்மா மகளே! நான்தானம்மா உன் அப்பன் அய்யாச்சாமி!''

''ஆ, அப்பா! என் அப்பா!..''

கமலம் கதறினாள். கிழவரைக் கட்டிக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள்.

''இதுதான் உன் அண்ணன் வேலனா? – வேலா! என் ஆசை மகனே! அருமந்தச் செல்வனே! உன்னை இரண்டு வயதிலேயே நானும் என் மீனாட்சியும் இழந்துவிட்டு வடித்த கண்ணீர் கொஞ்சமா அப்பா தம்பீ! இதுவரை



எப்படியடா வாழ்ந்தாய்? உன் தங்கை கமலத்தை எப்போதடா பார்த்தாய்? தலைமறைவாகப் போலீசுக்குப் பயந்து திரிந்து கொண்டிருந்த நான் நேற்று வந்து நீ வளர்ந்த அனாதை விடுதியிலே விசாரித்தேன். அவர்கள் விபரமெல்லாம் சொன்னார்கள். உன்னைப் பறிகொடுத்ததாக நினைத்துக்கொண்டிருந்தேன். பிறகு என் நண்பன் ஒருவன் சொன்னான்; நீ அனாதை விடுதியில் வளர்வதாக! அங்கு போனேன். நீ உயிரோடு இருப்பதையும் வளமாக வளர்ந்திருப்பதையும் அறிந்து கொண்டேன். குழந்தைப் பருவத்தில் உன்னை யாரடா திருடியது? ஞாபகமிருக்கிறதா மகனே! திருடியவர்கள் என் விரோதிகளாம். அவர்கள் போலீசுக்குப் பயந்து உன்னை நடுப் பாதையிலே போட்டு விட்டுப் போய்விட்டார்களாம். அதன் பிறகே அனாதை இல்லம் உன்னை எடுத்து வளர்த்ததாம். ஆகா..என் மகன் எவ்வளவு பெரியவனாகிவிட்டான்–தம்பீ! நீ எப்படி உன் தங்கையைத் தேடிப் பிடித்து இங்கு வந்தாய்?''

கிழவர் பேசிக்கொண்டேயிருந்தார்; பூரிப்பு தாங்காமல்! – வேலன் ''அய்யோ! அப்பா!'' என்று கத்தினான்.

அவ்வளவுதான், எங்கேயோ ஓட ஆரம்பித்தான்.
ஓடினான்; ஓடினான் – இருளில் ஓடி மறைந்தான்.
கமலம் பிரக்ஞையற்றுக் கீழே விழுந்தாள்.
''கமலம்! கமலம்!!'' என்று கிழவர் கூப்பிட்டார்.

அவளைத் தூக்கித் தன் மடியில் வைத்துக் கொண்டார். இறுக அணைத்துக் கொண்டார். அவள் கன்னங்களில் மாறி மாறி முத்தமிட்டார். இதழ்களை இதழ்களால் பற்றி இழுத்தார். ஏதோ ஒரு உணர்வு கிழவருக்கு!

கமலம், போய்விட்டாள். கிழவர், விரக்தியுடன் எழுந்தார்; அவர் மனம் பேசிற்று.

''சே! நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்று! அண்ணன் தங்கையென்று அபாண்டம் சுமத்தி இருவரையும் பிரித்துவிட்டால் அவன் ஓடிவிடுவான் – இவளைத் தட்டிக்கொண்டு போகலாம் எனத் திட்டமிட்டேன். வேஷம் பலித்தது; ஆனால் வெள்ளாட்டுக் குட்டி கிட்டவில்லையே!''

கிழவர் பெருமூச்சுடன் தாடி மீசைகளைக் களைந்தார். முரட்டு மோதக நாயகம்பிள்ளையாக அந்தக் குடிசையை விட்டு வெளியேறினார். அவர் உரிமை கொண்டாடும் புறம்போக்கு நிலத்தின் வழியே வீடு திரும்பினார். ஒரு மரத்திலிருந்து ஏதோ தொப்பென்று வீழ்ந்தது.

பனங்குலையை யாரோ வெட்டுகிறார்கள் என்று ''யாரடா திருட்டுப் பயலே'' என்று கர்ச்சித்தவாறு மரத்தடிக்குப் போனார். மரத்திலிருந்து விழுந்தது; பனங்குலையல்ல! –

வீழ்ந்தது வேலன்!

தீக்குச்சியைக் கிழித்து உற்றுப் பார்த்தார். தலை சிதறிவிட்டது, குலை சிதறுவதுபோல!

குடும்பத்தைச் சிதற அடித்த அந்தக் குணாளர் எந்தவித சலனமும் உள்ளத்தில் மோதாமல் சாதாரணமாக வீட்டுக்குப் போய் நிம்மதியாகத் தூங்க ஆரம்பித்தார்....

இப்படியும் பல பிறவிகள் உண்டு உலகத்தில்!

---

வாழ்த்துக்கள்



# முருகேசன் எண்டர்பிரைசஸ்

★

பிலிம் டிஸ்ட்ரிபியூட்டர்கள்
சாஸ்திரிரோடு, கோவை-9

---

எங்கள் வாடிக்கையாளர்களுக்கு
இதயங்கனிந்த.
பொங்கல் நல் வாழ்த்துக்கள்

# கே. எம். சிட்பண்ட்ஸ்

16-115 தேவேந்திர வீதி
கோவை-1

★

## சுவையகம்

உயர்தரமான மாமிச உணவு
வகைகளுக்கு சிறந்த இடம்
17-25. என். எச். ரோடு, கோவை-1.

---

எங்கள் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த
அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த
பொங்கல் வாழ்த்துக்கள்

ஸ்தாபிதம் 1948 தொலைபேசி 23961

# ஸ்ரீ கிருஷ்ண பவான்

★

(உயர்தர சிற்றுண்டி சாலை)
பெரிய கடைத்தெரு, கோயமுத்தூர்.

நகரிலே நல்லதோர் இனிப்பகம் எனப் பெயர் பெற்றது

## ஸ்ரீ கிருஷ்ண ஸ்வீட்ஸ் ஹவுஸ்

தொலைபேசி: 24630
ராஜா தெரு, கோவை
இனிப்பு வகைகள்
தரமுள்ள நெய்யினால் தயாரிக்கப்பட்டவை
காரத்தில் சிறந்தது கிருஷ்ணா காபி பவுடர்

---

அன்பளிப்பு.

# B. K. R.
# பெர்ப்யூமரி

3 ராமர்கோயில் வீதி
ராம்நகர், கோயமுத்தூர்
மலர்களின் இனிய மணத்திற்கு

B. K.R. தாழம்பூ பத்திகள்
,, மரிகொழுந்து பத்திகள்
,, முல்லைப்பூ பத்திகள்
,, லெவண்டர் பத்திகள்
,, கதம்பம் பத்திகள்
,, ரோஜாபூ பத்திகள்
,, சுகந்த பிரியா பத்திகள்

நிசப்தமான ஓட்டம்   நீடித்த உழைப்பு

**லக்ஷ்மி அரிசி அரைக்கும் ஆட்டுக்கல்**

( ஊறவைத்த தானியங்கள் )

- வீடு
- ஹோட்டல்
- ஹாஸ்டல்
- கான்டீன்
- கூலி அரைவை



முதலியவைகளுக்கேற்ற பல சைஸ்களில் தயார் செய்கிறோம்

போன்: 31689 & 32179

தயாரிப்பாளர் :

**ஸ்ரீ லக்ஷ்மி இண்டஸ்ட்ரீஸ்**

25, தேவாங்க ஹைஸ்கூல் ரோடு,

கோயமுத்தூர் - 641001

**KALA wishes Happy and Prosperous Pongal**
**Wear & Enjoy Fashionable**
**KALA handloom SAREES**

KALA SAREES
KALA PRODUCT
S. INDIA

*Quality Creations from K A L A*
*" KALA " SAREES*
*" KALA TEX " SAREES (9 Yards)*
*" KALACO " Printed Sarees*
*(Handlooms)*

*KALA SHOW ROOM*

**KALA FABRICS**
*Kala Handloom House*
*Sukravarpet Corner*
**COIMBATORE**

Phone: 22439   Grams: "KALA FABRIC"

போன்: Showroom: 33215   தந்தி: Lamp House
Res. 31933

# சாரதா எல்க்ட்ரிகல்ஸ்

**Distributors For: GEC. A.E.I.**
**163, அவினாசிரோடு, கோயமுத்தூர்-18**
**H. O. குன்னூர்**
**Authorised Dealers for Philips Lights**

கிளை :

# G. E. C.

★

ஹவுஸ்

147, அவினாசி ரோடு

கோவை—18

சுஜாதா
COMFORT
1977

# சுஜாதா

அன்பே மிகுந்து அறனே வளர்ந்து அறிவே நிறைந்து பொலிய
என்பே கனிந்து எழிலே வழிந்து எளியோர் யாவரும் விரும்ப
துன்பே தொலைத்து தொலைதூர துயரேமடித்து துணையற்றோர் தமக்குத் துணையாய்
தென்போடு வந்து திறனேயளிக்கும் "சுஜாதா"



உங்கள் தேவையை பூர்த்தி செய்ய நாடுவீர்

★ ரூ. 1666/- + வரி & தீர்வை
★ 1 லிட்டருக்கு 70 கிலோமீட்டர்

**தி விஜயலட்சுமி இன்ஜினியரிங்ஸ்,**
கோயமுத்தூர் - 641008 தமிழ்நாடு. தொலைபேசி 25557 & 24646

★ ரூ. 1999/- + வரி & தீர்வை
★ 1 லிட்டருக்கு 60 கிலோமீட்டர்

எங்கள்
மனங்கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!

★

# சண்முகா தியேட்டர்

கோயமுத்தூர்—641002

தொலைபேசி:

அலுவலகம்: 33226

இல்லம்: 33599

தரமான துணிகளுக்கு
மூன்று கடைகள்

# ராமு அண்டு கோ

ஃ ஆர். எஸ். புரம்

ஃ அவினசி ரோடு

ஃ கிராஸ்கட் ரோடு

★

கோயமுத்தூர்

தொலை பேசிகள்: 24397, 25124 25889.

★ பொங்குக பொங்கல்! ★ பொங்கலோ பொங்கல்!

★

# ஸ்ரீவிக்னேஸ்வரர் இண்டஸ்ட்ரீஸ்

286, அவினசிரோடு கோயமுத்தூர் 641037

தந்தி: JETPUMP தொலைபேசி: 32141 24332

## சினிமாரசிகர்களுக்கு எங்கள் இதயம்கனிந்த

# பொங்கல் வாழ்த்துக்கள்!

விரைவில் வருகிறது! மெரீனா மூவிஸ் தயாரிக்கும்



# எல்லாம் அவளே!

இப்பொழுது வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது:

அஞ்சுகம் பிக்சர்ஸ் **பூக்காரி** ★ மெரீனா மூவிஸ் **சமையற்காரன்** ★ அஞ்சுகம் பிக்சர்ஸ் **அணையா விளக்கு**

கோவை நீலகிரி ஜில்லாக்களுக்கு:

## சந்திரபிரபா பிரதர்ஸ்

259 பெரியகடை வீதி: கோயமுத்தூர் — 641001

தொலைபேசி: 36222 தந்தி: Films த. பெ. 169

WITH

BEST COMPLEMENTS

FROM

★

# Messrs.

# Ganapathy Engineering Manufacturers (P) Ltd.,

GANAPATHY POST

COIMBATORE-6.



# கல்வெட்டில் அருந்தமிழ்ச் சொற்கள்!

**டாக்டர் நாவலர்**

நம் நாட்டின பண்டைய வரலாற்றுக் குறிப்புக்களை அவை சிறுசிறு பகுதிகளாக ஆங்காங்கே சிதறிக் கிடந்தாலும், அவற்றையெல்லாம் சிறப்பாகவும் செம்மையாகவும் அறிந்துகொள்ள, பெரிதும் பயன்படுபவை கல்வெட்டுக்களாகும்.

இந்தியாவில் வேறு எந்தப் பகுதியைக் காட்டிலும், தமிழகத்தில்தான் ஏராளமான கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. தமிழகம் முழுவதும் சற்றேற ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டுள்ள கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என்று தொல்பொருள் ஆராய்ச்சி வல்லுநர்களும், வரலாற்று அறிஞர்களும் அறுதியிட்டுக் கூறியுள்ளனர். அவற்றில் மிகக் குறைந்த அளவு கல்வெட்டுக்கள்தாம் பதிவு செய்யப்பட்டுள்ளன; அவற்றிலும் மிகக் குறைந்த அளவுள்ளவைதாம் நூல்வடிவில் காட்டப்பெற்றுள்ளன. கி. மு. மூன்றும் நூற்றுண்டிலிருந்து கி. பி. 19ஆம் நூற்றுண்டு வரையிலும் உள்ள கால அளவில் உருவாக்கப்பட்ட கல்வெட்டுக்களாக அவையெல்லாம் அமைந்திருக்கின்றன. இன்னமும் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்தும், புதைந்தும் கிடக்கும் கல்வெட்டுக்கள் பல்லாயிரக்கணக்கில் இருக்கின்றன.



தமிழகத்தின் பண்டைய அரசுகள், அரசர்கள், படைத் தலைவர்கள், வீரர்கள், போர்க்களங்கள், வணிகர்கள், வாணிகம், ஆட்சிமுறைகள், வரிவிதிப்பு வகைகள், புலவர்கள், நாடுகள், நகரங்கள், ஊர்கள், கோயில்கள், அவற்றின் உடைமைகள், நிலபுலன்கள், அறச்செயல்கள், மக்களின் பழக்க வழக்கங்கள், ஆடை அணிவகைகள், பண்பாடு, நாகரிகம் போன்றவற்றைப் பற்றிய சிறப்புக்குரிய குறிப்புக்கள் ஆங்காங்குள்ள கல்வெட்டுக்களில் சிற்சில பகுதிகளாகக் காணப்படுகின்றன.

நீதிமன்றங்களில் தமிழைப் பயன்படுத்தும் முயற்சியினை மேற்கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், நமக்குப் பெரிதும் பயன்படக்கூடிய நல்ல அருந்தமிழ்ச் சொற்கள் சிலபல கல்வெட்டுச் செய்திகளில் காணப்படுகின்றன.

வடமொழியிலும், பாலி மொழியிலும், கிரந்த மொழியிலும், தெலுங்கு மொழியிலும், உருது மொழியிலும், மணிப்பிரவாளத்திலும், கொச்சைத் தமிழிலும் சில கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன என்றாலும், நல்ல அருந்தமிழ்ச்சொற்களைக் கொண்டஅருமையான கல்வெட்டுக்கள் பலவும் காணப்படவே செய்கின்றன.

கல்வெட்டுக்களில் சுவையும், சிறப்பும் தரும் விதத்தில் அமைந்துள்ள அருஞ்சொற்கள் சிலவற்றைப் பார்ப்பது, பெருமிதம் பயப்பதாக இருக்கும்.

காஞ்சிபுரம் வைகுண்ட பெருமாள் கோவிலின் உள் பக்கத்துச் சுவரில், ஒரு அழகான கல்வெட்டு தென்படுகிறது. ஒருசிலர் ஒரு நிலத்தை அந்தக் கோவிலுக்கு விற்கிறார்கள். அதைப் பற்றிய செய்தியை அந்தக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

> இந்நாற் பாங் கெல்லைக்கு,
> நடுவுட் பட்ட, விளை
> நிலமும், புஞ்சை நிலமும்,
> காடும் மேடும், ஏரியும்
> கரையும், ஊர் நத்தமும்,
> விற்றுக் கொடுத்து
> இதற்குக் கிரயமாக
> எம்மில் இசைந்த விலைப்
> பொருள், ஆவணக்களரியில்
> கிழி கைச் செலக்
> கொண்டு, விற்று விலையாவணம்
> செய்து கொடுத்தோம்.

இதில் சில தொடர்களை மட்டும் விளக்கிக் காட்டினால்; செய்தியின் கருப்பொருள் தெளிவாகப் புரிந்துவிடும்.

நாற்பாற்கு எல்லைக்கு நடுவுட்பட்ட—நான்கு பக்கத்து எல்லைக்கு நடுவிலே இருக்கும்; விளைநிலம்—நஞ்சை நிலம்; எம்மில் இசைந்த விலைப்பொருள்—எங்கள் இருசாராரும் ஒப்புக்கொண்ட விலைக்குரிய தொகை; ஆவணக்களரியில்—ஓலைப் பதிவு அலுவலகத்தில்; (அதாவது சப் ரிஜிஸ்திரார் ஆபீஸில்); கிழி கைச்செலக்கொண்டு—நிலம் வாங்குகிறவர்கள் எங்கள் கையில் பணப்பையைச் செலுத்த நாங்கள் பெற்றுக்கொண்டு; கிழி—பணப்பை, விற்று விலையாவணம் செய்து கொடுத்தோம்—விற்பனை விலைக்கான ஆவணம் எழுதிக்கொடுத்தோம்; (அதாவது கிரய தஸ்தாவேஜு எழுதிக் கொடுத்தோம்).

இந்தக் கல்வெட்டில் காணப்படும் நாற்பாங்கு எல்லை நடுவுட்பட்ட, விளைநிலம், கிரயம், எம்மில் இசைந்த விலை, ஆவணக்களரி, கிழி, கைச்செல, விலையாவணம் போன்ற சொற்களும்சொற்றொடர்களும் அருமை வாய்ந்தவையாகும்.

'மடப்புறம்' என்ற சொல் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது. 'மடப்புறம்' என்ற சொல், கோவிலைச் சேர்ந்த திருமடத்தின் செலவுக்காகத் தனியே விடப்பட்ட நிலத்தைக் குறிப்பதாகும். மடப்புறமாக விற்றுக்கொடுத்த நிலத்தைப் பற்றிய செய்தி ஒன்று ஒரு கல்வெட்டில் தென்படுகின்றது.

> "இவ்வாழ் வார்க்கு மடப்புறமாக
> விற்றுக் கொடுத்தோம்
> இந்நிலம் கண்காணி செய்வார்
> கைக்கொண்டு காடு
> வெட்டியும், விழல் வெட்டியும்
> உசர்வன உயர்த்தியும்
> குழிப்பன குழித்தும் திருத்தித்
> தாம் கொண்டும் அமுது
> செய்விக்கக் கடவீர்களாகவும்."

இதில் காணப் டும் அருஞ்சொற்கள் பற்றிய பொருள் விளக்கம் : மடப்புறமாக —மடத்தின் செலவுக்காகத் தனியே விடப்பட்ட நிலமாக; கண்காணி செய்வார்—மேற்பார்வையிடுபவர்கள்; கைக்கொண்டு—கைப்பற்றி; உசர்வன உயர்த்தியும்—மேடாக்க வேண்டியவற்றை மேடாக்கியும்; குழிப்பன குழித்தும்—பள்ளமாக்க வேண்டிய வற்றைப் பள்ளமாக்கியும்; அமுது செய்விக்கக் கடவீர்களாகவும்—சாப்பாடு போடக் கடமைப்பட்டவர்கள் ஆவீர்களாக.

இப்படிப்பட்ட ஆவணங்களான கல்வெட்டுக்களின் இறுதிப் பகுதியில், "இப்படிக்குத் தேவபெருமாள் நம்பி எழுத்து 'கோபுரநம்பி எழுத்து,' "வாளப்பட்டன் எழுத்து" என்பதுபோல சொற்றொடர்கள் காணப்படுகின்றன. எழுத்து



# பொங்கல் பரிசு

**கவிஞரேறு வாணிதாசன்**

அவள்: செங்கதிர் வந்தது !
குங்குமப் பொட்டுப்போல்
எங்கெங்கும் பொன்னொளி அத்தான்!—தைத்
திங்களும் வந்ததே அத்தான் !

அவன்: நீர் நிலை பூத்தது !
நெல்வயல் காய்த்தது !
ஊரெல்லாம் பொங்கலோ பொங்கல் ! — நாம்
உண்டு மகிழ்வோம் பாற்பொங்கல் !

அவள்: குன்றம் மணக்குது !
தென்றல் அடிக்குது !
மன்கதிர் வாழ்த்துவோம் அத்தான் ! — ஊர்
மருங்கிடை ஆடுவோம் அத்தான் !

அவன்: அருங்கதிர், தைக்கதிர்
அலர்ந்தது விண்ணிடை !
வருங்கதிர் வாழ்த்துவோம் முன்னர் ! — குன்ற
மருங்கிடை ஆடுவோம் பின்னர் !

அவள்: களிவண் டிசைக்குதே !
காட்டா றழைக்குதே !
ஒளிப்புனல் ஆடுவோம் அத்தான்—பொங்கற்
களிப்பினிற் பாடுவோம் அத்தான் !

அவன்: தென்னவர் தைப்பொங்கல்
முன்னர்நாம் வாழ்த்துவோம் !
கன்னற் சுவைகண்ட பின்னே — வாய்க்
காலிடை ஆடுவோம் கண்ணே !

அவள்: மாப்பிள்ளை மாருண்ண
மாங்குயில் கூவுது !
தோப்புப் பழுத்ததே அத்தான்! -கொய்யாத்
தோப்புப் பழுத்ததே அத்தான் !

அவன்: கையோடு கைகோத்துத்
தைப்பொங்கல் வாழ்த்துவோம் !
நெய்ப்பொங்கல் உண்டபின் பெண்ணே—நாம்
கொய்யாப் பழமுண்போம் கண்ணே !

---

என்பது இந்த இடங்களிலெல்லாம் கையெழுத்தைக் குறிக்கின்றது.

நெட்டெழுத்துப் போட்டுச் சாட்சிக் கையெழுத்துப் போடுகிறவர்கள் "இவை என் எழுத்து. இப்படி அறிவேன்" என்று எழுதுகிறார்கள். ஒருவர் சொல்ல இன்னொருவர் எழுதும்போது, "திருச்சிற்றம்பலமுடையான் எழுதுக என்று எழுதினேன் உமைபங்கனேன். இவை என் எழுத்து" என்று வரைகிறார்கள்.

நில விற்பனை செய்வது, நிலக்கொடை வழங்குவது, இறையிலி நிலம் ஏற்படுத்துவது, புறம்போக்கு நிலம் அமைப்பது போன்ற செய்திகள் ஏராளமாகக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. கல்வெட்டில் "இந்நிலத்துக்குப் பழம்படி உடைய உரிமைகளும், உடைமைகளும் ஆக இத்தனையும்" என்று வருகின்றது. இங்கே பழம்படி' என்பது தொன்றுதொட்டு இருந்து வரும் 'பழக்கம்போல' என்று பொருள்படும். 'உரிமைகளும் உடைமைகளும்' என்பது 'Right and Properties' என்பதைக் குறிக்கும். "பழம்படி நீர் இறைக்கவும், பாயவும், வாரவும் உடைய உரிமைகளும்" என்று ஒரு கல்வெட்டில் தென்படுகின்றது. இங்கே 'வாரவும்'என்ற சொல் 'நீர் வரத்துக் கால உரிமையைக் குறிக்கும் சொல்லாகும்.

நிலக்கொடை பற்றிய செய்தியை வெளிப்படுத்துகின்ற கல்வெட்டு ஒன்று, "நாற்பாங் கெல்லையும், மேல் நோக்கிய மரமும், கீழ் நோக்கிய கிணறும், மான்படு காடும், தேன்படு வரையும், மீன்படு சுனையும்.. திருவிளக்குக்கும், திருமேனி சாத்துப்படிக்கும், திருப்பணிக்கும் உடலாகக் கரபுரமுடைய தம்பிரானார்க்காகச் செம்பிலும், சிலையிலும் வெட்டிக் கொடுத்தேன்" என்று குறிப்பிடுகின்றது.



கரபுரமுடைய கடவுளர் கோயிலுக்கு நிலக்கொடை வழங்கப்படுகின்றது. கொடையாக வழங்கப்பட்ட நிலத்தின் மூலம் கிடைக்கின்ற வருமானத்தைக் கொண்டு, கோவிலின் திருவிளக்குகளை எரியச் செய்யவும், கடவுளர் சிலைகளுக்கு அணிமணிமாலைகள் சாத்துப்படி செய்யவும், கட்டடத் திருப்பணி செய்யவும் வேண்டும் என்பது கொடை வழங்கியவரின் எண்ணமாகும். அவர் இந்தச் செய்தியைச் செப்புத் தகட்டிலும்கற்சிலைப்படிவத்திலும் வெட்டிக் கொடுத்துள்ளதாகக் கூறுகிறார். கொடையாக வழங்கப்படும் நிலத்தின் நான்கு பக்கங்களின் எல்லைக்கு அப்பால் விளங்கும் நிலப்பகுதிகளைக் கூறிவிட்டு, இந்நான்கு எல்லைக்கு உட்பட்ட நிலம் எவ்வகைப்பட்டது என்பதையும்கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

மேல்நோக்கிய மரமும்—மேலே நோக்கி வளர்ந்துள்ள மரங்களும்; கீழ்நோக்கிய கிணறும்—கீழே நோக்கி ஆழ்ந்து கிடக்கும் கிணறுகளும்; மான்படுகாடும்—மான்கள் நிறைந்த காடும், தேன்படுவரையும்—தேன் அடைகள் நிறைந்த மலையும்; மீன்படு சுனையும்— மீன்கள் நிறைந்த நீர்ச்சுனையும். மரம்—கிணறு—காடு—வரை—சுனை ஆகிய சொற்கள் அழகான அடைமொழிகளோடு காணப்படுவது படிக்கப்படிக்க இன்பம் பயப்பதாகும்.

மேல்நோக்கிய மரம்—கீழ்நோக்கிய கிணறு—மான்படு காடு—தேன்படுவரை— மீன்படுசுனை — திருவிளக்கு—திருமேனிச் சாத்துப்படி—திருப்பணி—உடலாக—செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொடுத்தல் போன்ற சொற்றொடர்களில் காணப்படும் அருஞ்சொற்கள் மனதிற்கு மகிழ்வு ஊட்டுவனவாகும்.

நிலக்கொடை வழங்கும்போது, வழங்குபவர் தம் கையில் நீரை வார்த்து நிலத்தை உரியவர்க்குக் கொடுக்கும் பழக்கம் இருந்து வந்தது என்பதை ஒரு கல்வெட்டு குறிப்பிடுகின்றது. "அமுது படிக்கும், சாத்துப்படிக்கும் உடலாகத் திருக்கை மலரில் நீர் வார்த்துக் கொடுத்த நிலமாவது" என்று காணப்படுகின்றது.

'உடலாக' என்ற சொல், 'முதற் பொருளாக' அல்லது 'மூலதனமாக' என்று பொருள்படும். 'Corpus of the Endowmnent fund' (அறப்படுத்தும்நிதியின் உடற்கூறு) என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் கூற்றோடு ஒப்பிட்டுப் பார்த்

தால், 'உடல்' என்ற சொல் Corpus என்ற சொல்லுக்கு ஈடாக எவ்வளவு பொருத்தமாக அமைந்திருக்கிறது என்பதைக் காணலாம்.

நிலத்தின் அமைப்பைக் கூறவரும் கல்வெட்டு ஒன்று: ''இந்நாற்பேரெல்லைக்கும் நடுவுட்பட்ட நீர் நிலமும்.. உடும்பொடு ஆமை தவழ்ந்தது எவ்வகைப்பட்ட நிலமும்'' என்று குறிப்பிடுகின்றது. உடும்பு மரத்திலும், மேட்டு நிலத்திலும் தவழ்வது. ஆமை நீர்பாங்குகளில் தவழ்வது. ஆக ''மரங்கள், மேடுகள், நீர்நிலைகள் உட்பட்ட எல்லா நிலப் பகுதியும்'' என்ற பொருள் தோன்றும்படி ''உடும்பொடு ஆமை தவழ்ந்தது எவ்வகைப்பட்ட நிலமும்'' என்று கல்வெட்டு கூறுகின்றது. இந்தச் சொற்றொடரும் நினைந்து மகிழ்வுறத் தக்கதாகும்.

இந்தக்காலத்தில் ஆவணங்களில் (தஸ்தாவேஜுக்களில்) ''புத்திர பௌத்திர பாரம்பரியமாய் என்று எழுதப்படுவதைக் காண்கின்றோம். இந்தக் கருத்தைக் கல்வெட்டுக்கள் 'இவர்களும் இவர் வழியிலுள்ளாரும்'' என்றும், ''இப்படி இவன் மக்கள் மக்கள் நுகர்ந்து வருவானாகவும்'' என்றும் குறிப்பிடுகின்றன.

நிலத்தை மற்றவர்களுக்கு மாற்றிக் கொடுக்கக்கூடாது என்ற கருத்தைக் 'குடிநீங்கா' என்று கல்வெட்டுச் சொற்றொடர் குறிக்கின்றது. ''இவன் மக்கள் மக்கள் குடிநீங்கா தேவதானமாக நுகர்ந்து வருவானாகவும்'' என்று ஒரு கல்வெட்டு கூறுகின்றது. 'குடிநீங்கா' என்ற சொற்றொடர்தான் ஆங்கிலத்தில், ' Inaliedable ' என்று பொருள்கொள்ளப் படுகின்றது.

நிலம் வரியில்லாததாக இருந்தால் அதனை 'இறையிலி' (Tax free) என்று கல்வெட்டு உரைக்கின்றது. வரியில்லாததாக்கிப் பெற்றுக்கொள்ளுகின்ற நிலத்தை ''இறையிழித்துக் கொண்ட நிலம்'' என்று குறிப்பிடுவர்.

''நிலக்கிரய தஸ்தாவேஜில் போட்ட கைெயழுத்து'' என்று இந்தக் காலத்தில் எழுதுவதைப் பார்க்கிறோம். இதனை கல்வெட்டுக்கள் ''நிலவிலை ஆவணக் கைெயழுத்து'' என்று அழகாக அருந்தமிழ்ச் சொற்களால் கூறுகின்றன.

''செக்பந்திக்குட்பட்ட நிலம் கூடுதல் குறைச்சலாக இருந்தாலும்'' என்று இந்தக் காலத்தில் சொல்லப்படுவதை 'நான்கெல்லையுள் நடுவுட்பட்ட நிலம் மிகுதிக் குறைவு உள்ளடங்க'' என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

முன்காலத்தில் கோவிலுக்கு, விளக்கு வைப்பவர்கள், ஆட்டுப்பாலில் எடுக்கும் நெய்யினால் விளக்கு எரிக்கவேண்டி, ஆடுகளைக் கோவிலுக்கு எழுதிவைப்பதுண்டு. மாமண்டூர் பாறைக் குகைக் கோவிலில், இவ்வகையான கல்வெட்டு ஒன்று காணப்படுகின்றது. ''விளக்குக்கு வைத்த சாவா மூவாப் பேராடு நாற்பத்தஞ்சரை .. இவ்வாட்டுக்குத் தீங்கு நினைத்தான் கங்கையிடைக் குமரியிடைச் செய்த பாவம்கொள்வான்'' என்றும், ''சாவாமூவாப் பேராடு—சாகாத கிழமாய் விடாத பெரிய ஆடுகள்'' என்றும் சொல்லப்படுகின்றன. 'பேராடு நாற்பத்தஞ்சரை' என்ற சொற்றொடரில் உள்ள 'அரை' என்ற சொல் 'சிறிய குட்டி ஆடு' என்பதை உணர்த்துகிறது. ஆடுகள் குட்டி போட்டுக் கொண்டே இருக்குமாதலாலும், அவையெல்லாம் அடியோடு செத்துவிட்டன என்றோ, எல்லாம் கிழமாக ஆய்விட்டன என்றோ சொல்ல முடியாதகையாலும் 'சாவா மூவாப் பேராடுகள்' என்று குறிப்பிடப்பட்டன.

கோவில்களிலுள்ள விளக்குகள் 'பாவை விளக்கு, 'நந்தா விளக்கு', 'திருவிளக்கு', 'நெய் விளக்கு', 'சர விளக்கு' 'சுடர் விளக்கு', 'பன்முக விளக்கு', 'குத்து விளக்கு' 'அன்ன விளக்கு', என்று பல பெயரால் குறிப்பிடப்படுகின்றன.

சேலம் சுகவனேசுவரர் கோவிலில் ஒரு கல்வெட்டு தென்படுகின்றது : ''கிளிவண்ணமுடைய பெருமானடிகளுக்குத் திருவிழாவுக்கும், மாசிமகத்துக்குமாக .. இருபத்தைந்து பேரை, மூன்று கறியும், அரைப்பிடி நெய்யும், தயிரும், ஒரு காயும், இலையும் குறையாமல் ஊட்டுவிப்பதாகவும் .. செல்வனடிகள் வைத்த பொன் நாற்பசும் கொண்டு.''





'சுகவனேசுவர சுவாமி என்பதுதான் 'கிளிவண்ணமுடைய பெருமானடிகள் என்று கல்வெட்டில் குறிப்பிடப் படுகிறது. சுகம்—கிளி; வனேசுவரர்—வண்ணமுடைய பெருமாள்; சுவாமி—அடிகள். தூய தமிழ்ப் பெயரால் அழைக்கப்பட்ட பெருமாளின் பெயர், பிற்காலத்தில் வடமொழிப் பெயரால் எப்படி அழைக்கப்படுவதாக மாறியிருக்கிறது என்பதைக் கண்டுகொள்ளலாம். இப்படித்தான் பல ஊர்களின் பெயர்களும், பெருமாள்கள்—அம்மன்கள் பெயர்களும் பிற்காலத்தில் வடமொழிப் பெயர்களாக மாற்றப்பட்டன.

கோவில்களில் மூலப் பொருளாக (மூலதனமாக) வைக்கும் பொன்னுக்கு 'ஊட்டுப் பொன்' என்று பெயர். ஒரு கல்வெட்டில், ''மணவாட்டி .. வைத்த ஊட்டுப் பொன் ஐங்கழஞ்சு'' என்று கூறுகிறது.

சேலம் கிளிவண்ணமுடையார் கோவிலில் மற்றொரு அழகான கல்வெட்டும் காணப்படுகின்றது; ''கிளிவண்ணமுடையார் கோவில் இவ்வாட்டை .. திருமடை விளாகம் கண்டும், திருஎடுத்துக்கட்டிகண்டும், திருக்குளம் வகுத்து இட்டும், திருவாசலல் தென்சிறகில்.. நாயனாரைப் பூசிக்குமவர்களுக்கு மடங்கண்டும், இம்மடம் நோக்கும் திருமேனிக்கு .. இட்டகுழி....ஆகக்குழி முன்னூற்றைம்பதும் கொண்டு இம்மடம் வகுத்து மெழுகி திருவிளக்கும் இட்டு இருக்கும் அவர்களுக்கு இக்கல்வெட்டின் படிக் காணியாசக் கடவதாகவும், இத்தன்மம் நோக்கினவன் திருவடி இரண்டும் என் தலைமேலே.''

இதில் காணப்படும் அருஞ்சொற்களாவன :

இவ்வாட்டை—இவ் ஆண்டு; திருமடை விளாசம்—மடைப்பளி மாளிகை; திரு எடுத்துக் கட்டி—நடுமுற்றத்தைத் தூக்கிக் கட்டும் கூடம்; அதாவது மேலே தூக்கி எடுத்துக் கட்டும் திருமணக்கூடம்; திருக்குளம்—கோவில் குளம்; தென் சிறகு—தெருவின் தெற்கு வரிசை; சிறகுகள்—தெருவின் இரு வரிசைகள்; அதாவது ஒரு பறவைக்கு இரண்டு சிறகுகள் போல, தெருவின் இரண்டு சிறகங்கள், மடம் நோக்கும் திருமேனி—மடத்தைக் கண்காணித்துக்கொள்ளும் மேற்பார்வையாளன்.

இந்த அறக் கட்டளையைக் கண்காணித்து வருபவன் திருவடிகளைத், தான், என்றென்றும் வணங்குவேன் என்பதை உணர்த்தும் வகையில்தான், ''இத்தன்மம் நோக்கினவன் திருவடி இரண்டும் என் தலைமேலே'' என்று கல்வெட்டுக்குரியவன் குறிப்பிடுகிறான்.

திருவேங்கடமலையில் நல்ல தமிழ்க் கல்வெட்டுக்கள் பல இருக்கின்றன. அவற்றில் ஒன்று வருமாறு :

''பெருமாளுக்குத் தம்முடைய பேராலே ஆறு சந்தி நடக்கும் படிக்குப், பொலயூட்டாகத், தாம், இற்றைநாள் சீ பண்டாரத்திற்குச் செலுத்திய பணம் ஏழாயிரத்து எண்ணூறும், தம்முடைய பேராலே நாள்வாழி திருவெங்கடமுடையான் அமுது செய்தருளும் திருப்போனகம் நாலும், ஆதி வராகப் பெருமாள் அமுது செய்தருளும் திருப்போனகம் இரண்டும், ஆகத்திருப்போனகம் ஆறுக்கு, மலை குனிய நின்றான் காலால் அமுதுபடி மூவுழக்காலும், நெய்யமுது மூவுழக்கும், பயற்று அமுது மூவுழக்கும், உப்பமுது—மிளகமுது—கறியமுது—தயிரமுதும் ஆக இந்த வகை இற்றைநாள் சீ பண்டாரத்தே விட்டுப்போகக் கடவோம் ஆகவும்.''

இதில் காணப்படும் அருஞ்சொற்களாவன : பொலயூட்டு—தானியக் குவியலாகக் கொடுப்பது; சீ பண்டாரம்—கோவில் கருவூலம் (பொக்கிஷம்); நாள்வழி—அன்றாடம் அமுது செய்தருளும்—நிவேதனமாகக்கொள்ளும்; திருப்போனகம்—நிவேதனப் பண்டம்; மலை குனிய நின்றான்—கோவர்த்தன மலை குடையாக வளைந்து நிற்க நின்றவன்; அதாவது பெருமாள்; காலால்—மரக்காலால்; (மரக்கால் போன்ற முகத்தலளவுக் கருவிகளுக்கு அந்தந்த கடவளர்பெயர்களுடன் அந்தந்த அரசர்கள் பெயர்களும் இடப்படுவது உண்டு. அதன் காரணமாகத்தான், 'மலை குனிய நின்றான் கால்' என்று இங்கு மரக்காலுக்குப் பெயரிடப்பட்டது.)

தரத்தில் சிறந்தது!

ஆரோக்கியத்துக்கு உகந்தது!

உணவுக்கு பல ரகங்களில்

தயாரித்து உண்ணச் சிறந்தது !

# வாணி

சேமியோ - மெக்குரோணி - எக்நூடில்ஸ் - ஸ்பெகடி சங்கு - ஸ்டார் - ஏ. பி. சி. டி. ரைஸ் போன்ற பல வடிவங்களிலும் தயாரித்து அளிக்கிறோம்.

தயாரிப்பாளர்:

## வாணி சேமியோ ஒர்க்ஸ்

758, ரெங்கே கவுடர் வீதி
கோயமுத்தூர் 641001

தொலைபேசி: 22484

பொங்குக பொங்கல்!

எங்கும் பொங்குக!

## சிவக்கொழுந்து கோவை

நண்பர்களுக்கு

பொங்கல் வாழ்த்துக்கள்

## என். சுப்பிரமணியம்

## ராஜவீதி, கணபதி

வாடிக்கையாளர்கள், வியாபாரப் பெருமக்கள் நண்பர்கள் அனைவருக்கும்

எங்களது உள்ளம் கனிந்த

## பொங்கல் வாழ்த்துக்கள் !

# ஹோட்டல் சத்யா

## (போர்டிங் லாட்ஜிங்)

7-21 ஸ்டேட் பேங்க் ரோடு, கோயமுத்தூர்-18

❖ நகரின் மையத்தில் அனைத்து வசதிகளுக்கும் ஏற்ப அமைக்கப்பட்டுள்ள எமது போர்டிங் அண்ட் லாட்ஜில் வசதியுடன் தங்கி மகிழவும்.

❖ சுவைமிகு சிற்றுண்டிகளையும் சிறப்பான உணவு வகைகளையும் உண்டுமகிழவும்

அன்புடன் அழைக்கிறோம்! வருக, வருக!

'விட்டு' என்பது கொடுத்தல் என்ற பொருளில் வருகிறது; ஆங்கிலத்தில் சொல்லப்படும் ' Issue ' என்ற சொல்லுக்கு நேரிடையானதாக அமையும். ஒரு கல்வெட்டில் "போனகம் ஒன்றுக்கு விடும் அமுதுபடி ஒரு மரக்கால்" என்று வருகிறது.

நாம் 'குத்தகை' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம் 'நிலத்தைக் குத்தகைக்கு எடுத்தல்', 'வீட்டை குத்தகைக்கு எடுத்தல்', 'குளத்தைக் குத்தகைக்கு எடுத்தல்', 'சந்தையைக் குத்தகைக்கு எடுத்தல்' என்று பல வாய்ப்புக்களில் பயன்படுத்துகிறோம். அதன் உண்மையான வடிவம் "குத்தொகை' ஆகும் என்பதைக் கல்வெட்டுக்கள் செப்புகின்றன குத்தொகை என்ற சொல் திருவானைக்கா கல்வெட்டில் காணப்படுகிறது. நிலத்திற்கோ அல்லது வீட்டிற்கோ குத்து மதிப்பான தொகை தருவது என்பதுதான் குத்தொகை என்று ஆகிறது.

இப்பொழுது ஒரு போகம், இருபோகம் என்ற சொற்களைப் பயன்படுத்துகிறோம். கல்வெட்டுக்கள் 'போகம்' என்பதைப் 'பூ' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றன. "இரு பூ விளையும் நிலம் பதினெண் வேலியும்" என்றும், "ஒரு பூ விளையும் நிலம் இருபதே மாகாணி அரைக்காணியும்" என்றும் கல்வெட்டுக்களில் தென்படுகின்றன.

'அபராதம் போடுதல்', 'அபராதம் வசூலித்தல்' என்று குறிப்பிடுகிறோம். இவற்றை முறையே 'தண்டம் இடல்' 'தண்டம் கொளல்' என்று திருக்காளத்தி கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

திருவேங்கடமலை கல்வெட்டு ஒன்றில் "திருவேங்கடமுடையானுக்குத் தம்முடைய பெயராலே, இரண்டு திருப்போனகம் அமுது செய்தருளும் படிக்கு, நாம் இற்றை நாள் சீ பண்டாரத்துக்கு ஒடுக்கின பணம் நாலாயிரம்" என்ற செய்தி காணப்படுகிறது. இங்கு 'ஒடுக்கின' என்ற சொல், 'மூலதனமாகச் சேர்த்துச் செலுத்திய' என்னும் பொருளில் வருகிறது. 'சீ பண்டாரத்துக்கு ஒடுக்கின' என்றால், 'கோவில் கருவூலத்தில் மூலதனமாகச் சேர்த்துக் கட்டின' என்று பொருள்.

கூலி பெறாமல் செய்யும் வேலையைக் குறிப்பதற்கு 'அமஞ்சி' என்ற சொல் கல்வெட்டுக்களில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

'கோவில் பிரகாரம்' என்பது கல்வெட்டுக்களில் 'திருச்சுற்றாலை' என்று குறிக்கப்பெற்றிருக்கிறது.

அரசு அலுவலாளருக்குத் 'திருமந்திர ஓலை' என்றும், அரசு தலைமை அலுவலாளருக்குத் 'திருமந்திர ஓலை நாயகம்' கண்காணிப்பாளருக்கு 'கண்காணி' என்றும், கோவிலில் வேலை பார்ப்பவர்களின் தலைவருக்குக் 'கோவில் நாயகம்' என்றும், கருவூலத்தை (பொக்கிஷத்தை)ப் பாதுகாக்கும் தலைவருக்குப் 'பெரும் பண்டாரத்தார்' என்றும், உணவச் சாலையை மேற்பார்வையிடுபவருக்கு 'மடைப்பளிப் பண்டாரத்தார்" என்றும், கோவில் திருப்பணிகளைப் பார்க்கிறவருக்குத் 'திருப்பணிப் பிள்ளை' என்றும் கல்வெட்டுக்களில் பெயர்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன.

'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்ற பழமொழிக்கிணங்க ஒரு சில அருந்தமிழ்ச் சொற்கள்தாம் சில கல்வெட்டுக்களிலிருந்து பொறுக்கியெடுத்து இங்கே காட்டப் பட்டிருக்கின்றன. பல்லாயிரக்கணக்கில் இருக்கும் அவ்வளவு கல்வெட்டுக்களையும் ஆராய்ந்து பார்த்தால், எண்ணிறந்த அருந்தமிழ்ச் சொற்களைத் தேர்ந்தெடுக்கலாம். எல்லாத் துறைகளிலும் நல்ல தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டும் என்று முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற இந்த காலத்தில், கல்வெட்டுக்களில் காணப்படும், வழக்காற்றிலிருந்த அருந்தமிழ்ச் சொற்கள் பலப்பலவும் பெரிதும் பயன்படும்.

கல்வெட்டுக்களில் காணப்படும் அருந்தமிழ்ச் சொற்களில் பொருத்தமானவற்றையும், பயன்படக்கூடியவற்றையும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடியவற்றையும் தமிழ்ப் பெருங்குடி மக்களின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டிய பொறுப்பு தமிழாசிரியர்கள்—வரலாற்றாசிரியர்கள்— தொல் பொருள் ஆராய்ச்சி வல்லுநர்கள் ஆகியோரின் நீங்காக் கடமையாகும்.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!"

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் முழங்கியதற்கொப்ப, நாமும் முழங்கி, என்றுமுள அருந்தமிழ்ச் சொற்களை ஒல்லும் வகையெல்லாம் பயன்படுத்தி உயர்வடைவோமாக!



வறியார் முதுகென உடல் வளைத்தாலும்
வாழ்க்கையில் தலையினை நிமிர்த்தி நில்லெனும்
உரிமை வேட்கையை உணர்த்தும் சான்றாய்
ஊரணிக் கரையினில் ஊன்றிய தென்னையோ?

* * * * * * * * * * * * * * * *

இணைந்து நிற்பதும் இலட்சியம் காண்பதும்
என்றும் உயர்ந்து எழுச்சி பெறுவதும்
துணைவரும் நட்பின் தூய்மையை பொறுத்தே
துலங்கும் என்பதன் தோற்றமோ இவ்விணை?



# பகுத்தறிவின் உயர்வும் பயனும்

உலகில் தோன்றும் உயிர்கள் அனைத்தும் அவை இயற்கையில் பெற்றுள்ள உணருந் திறனுக்கும் பொறி வளர்ச்சிக்கும் ஏற்ப உயருகின்றன. உறுதல் உணர்வு முதலாக காணல், கேட்டல், முகர்தல், சுவைத்தல் ஆகிய உணர்வுகளைப்பெற்றுள்ள அளவுக்கு அவற்றின் அறிதல்திறன் வளர்ந்துள்ளது. மற்ற உயிர்களைக் காட்டிலும் – மனிதன் பகுத்தறியும் திறன் பெற்றிருப்பதாலேயே மற்ற உயிர்களினும் மேம்பட்ட அறிவு உடையவனாகிறான்.



அறிந்தவற்றை நினைவில் கொண்டும் – அறிந்த பிறவற்றோடு ஒப்பு நோக்கியும் வேறுபடுத்தியும் – பகுத்துணரும் ஆற்றல் வளரும்போதே பகுத்தறிவு பிறக்கின்றது. மற்ற உயிரினங்களிலும் மூளை வளர்ச்சியால் சிறந்துள்ள மனிதனே-பகுத்தறியும் ஆற்றல் பெறுகிறான். பகுத்துணரும் பயிற்சி வளர வளர, காரண – காரிய விளக்கங் காணும் அறிவு முயற்சி சிறந்து பகுத்தறிவு ஒளிர்கின்றது.

பகுத்தறியும் திறன் பயன்படுத்தப்படாதவிடத்துப் – பொறிகளால் மட்டுமே பெறும் அறிவு உண்மையைத் தெளிந்ததாவதில்லை.

''கண்ணால் கண்டதும் பொய் – காதால் கேட்டதும் பொய், தீர விசாரிப்பதே மெய்'' என்னும் பழமொழி இதனையே விளக்கும்.

இளைஞன் ஒருவனும் இளநங்கை ஒருத்தியும் உலா வருவதைக் கண்டதாலேயே அவர்களைக் 'காதலர்' என்று கொண்டிடலாகாது. அவர்கள் உடன்பிறப்பாகவோ – ஒரு சாலை மாணவர்களாகவோ இருக்கலாம்.



நாதசுர இன்னிசை ஒலிப்பதைக் கேட்ட அளவில் அதை ஒருவர் அண்மையில் இசைப்பதாகக் கருதிடவியலாது. அது வானொலி வாயிலாகவோ தொலைநோக்கி மூலமோ–இசைத் தட்டினாலோ எழும்புவதாக அமையலாம்.

'மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்னும் பழமொழியும், பொறி அறிவால் மட்டும் உணருவதை பகுத்தறியாத நிலையில், ஒருவரிடம் ஏற்படும் தடுமாற்றத்தையே புலப்படுத்தும்.

மனத்தில் பதிந்திருந்த தவறான எண்ணமும்–தடுமாற்றத்தால் குழம்புகின்ற அறிவும் தெளிவற்ற ஒரு காட்சியைக் காணும்போது ஏற்படுத்தும் விளைவே இது.

இரவுக் காலத்தில் காது மந்தமான ஒரு இளைஞனுக்கு–தையற்கலை பயிற்றுவித்த ஒருவன்– ''கழுத்தை வெட்டு, கையை வெட்டு'' என்று கூறியதை நேரில் காணமுடியாத நிலையில்–காதால் மட்டும் கேட்ட ஒருவன் 'கொலை முயற்சி நடப்பதாகக் கொண்ட தவறான எண்ணம்' இதையே புலப்படுத்தும். எனவே பொறியினால் பெறும் அறிவு எல்லா வகையிலும் உண்மையை உணர்த்துவதாகவும் நிறைவுடையதாகவும் அமையாததால்–பகுத்தறிவே அந்தக் குறையை நிறைவு செய்கிறது.





மற்ற உயிர் இனங்களில் சிலவற்றின் பொறி புலன் ஆற்றலும், இயல்பு உணர்வுத் தூண்டுதலும்–சிலவகை செயலாற்றலும் வாழ்க்கை அமைப்பும் மனிதனின் பொறிபுலன் ஆற்றலைவிட மேம்பட்டதாயும், தனிச்சிறப்புடையதாயும் காணப்படினும்–அவை பகுத்தறியும் திறன் பெற்றிருப்பதாகக் கருதுவதற்கு இடமில்லை.

நாய் முதலான சில விலங்குகள் முகர்ந்து காணும் (மோப்பம்) ஆற்றலிலும்;

பருந்து முதலான சில பறவைகள் நெடுந் தொலைவில் உள்ள சிறு பொருள்களையும் புழு–பூச்சியையும் கண்டு கொள்ளும் ஆற்றலிலும்;

பூனை–ஆந்தை முதலானவை நிறை இருளிலும் தனது இரையைக் கண்டுகொள்ளும் திறனிலும்;

தூக்கணாங் குருவி முதலான சில பறவைகள் வியப்பூட்டும் வண்ணம் கூடுகட்டுவதிலும் ;

யானை முதலான சில விலங்குகள் இனந்தழுவிக் கூட்டமாக வாழுந் திறனிலும்;

புறா–மான் முதலானவை இணைமாறாது இறுதிவரை வாழும் திறனிலும் சிறந்து விளங்குகின்றன என்பது நாமறிந்ததே.

கூட்டு வாழ்க்கை அமைப்பு, பணி பங்கீடு, உழைக்குந் திறன் ஆகியவற்றால் வியப்பூட்டும் தேனி, எறும்பு ஆகியவற்றின் அறிவு–பகுத்தறியும் ஆற்றலுடையதுபோல் தோன்றச் செய்வதும் உண்மையே. சில வகைக் கடலுயிர்களின் வாழ்க்கையும், உலகின் ஒரு கோடியிலிருந்து மறுகோடிக்குப் பறந்து சென்று திரும்பும் சில பறவைகளின் செயலும், பெரும் படை எடுப்பு நடத்தும் வெட்டுக்கிளிகள்–சில வகை எறும்புகள் ஆகியவற்றின் போக்கும் எண்ணுமிடத்து வியப்பாகின்றது.

மீன் முதலியவற்றின் நீந்தும் ஆற்றலும், பறவைகளின் பறக்கும் ஆற்றலும், மனிதனுக்கு இல்லாத ஆற்றலாக அமையினும் –அதனால் அவை மனிதனின் பகுத்தறிவுக்கு ஈடான ஆற்றலைப் பெற்றதாகா என்பதைப் போலத்தான் நாம் வியக்கும் மற்றையஆற்றல்களும் அவைகளிடம் அமைந்துள்ளன.

மற்ற உயிரினங்களிடம் காணப்படும் இவ்வகை ஆற்றல்கள், அவற்றின் பொறிகளின் திறன், இயற்கையாய் ஏற்பட்ட பயிற்சி, நாம் கணித்தறிய முடியாத காலத்திலிருந்து அவை வாழ்ந்த சூழ்நிலை, ஆகியவற்றால் உருவாகியனவே அன்றிப்–பகுத்தறியும் திறனால் இந்த ஆற்றலைப் பெற்றவையாகா.

மனிதனால் போற்றி உரைக்கப்படும் நாயின் நன்றி உணர்வு, இனத்தைக் கரைந்து அழைத்து உண்ணும் காகத்தின் இயல்பு, தோழமைகொள்ளும் நாய், பூனை, குதிரை முதலானவற்றின் இயல்பும், பழக்கத்தாலும், தத்தம் தேவை நிறைவுக்குத் துணையாவதில் அவை கொள்ளும் ஆர்வத்தாலும் உருவானவையே. அவ்வியல்புகளின் நன்மை அல்லது உயர்வு இது என்று தெளிந்த பகுத்தறிவால் உருவானவை ஆகா.

தூக்கிவைத்துக்கொள்பவர் யாராயினும் அழுகையை நிறுத்தும் குழந்தை; அன்னையின் முகம்பார்த்த அளவில், உறவுநிலை அறியாவிடினும், பசியாறும்போது பார்த்துப் பழக்கப்பட்ட முகம் என்பதால், அந்த உணர்வுகொள்ளுவதால் சிரிக்கும் குழந்தை; காரணம் தெரியாமலே பொம்மையைப் பார்த்து மகிழும் குழந்தை; கிலுகிலுப்பை ஆட்டுகிறவரிடம் தாய் மடியிலிருந்தும் தாவும் குழந்தை–ஆகியவை பெற்றுள்ள அறிவு நிலையினை ஒத்ததுதான் அந்த விலங்குகளிடம் காணப்படும் அறிவும்.

நோயுற்ற காலத்து நாய் முதலான சில விலங்குகள் உணவை மறுத்து உண்ணாமலே இருக்கின்றன. சில விலங்குகள் சில நோய் ஏற்பட்டவிடத்து சில மருந்துச் செடிகளின் தழைகளைத் தின்று நோய் தணிப்பதாக மருத்துவ நூலோர் கண்டு கூறியுள்ளனர். கோழி–புறா முதலான பறவைகள் சில உடலின் தேவையை நிறைவு செய்யச் சிலவகை சுண்ணாம்புக் கற்களைப் பொறுக்கி விழுங்குகின்றன. உடம்பின் உப்புத்



தேவைக்காக ஒரு மாடு மற்றொரு மாட்டின் உடம்பினை நாவால் வருடிச் சுவைக்கிறது.

ஓரின விலங்கு மற்றொரு இன விலங்கின் குட்டிக்குப் பால் கொடுத்து வளரச் செய்வதும் ஓரிரு இடங்களில் நிகழ்கிறது. இவை எந்த அளவு வியப்பைத் தரினும், அந்தந்த விலங்குகளின் இயற்கை உணர்வினாலும், எதிர்பாராது ஏற்பட்ட பயன் நினைவாலும் பழக்கத்தின் விளைவாலும் நிகழ்வனவேயன்றிப்–பகுத்தறியும் திறன் பெற்றதால் அல்ல.

பகைக்கு எடுத்துக்காட்டாகும் நாயும் பூனையும் நட்பாகவும் பழகிவிடுவதை சிலவிடங்களில் காண்கிறோம். புலியும் ஆடும் –சிங்கமும் நாயும் போன்ற விலங்குகள் ஒன்றாகச் செயல்படுத்தப்படுவதையும் சர்க்கசில் காண்கிறோம். இவையும் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலை–ஒருவகை அச்சம் இவைகட்கு ஆட்பட்டதன் பயனே அன்றி வேறல்ல.

அந்த விலங்குகளின் செயல் ஓரளவு பகுத்தறிவின் சாயல் உடையதுபோலத் தோன்றினும்–அச்செயலுக்கு ஒரு காரண காரியம் இருப்பது உண்மை என்றாலும்– அந்தக் காரண காரியம் எதுவென நாம்தான் எண்ணிப் பார்த்து அறிகிறோமே அன்றி அந்த விலங்குகளுக்கு அவற்றை அறியும் ஆற்றல் இல்லை.

மனிதன் வளர்க்கும் நாயும் குரங்கும் பிறவும் அவன் தந்துள்ள பயிற்சிக்கேற்ப – ஆட்டுவித்தபடி ஆடுவதாய்– இயங்குமேயன்றி அவை தாமே தம் அறிவாற்றலைக்கொண்டு அவ்வாறு இயங்க முற்படுவதில்லை.

மனிதன் பழக்கினால் அதற்கேற்பப் பழகுவதயன்றி– எந்த விலங்கும் மனிதனைப் பழக்குவதில்லை. எனவே அந்த உயிரினங்களின் பொறியாற்றலும், உடல் வல்மையும் எவ்வளவு தனிச்சிறப்பு உடையவையாயினும், மனிதனிடம் அமைந்துள்ள 'பகுத்தறிவு' ஆற்றலுக்கு அவை ஈடாவதில்லை. மனிதனிடம் மட்டுமே காணப்படும் அந்தப் பகுத்தறிவு ஆற்றலே அவனது உயர்வுக்கு, மனித குல மேம்பாட்டுக்கு வழி செய்வதாகிறது.

பகுத்தறியும் தனித் திறன் மனிதனிடம் மட்டுமே உண்டு எனினும்–மற்ற உயிரினங்களைப் போன்றே மனிதனும் சூழ்நிலைகட்குப் பெரிதும் ஆட்பட்டவனே. சூழ்நிலை இதுவெனத் தெளியும் ஆற்றல் மனிதனுக்கு உண்டு. ஆயினும் சூழ்நிலைக்கே ஆட்படாது, தன்னை என்ஞான்றும் விடுவித்துக் கொண்டவனாக அவனால் எண்ணவும் இயங்கவும் முடிவதில்லை.

பாசி படர்ந்துள்ள குளத்தில் நீரை முகக்கும் ஒருவன்– கைகளால் பாசியை விலக்கி விலக்கி நீரை அள்ளினாலும் பின்னரும் பாசி படர்ந்துகொள்வதைப் போன்று, ஒவ்வொரு நிலையிலும்–நினைப்பிலும் மனிதன் பகுத்தறிவைப் பயன்படுத்திச் சூழ்நிலை உருவாக்கிய எண்ணத்தைக் கடந்தாலும் பின்னரும் சூழ்நிலை எண்ணம் சூழ்ந்துவிடுவது இயற்கையாகும். அதனைக் கடந்து வெல்லும் முயற்சியில் மனிதன் தன் அறிவைத் தொடர்ந்து பயன்படுத்துவதே பகுத்தறிவின் பயனாகும்.

இந்த இருபதாம் நூற்றாண்டிலுங் கூட, முன்னேறிய மக்கள் பயன்படுத்தும் அளவு பகுத்தறிவைப் பயன்படுத்தாத மக்களும், பயன்படுத்த வழியற்ற மக்களும், அதற்கான அடிப்படை அறிவைத் தேடிக்கொள்ள முடியாத மக்களும் உலகில் பலராவர். அவர்தம் சிந்தனை ஆற்றல், பயிற்சி இன்மையால் மிகவும் குறைந்துள்ளதால் பகுத்தறிவு இல்லாத மக்களாகவே எண்ணப்படுகின்றனர். ஆனால் அவர்களிடமும்–அவர்தம் வாழ்க்கை நிலைமைக்கேற்ப பகுத்தறியுந் திறன் அமைந்துள்ளதை நுணுகிக் காண்போர் தெளியலாம்.

•

நாகரிக வாழ்வு நடத்துபவர்கள் எனக் கருதப்படும் நிலையினரிடையிலும் பகுத்தறிவுக்கொவ்வாத சில நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் காணலாம். இளமை முதல் அவரவரிடம் ஊறிய எண்ணமும், வளர்த்துக்கொண்ட சிந்தனைப் போக்கும் ஒவ்வொரு துறையில் பகுத்தறிய முற்படச் செய்யினும், வேறு சில துறைகளில் பகுத்தறியவே தலைப்படாத நிலைக்கு ஆளாக்கியுள்ளன. எனவே, அனைத்துத் துறையிலும் தோன்றும் கருத்துக்கள் ஒவ்வொன்றையும் எல்லா நிலையிலும் தாமே பகுத்தறியும் நிலையினர் என்று யாரையும் குறிப்பிடுவது கடினமேயாகும்.



## கழகப்பொருளாளர் பேராசிரியர்

சில துறையில் தேர்ந்த அறிவுடையார் பலர் – பல துறையில் ஏதும் அறியாதாராய் இருப்பதைப் போன்றே பகுத்தறிவைப் பயன்படுத்துவதிலும் இயல்பாகவே–ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் ஒவ்வோரளவே பயன்படுத்துகின்றனர். வாழ்க்கை நிலை, சமுதாய அமைப்பு, சமய உணர்வு, விஞ்ஞானம், அரசியல், பொருளியல் முதலான பல்வேறு துறைகளிலும் பகுத்தறிவைப் பயன்படுத்துவோர் மிகச் சிலரே. அவருள்ளும் அனைத்துத் துறையிலும் ஒரே கருத்தை ஏற்போர் இல்லை என்றே கூறலாம்.

கணிதம், விஞ்ஞானம் முதலான துறைகளில் ஆராய்வோர் ஒருமித்த முடிவுக்கு வரமுடிகிறது என்றாலும், ஒரு புதிய உண்மை காணப்பட்டவிடத்து அது பலருக்கும் உடன்பாடாகும் வரை மாறுபட்ட கருத்துக்கள் எழத்தான் செய்கின்றன. உடன்பாடு காணப்பட்ட பின்னரும் – பிறிதொரு காலத்தில் புதிய உண்மை காணப்பட்ட விடத்து முன்னர் ஏற்கப்பட்டதொரு உண்மை – உண்மையற்றதாகவோ பயன் குறைந்ததாகவோ ஆகின்றது. 'அறிவுக்கு எல்லை இல்லை' என்பதற்கேற்ப விஞ்ஞான ஆய்வுகள் பல முடிவு செய்யப்படாமலே மேலும் மேலும் உண்மை நாடி ஆராயப்படும் நிலையிலேயே என்றும் உள்ளன.

எனவே–பகுத்தறிவு இல்லாத–பகுத்தறிவையே பயன்படுத்தாத மனிதனும் இல்லை; அனைத்துத் துறையிலும் பகுத்தறிந்து தெளிந்த மனிதனுமில்லை என்பது உண்மையாகும்.

மனிதன் எந்தந்த அளவு, எவ்வெத் துறையில் தனது எண்ணங்களை, ஏற்றுக்கொண்டுள்ள கருத்துக்களை, உலகியலைப் பகுத்தறிய முற்படுகின்றானோ அந்தந்த அளவே அவ்வத் துறையில் அவன் பகுத்தறிவுடையவனாகின்றான். அவரவர் அறிவுநிலை–பகுத்தறியும் திறன்–பகுத்தறியும்-வாய்ப்பு, சூழ்நிலை-சமுதாய ஏற்புடைமை இப்படிப்பட்ட எத்தனையோ ஏதுக்களுக்கேற்ப ஒவ்வொருவரும் பகுத்தறிந்து காணும் முடிவும், வகையும் பயனும் வேறுபடுகின்றன.

வயது, கல்வி, பொருள்நிலை, மொழி, நாடு இவற்றால் ஒத்த நிலையினரான இருவர்கூட அனைத்திலும் ஒரே வகையான கருத்தினைக் கொள்வதும் வாழ்வதும் இல்லை. ஒரே குடும்பத்தில் பிறந்த இரட்டைக் குழந்தைகளுங்கூட ஒரே முடிவு காணும் வண்ணம் –ஒரே நிலையில் பகுத்தறியும் திறன் பெறுவதில்லை.

இரண்டு மனிதர்கள் அனைத்து வகையிலும் ஒத்த உருவம் பெறுவதைப் போன்றே–கையில் காணும் கோடுகள் மனிதனுக்கு மனிதன் வேறுபடுவதைப் போன்றே,–அனைத்திலும் ஒரே எண்ணம் பெறுவதும் இயல்வதல்ல.

மனிதனின் மூளை–உடம்பின் உறுப்புக்களிலேயே வியத்தகு ஆற்றலையும், எண்ணற்கரிய கூறுகளையும் கொண்ட ஓர் மண்டலம் எனலாம். மனிதனின் விஞ்ஞான அறிவு உருவாக்கியுள்ள நுட்பங்கள் மிகுந்த கம்யூட்டர்கள் பல இணைந்தாலும்–ஒரு மூளையின் ஆற்றலுக்கு ஈடாகாது. அந்த மூளையின் திறனும் ஆற்றலும் மனிதனுக்கு மனிதன் வேறு படும் வகை நாம் கணக்கிடவியலாத ஒன்று. எனவே மனிதனுக்கு மனிதன் வேறுபட்ட எண்ணமும் கருத்து ஓட்டமும் பிறப்பது இயற்கை.

இந்த வேற்றுமை இயல்பானது என்பதைக் கண்டு கொள்ளும் அறிவுதான்–பகுத்தறிவைப் பயன் உடையதாக்குகிறது.









ஒரு கை விரல்கள் ஐந்தும் ஒன்றைப் போல் ஒன்று அமையாததாலேயே—அவை பயன் உடையதாகின்றன. அதைப் போன்றே வேறுபட்ட கருத்துக்கள் உருவாகும் வாய்ப்பு உண்மையாலேயே உயர்ந்த பொது நோக்கம் உருவாகும் வாய்ப்பு உளதாகிறது.

கருத்து வேற்றுமை—முரண்பாடாய் மோதுதலாய் அரும்பி, உண்மை காணும் வாய்ப்பை உருவாக்கி உடன்பாடு காண வழிகோலுகிறது. இல்லாதவிடத்தும் கருத்து வேற்றுமையைப் பொறுத்துக்கொள்ள, அதற்கும் இடம் உண்டு என்று தெளியும் ஒரு பொது நோக்கம் கொள்ளத் துணையாகிறது.

ஒவ்வொருவரிடமும் பகுத்தறியும் முயற்சியும் வளர வளரத்தான் பகுத்தறிவு ஆற்றல் உடையதாகிறது.

''தொட்டனைத்து ஊறும் மணர்க்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு''—என்றார் வள்ளுவர்.

மணற்கேணி தோண்டும் அளவுக்கு ஏற்ப நீர் ஊறுவதைப் போன்று, கல்வி கேள்விகளின் அளவுக்கு ஏற்ப அறிவு சுரக்கும் என்பது பொருள். கற்றதையும் கேட்டதையும் பகுத்தறியும்போதுதான் அது தன்னறிவாகிறது.

பொதுவாக நோக்கின் நன்மையும் தீமையும் நாடி அறியும் அறிவே பகுத்தறிவு. நன்மை என்பதும் தீமை என்பதும் பலகாலமாக மனிதனிடம் படிந்த எண்ணத்தின் விளைவாகத் தோன்றுவதாலும், அவை காலத்தாலும்—சூழ்நிலையாலும் மாறுவதாலும், அவ்வாறு படிந்த எண்ணங்களையும் மறு ஆய்வு செய்வதிலேயே பகுத்தறிவு பயன் உடையதாகின்றது.

புறத்தில் காண்பவற்றை எளிதில் பகுத்தறிய முற்படுவதைப் போன்று—அகத்தில் படிந்துவிட்ட கருத்தைப் பகுத்தறியப் பலரும் முற்படுவதில்லை. முற்படினும் அகத்தில் படிந்து வேரூன்றிய கருத்துக்களைப் பகுந்தறியும் ஆற்றலும் உரமும் வாய்ப்பதில்லை.

அவ்வாறு பழமையாய்ப் படிந்த எண்ணங்களே—நம்பிக்கைகளாய்—சிலபல தெளிவற்ற பழக்க வழக்கங்களாய்—அவைகளின் பிறப்பிடமாய் அமைந்து விடுகின்றன. மனிதனின் தன்னலம்—அதனால் பிறக்கும் குறுகிய நோக்கம்—அதற்குத் துணையாகும் சாதி—குல வேற்றுமை முதலான தவறான கொள்கைகள்—மனிதரிடையே ஏற்றத் தாழ்வினைக் காத்துக்கொள்ளும் விருப்பம் ஆகியவை நிலைக்கவும் காரணமாகின்றன.

இவற்றைக் கடந்து மனித சமுதாய நலம் காணும் நோக்கம் கொள்ளவும், எல்லோரும் வாழ நாம் வாழ்வோம் என்று உணரவும், சமத்துவம தெளியவும், பிறர் நலம் பேணவும் பகுத்தறியும் ஆற்றல் ஏதுவாகிறது.

மனிதன் தன் வாழ்வு—சமுதாய வாழ்வில் பின்னிப் பிணைந்துள்ளது என்பதையும் அந்தச் சமுதான முன்னேற்றமும் நல்வாழ்வுமே தனக்கும் நன்மை பயப்பது என்பதையும், அந்தச் சமுதாய நலனுக்காகத் தன் நலனை இழப்பதும் விரும்பத்தக்கது என்பதையும் பகுத்தறிவால்தான் தெளிகிறான்.

தனக்காக வாழ்வதினின்றும்—தம்மவருக்காகவும்—நாட்டுக்காகவும், மன்பதைக்காகவும் வாழ எண்ணித் தலைப்படும் உணர்வை மனிதன் பெறுவது பகுத்தறிவு தந்த பரிசே யாகும்.

''சாதி இரண்டொழிய வேறில்லை''

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்''

''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்''

''யாதும் ஊரே யாவருங் கேளிர்''

''அனைத்துயிர் ஒன்றென் றெண்ணி
அரும்பசி எவர்க்கும் ஆற்று''

''வறியார்க்கொன் றீவதே ஈகை''

''பொய்யாமை பொய்யாமை யாற்றின்
—அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று''

''நாடு வாழ வீடு வாழும்''

''ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்''

முதலான எத்தனையோ உயர் எணணங்களும்—பொது நோக்கங்களும் மனித சமுதாயத்தில் முகிழ்ப்பதற்கு வழிகோலியது மனிதனின் பகுத்தறிவே.

பிறப்பால் மனிதனைப் பிறந்தவன், நினைப்பாலும், செயலாலும் மனிதனாக வாழவும், சமுதாயத்தின் வாழ்விலே தன் வாழ்வைக் கண்டு, தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாக உயரவும், பண்பில், சால்பில் சிறக்கவும் துணையாகும் பகுத்தறிவைப் பயன்படுத்தும் முயற்சி நாளும் ஓங்குக!

# தத்து

## மனோரஞ்சிதன்

ஜான்சன் ஊருக்கு புறப்படுவதற்கு இன்னும் இரண்டு நாட்களே இருந்தன.

அவருக்குப் பிரிவு உபசாரம் அளிப்பதற்கான ஏற்பாடுகளில் நண்பர்களுடன் சேர்ந்து சங்கரன் ஈடுபட்டிருந்தபோதிலும், அவன் மனதில் நிம்மதி இல்லை.

'நமக்கு ஜான்சன் பதவி உயர்வு தரப்போவதில்லை; அவருக்கு பிரிவு உபசாரம் என்ன வேண்டி இருக்கிறது!' என்று மனதுக்குள் பொருமினன்.

ஊட்டியில், வெளிநாட்டு உதவியுடன் அமைக்கப்படும் தொழிற்சாலை ஒன்றில், என்ஜீனியராக சங்கரன் வேலை பார்த்து வந்தான். தொழில் நுட்பங்களை கற்றுத் தருவதற்காக ஜான்சன் அமெரிக்காவிலிருந்து வந்திருந்தார். மூன்றுமாதம் தங்கியிருந்துவிட்டு இன்னும் இரண்டு நாட்களில் விடை பெறப் போகிறார்.

ஜான்சன் ஊட்டிக்கு வந்து சேர்ந்தநாள் சங்கரனின் மனத்தில் பசுமையாக இருந்தது.

•

கூடுங்குளிரையும் பொருட்படுத்தாமல், உதகமண்டலம் ரெயில் நிலையத்தில் சங்கரனும், அவனுடன் வேலை பார்க்கும் சகஊழியர்களும் மாலையும் கையுமாகக் காத்திருந்தனர். ஜான்சனை அழைத்து வர மேட்டுப் பாளையத்துக்கு ''இம்பாலா'' கார் அனுப்பப்பட்டிருந்தும், அவர்





அதில் வரவில்லை. இயற்கை அழகை முழுவதுமாக ரசிப்பதற்கு வசதியாக ரெயிலில் பயணம் செய்தார்.

பல்சக்கரம் பொருத்தப்பட்ட ரெயில் மெதுவாக ஊர்ந்து ஊட்டி ரெயில் நிலயத்திற்குள் நுழைந்து நின்றது. ஆறடி உயரமும், ஆஜானுபாகுவான தோற்றமும் கொண்ட ஜான்சன் கையை அசைத்தபடி இறங்கினர். அவருக்கு முதலாவதாக மாலை அணிவித்தவன், சங்கரன்தான். ''அலோ மிஸ்டர் சங்கரன்'' என்று அவனுடன் அவர் வெகு நட்புரிமையுடன் கைகுலுக்கினர். தொழிற்சாலைக்குக் காரில் புறப்பட்ட போது, தன் அருகில் சங்கரனையும் உட்கார வைத்துக் கொண்டார். வழியில் உள்ள முக்கிய இடங்களையெல்லாம் அவன் காட்டிக் கொண்டு போனன்.

சங்கரன் மிகவும் சரளமாக ஆங்கிலம் பேசியது ஜான்சனைக் கவர்ந்திருக்க வேண்டும். தொழிற்சாலை ஊழியர்களிலேயே அவனுடன்தான் அவர் நெருங்கிப் பழகினர்.

இரண்டு நாட்களிலேயே ஜான்சன் பற்றிய எல்லா விவரங்களையும் சங்கரன் அறிந்து கொண்டான். ஜான்சன், திருமணம் ஆன ஐந்தாண்டுகளிலேயே மனைவியை இழந்தவர். குழந்தைகள் இல்லை. மறுமணம் செய்து கொள்ளும் விருப்பமே இல்லாமல், தொழில் நுட்பத் துறையில் ஆராய்ச்சி செய்வதிலேயே தன் முழுக் கவனத்தையும் செலுத்தி வந்தார். இதை அறிந்தது முதல் ஜான்சனிடம் சங்கரன் ஏற்கனவே கொண்டிருந்த மதிப்பு மேலும் பன்மடங்கு உயர்ந்தது.

ஊருக்கு வந்த புதியதில் ஜான்சன் எவ்வளவு அன்புடன் பழகினர்... அடிக்கொருதடவை, 'மிஸ்டர் சங்கரன்' என்று குழைவாக அழைப்பாரே, அதைப் பார்த்த நண்பர்கள், 'சங்கரா! தொழிற்சாலையில் தலைமை என்ஜீனியர் பதவி உனக்குத்தான்!' என்று அச்சாரம் கொடுத்தார்களே.. அதெல்லாம் இனி பழங்கதை தான்!

சங்கரன் பெருமூச்சு விட்டான்.

ஜான்சனை தன் வீட்டுக்கு விருந்துக்கு அழைக்காமல் இருந்திருந்தால், அவருக்கும் தனக்கும் இருந்த நெருங்கிய உறவு முறிந்திருக்காது. கைக்கெட்டிய பதவி உயர்வு கைநழுவியும் போயிருக்காதுதான்.....!

என்ன இருந்தாலும் ஜான்சனின் புத்தி, இவ்வளவு கீழ்த்தரமாகப் போயிருக்கக் கூடாது...

அவரைக் குற்றம் சொல்லி என்ன பயன்.. ராதாவுக்கு இவ்வளவு பொல்லாத அழகை ஆண்டவன் கொடுத்திருக்கக் கூடாது...

ஜான்சனுடன் நட்பு முறிவதற்குக் காரணமாகஇருந்த அந்த கசப்பான சம்பவம் சங்கரனின் மனத்திரையில் விரிந்தது.

ஜான்சன் வந்து ஒரு மாதம் கழிந்திருக்கும். அவரைத் தன் வீட்டு விருந்துக்கு அழைத்தான், சங்கரன். உடனே அதற்கு அவர் சம்மதித்தார்.

சங்கரன் வீட்டுக்கு அரை பர்லாங் தூரத்திலிருந்த பங்களாவில்தான் ஜான்சன் தங்கியிருந்தார். அவன் வீட்டுக்கு அவர் நடந்தே வந்து விட்டார்.

வாசலில் நின்று அவரை வரவேற்றுன், சங்கரன். '' ஹலோ, சங்கரன்'' என்று அவனுடன் கைகுலுக்கிய ஜான்சனின் கண்கள், அவன் அருகே நோக்கியதும் வியப்பினுல் விரிந்தன. அதைக் கவனித்த சங்கரன், ''இவள் ராதா என் மனைவி!'' என்று அறிமுகப் படுத்தினன்.

''யுவர் ஒய்ப்? வெரி பியூட்டிபுல்!'' என்று சிரித்தார், [illegible] கைகூப்பி வணக்கம்செலுத்தி விட்டு, உள்ளே ஓடினுள்.

வித விதமான சைவப் பலகாரங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த மேஜைமுன், ஜான்சனும் சங்கரனும் உட்கார்ந்தார்கள். ஒவ்வொரு பலகாரத்தின் பெயரையும் கேட்டுத் தெரிந்து கொண்டு, சுவைத்து சாப்பிட்டார், ஜான்சன். அவர் வாய் பலகாரங்களை ரசித்த போதிலும், கண்கள் ராதாவையே வட்டமிட்டுக் கொண்டிருந்தன. சமையல் அறைக்கும், கூடத்துக்குமாக ஓடியாடியபோது. அவளுடையஅழகின் அசைவுகள் தென்றலாகத் தவழ்ந்து அவர் மனதில் புயல் வீசச் செ[illegible]

[illegible] இயற்கையிலேயே நல்ல அழகி. அன்று காஞ்சீபுரம் பட்டுப் புடவை அணிந்து எழிலுக்கு எழில் சேர்க்கும் விதத்தில் அலங்காரம் செய்து கொண்டிருந்தாள். இந்தியப் பெண்களுக்கு, இந்தப் புடவை எவ்வளவு அழகாக இருக்கிறது; கவுன் உடையில் இல்லாத கவர்ச்சி, இந்த சேலைக்கு அல்லவா இருக்கிறது' என்று தனக்குள் கூறிக்கொண்டார், ஜான்சன்.

காரணமோ தெரியாது. எனவே, தன் கணவனுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பதவி உயர்வுக்கு ஆபத்து நேரும் என்று அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

•

சங்கரன் கண்களில் துயரம் ததும்ப ராதாவைப் பார்த்தான். பிறகு,'ராதா! தலைமை என்ஜினீயர் பதவி எனக்குக் கிடைக்கும் என்ற ஆசையை இனி விட்டுவிடு! எனக்குஅந்தப் பதவி நிச்சயமாக இல்லை!'' என்றான், சோகத்துடன்.

இதைக் கேட்டு ராதா திடுக்கிட்டாள்.

''ஏன் இப்படி சொல்கிறீர்கள்? முறைப்படி உங்களுக்குத்தானே அந்தப் பதவி கிடைக்க வேண்டும்? ஊரை விட்டுப் புறப்படும்போது உங்களை அந்தப்பதவியில் அமர்த்திவிட்டுப்போவதாக ஜான்சன் கூறிஇருந்தாரே!''

''அந்த நிலைமை எல்லாம் இப்போது மாறிவிட்டது. ஜெகநாதனுக்குத்தான் அந்தபதவி கிடைக்குமாம்!''

''அவர் உங்களுக்குப் பின்னால் வேலையில் சேர்ந்தவர் ஆயிற்றே. அவருக்குப் பதவி உயர்வு கொடுப்பது என்ன நியாயம்!?''

'' இந்தக் காலத்தில் நியாயத்தை யார் பார்க்கிறார்கள். ஜெகநாதனுக்கு கொடுக்க வேண்டும் என்று ஜான்சன் நினைக்கிறார், கொடுக்கிறார்''

'அதற்குத்தான் காரணம் என்ன என்று கேட்கிறேன். ஜெகநாதன் • உங்களைவிட எந்தவிதத்தில் உயர்ந்தவர்? அதிகம் படித்தவரா? அதிக திறமைசாலியா?'

ஆத்திரத்துடன் கேட்டாள், ராதா.

சங்கரனின் உதடுகள் துடித்தன. அவளுக்கு விஷயத்தை எப்படி புரிய வைப்பது என்று தவித்தான்.

' ராதா! அதுபற்றி எல்லாம் வீணாக அலட்டிக் கொள்ளாதே, •ஜெகநாதனுக்குப் பதவி உயர்வு கிடைக்கிறது என்றால், அது நியாயமான முறையில் கிடைக்கவில்லை. மானங்கெட்டத்தனமாக நடந்தால்தான் இந்த மாதிரி பதவி உயர்வு கிடைக்கும் என்றால், அந்தப் பதவி வேண்டவே வேண்டாம்!'' என்றான், சங்கரன்.

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? புரியும்படிசொல்லக்கூடாதா?'' என்று கெஞ்சினாள், ராதா.

'வேண்டாம், ராதா! வீணாக உன் மனம் புண்படும்'' என்றான், சங்கரன்.

'' இல்லை அதைத் தெரிந்து கொள்ளாவிட்டால், எனக்கு நிம்மதி ஏற்படாது''என்றாள்,ராதா.

அவளுடைய வற்புறுத்தலைப் பொறுக்க முடியாத சங்கரன், தனக்கும் ஜான்சனுக்கும் உறவு முறிவதற்குக் காரணமான நிகழ்ச்சியை விளக்கினான்.

சற்று நேரம் சிலையாக அமர்ந்திருந்தாள் ராதா. பிறகு ஏதோ ஆவேசம் வந்தவளைப் போல், '' அத்தான், வாருங்கள், ஜான்சன் வீட்டுக்கு'' என்றாள்.

சங்கரன் திடுக்கிட்டவனாக, ''எதற்கு?'' என்று கேட்டான்.

''ஜான்சனிடம் நியாயத்தை எடுத்துச் சொல்வோம்'' முறைப்படி அந்த பதவி உங்களுக்குத்தான் உரியது என்று கூறுவோம்.''

''அதெல்லாம் ஜான்சன் காதில் ஏறாது, ராதா!''

''இல்லை அவர் மனதை எப்படியாவது மாற்றுவோம். அந்த பதவிஉயர்வு கிடைத்தால் எவ்வளவு வசதியாக வாழலாம். நியாயத்தைஎடுத்துச் சொன்னால் அவர் மனம் இரங்காமலா போகும்?''

''நோ... நோ! அவன் வீட்டுக்குப்போகவேகூடாது. போனால், ஜெகநாதன் பற்றி ஊரார் பேசுவது போல் என்னைப் பற்றியும் பேசும். நீ போய் தூங்கு!''

உறுதியான குரலில் கூறிவிட்டு, சங்கரன் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டான்.

சற்று நேரத்தில் அவன் கண் அயர்ந்தான். எதையும் நாம் இழந்துவிடவில்லை என்ற மன நிம்மதியுடன் அவன் உறங்கினான். ஆனால், எதையோ இழந்துவிட்டது போன்ற தவிப்பு, ராதாவை தூங்க விடவில்லை. படுக்கையில் புரண்டு கொண்டே இருந்தாள்.

மறுநாள்

ஜான்சனுக்குப் பிரிவு உபசாரம் தடபுடலாகநடந்தது.

ஜெகநாதன், ஆள் உயர மாலை ஒன்றை ஜான்சனுக்கு அணிவித்தான்.

சங்கரனோ, எதிலும் பட்டும் படாமலும் நடந்துகொண்டான். ஜான்சனைப் பாராட்டிப் பேசியவர்கள் பெயரில் கூட அவன்பெயர் இடம் பெறவில்லை.

இறுதியாகப் பேசிய ஜான்சன், ஊழியர்களுக்கு நன்றி தெரிவித்தார்.'இந்த மாபெரும் திட்டத்தை உருவாக்கும் ஒவ்வொருவருக்கும் ஒருமாத சம்பளம் போனசாகத் தருகிறேன்'' என்று அறிவித்தபோது எல்லோரும் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

பேச்சை முடிப்பதற்கு முன் ஜான்சன் சொன்னார்.

''உங்களிடம் விடை பெறுவதற்கு முன் ஒரு மகிழ்ச்சியான செய்தியை அறிவிக்க விரும்புகிறேன். தலைமை என்ஜினீயராக யாரை நியமிக்கலாம் என்று இவ்வளவு காலமும் சிந்தித்தேன். பல பெயர்களை யோசித்தேன். கடைசியில் தகுதியான ஒருவரை முடிவு செய்து விட்டேன். அது யார் தெரியுமா?'' என்று கூறி விட்டு ஒரு விநாடி நிறுத்தினார், ஜான்சன். எல்லோருடைய கண்களும் ஜான்சனுக்குப் பின்புறம் அடக்கத்துடன் நின்று கொண்டிருந்த ஜெகநாதனை நோக்கின.

''நண்பர்களே! உங்களை அதிக நேரம் காக்க வைக்க விரும்பவில்லை. உங்களுடைய தலைமை என்ஜினீயராக பதவி ஏற்க இருப்பவர் இவர் தான்'' என்று கூறிய ஜான்சன், முதல் வரிசையில் ஒரு மூலையில் அமர்ந்திருந்த சங்கரனை கையைப் பிடித்துமேடைக்கு அழைத்து வந்தார். தனக்கு அணிவிக்கப்பட்ட பெரிய மாலையை அவன் கழுத்தில் அணிவித்தார்.

''இதை சங்கரனின் தகுதிக்கு அளிக்கப்பட்ட பரிசாக அவர் நினைக்க வேண்டும்'' என்று ஜான்சன் அறிவித்தாலும், கூடி இருந்தவர்கள் அந்த கட்டிடமே இடிந்து விழும்படிகையொலி எழுப்பினர்.

அந்த இரைச்சலையும் மீறி ஜான்சன் கூறிய சொற்கள், சங்கரனின் செவிகளில் ஒலித்தன.

''தகுதிக்கு அளிக்கப்பட்ட பரிசு!''

சங்கரன் மெய்மறந்து நின்றான்!

மறுநாள் தலைமை என்ஜினீயராக சங்கரன் பொறுப்பு ஏற்றபோது, முதல் ஆளாக வந்து வாழ்த்துக் கூறியது ஜெகநாதன் தான்.

தனக்குத் தலைமைப்பதவி கிடைக்காதது பற்றிய ஏமாற்றத்தை அவன் கொஞ்சமும் காட்டிக் கொள்ளாதது சங்கரனுக்கேகூட ஆச்சரியமாக இருந்தது.

நாட்கள் செல்லச்செல்ல சங்கரனும், ஜெகநாதனும் நெருங்கிப் பழகி, உண்மையான நண்பர்கள் ஆனார்கள்.

ஒருநாள் இருவரும் சாப்பிட்டு விட்டுப் பேசிக் கொண்டிருந்தபோது, சுற்றி வளைத்து ஜான்சனைப் பற்றிய பேச்சு திரும்பியது.

''ஜான்சன் மிகவும் நல்ல மனிதர். கண்ணியமானவர்'' என்றான், ஜெகநாதன்.

''நீ எதைக் கொண்டு சொல்கிறாய்?'' என்று கேட்டான், சங்கரன்.

''உன்னிடம் சொல்வதில் என்ன? முதலில் அவரிடம் பழக எனக்கு பயம்தான். ஆனால், கொஞ்சம் பழகியதுமே அவர் என்னைக் கவர்ந்து விட்டார். என் மனைவி மீது அவருக்கு மிகவும் அன்பு.''

சங்கரன் கூர்ந்து அவனைப் பார்த்தான்.

''என்ன அப்படிப் பார்க்கிறாய்? சிலபேர் பொறாமையால் ஏதேதோ கதை கட்டிவிட்டார்கள். அதெல்லாம் ஒன்றுமில்லை. என் மனைவி பிரேமாவைத் தன் சொந்த தங்கை போல கருதிப் பழகினார், ஜான்சன். ஊரை விட்டுப் புறப்படும்போது, ''என் சகோதரிக்கு'' என்ற குறிப்புடன் ஒரு கைக் கெடிகாரத்தை அவளுக்கு பரிசாகக் கொடுத்தார்'' என்றான், ஜெகந்நாதன்.

சங்கரனுக்கு ஆச்சரியமாக இருந்தது. விருந்தின்போது, அவருக்குத் தான் சரியான பாடம் புகட்டியது அவனுக்கு நினைவு வந்தது. அன்று முதல் அவர் திருந்தி இருக்க வேண்டும். இல்லாவிட்டால், பிரேமாவிடம் சகோதரன்போல் பழகி இருப்பாரா? தனக்குத் தான் பதவி உயர்வு கொடுத்திருப்பாரா என்று எண்ணினான்.

''என்ன யோசிக்கிறாய்?'' என்று கேட்டான், ஜெகநாதன்.

''ஒன்றுமில்லை. ஜான்சனைப் பற்றி நீ சொன்னதை நூற்றுக்கு நூறு ஒப்புக் கொள்கிறேன்'' என்ற சங்கரன் ''ஜான்சன் ஒருவேளை அயோக்கியராக இருந்து, மற்றவர்கள் அவரைப் பற்றி கூறியது போல் நடந்து கொண்டிருந்தால், நீ என்ன செய்திருப்பாய்?'' என்று சிரித்துக்கொண்டே கேட்டான்.

''நான் ஒன்றும் செய்ய மாட்டேன்'' என்றான், ஜெகநாதன்.

''என்ன!'' என்று வியப்புடன் கேட்டான், சங்கரன்.

''ஆம். நான் ஒன்றும் செய்திருக்க மாட்டேன். என் மனைவியே அவர் கழுத்தை நெறித்துக் கொன்றிருப்பாள். இந்த விஷயத்தில் அவள் நெருப்பு'' என்றான் ஜெகநாதன்.

நாட்கள் உருண்டோடின. ராதாவை பிரசவத்துக்காக அவள் பெற்றோர் வீட்டுக்கு அனுப்பி வைத்தான் சங்கரன்.

திருமணத்துக்குப் பின், நாலைந்து ஆண்டுகள் கழித்து தலைப்பிரசவத்துக்காக அவள் சென்றதால், உடம்பைப் பார்த்துக் கொள்ளும்படி வாரத்துக்கு ஒரு கடிதம் எழுதிக் கொண்டிருந்தான் அவன்.

ராதா போய் இரண்டு வாரம் கழித்து, அவளை ஆஸ்பத்திரியில் சேர்த்து இருப்பதாகக் கடிதம் வந்தது.

அந்தக் கடிதம் கிடைத்து இரண்டு மணி நேரம் கூட ஆகி இராது. சங்கரனுக்கு அவன் மாமனாரிடமிருந்து ஒரு தந்தி வந்தது.

'' ராதா உடல்நிலை கவலைக்கிடம் உடனே புறப்படவும்''

இந்த இரண்டு வரிகளைப் படித்ததும், சங்கரனின் உள்ளத்தில் ஆயிரம் எரிமலைகள் வெடித்தன. உடனே. சென்னைக்கு ரெயில் ஏறினான்.

ஆஸ்பத்திரி வாசலில் டாக்சி நிற்கும்போதே, யாரோ அழுகுரல் கேட்டது. நெஞ்சம் ''பட பட'' என்று அடித்துக் கொள்ள உள்ளே ஓடினான்.

அதேசமயம் உள்ளேஇருந்து ஓடிவந்த அவன் மாமனார், ''சங்கரா! நம்மை விட்டு விட்டு ராதா போயிட்டா''

என்று கதறினார்.

சங்கரனின் இதயத் துடிப்பு ஒரு வினாடி நின்று விட்டது.

நெஞ்சைப் பிடித்தபடி அருகில் இருந்த அறைக்குள் தள்ளாடித் தள்ளாடி நுழைந்தான்.

ராதாவின் கண்கள் மூடி இருந்தன.

அழுவதற்குக்கூட சக்தியின்றி அருகில் இருந்த நாற்காலியில் விழுந்தான், சங்கரன். எவ்வளவு நேரம் அப்படி இருந்தானோ தெரியாது. ''ராஜா மாதிரி குழந்தை பெற்றுக் கொடுத்து விட்டு, நீ போயிட்டியே, ராதா!'' என்று அவளுடைய தாயார் புலம்புவது கேட்டுத் தலை நிமிர்ந்தான். அதுவரை குழந்தையைப் பற்றிய நினைவே அவனுக்கு இல்லை. பக்கத்திலிருந்த தொட்டிலைப் பார்த்தான்.

மின்சாரத்தால் தாக்கப்பட்டது போலிருந்தது அவனுக்கு.

குழந்தை செக்கச்செவேலென்று அழகாகத் தான் இருந்தது.

ஆனால்..... ஆனால்...

இந்தக் குழந்தையின் தலைமுடி ஏன் செந்நிறமாக இருக்கிறது?''

கண்கள் ஏன் பூனைக்கண்களாக இருக்கின்றன?

சங்கரன் வெகுநேரம் வரை அந்தக் குழந்தையைக் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்றான்.

அன்று இரவு, சங்கரன் தன்னந்தனியே உட்கார்ந்து ஒரு கடிதம் எழுதிக் கொண்டிருந்தான்.

''அன்புள்ள ஜெகநாதன்

சொந்தக் காரணங்களால் நான் வேலையை ராஜினாமா செய்கிறேன்.

அந்த வேலைக்கு உரிய தகுதி உனக்கே உண்டு.

என் குழந்தையை அனாதை விடுதியில் சேர்த்துவிட்டு, நான் வடநாடு செல்ல விரும்புகிறேன். ரிஷிகேஷ், பத்ரிநாத் போன்ற இடங்களில்தான் இனி என்னைப் பார்க்கலாம்.

—சங்கரன்''

மறுநாள் இந்த கடிதத்தை ஜெகநாதன் படித்தபோது, அவன் கண்களில் இருந்து இரண்டு சொட்டு கண்ணீர் அந்தக் கடிதத்தில் விழுந்தது.

''பாவம்! மனைவியைப் பிரிந்த துயரம் தாங்காமல் இப்படி தேசாந்திரம்போய் விட்டானே, சங்கரன் !' என்று அவன் வாய் முணுமுணுத்தது.

---

# விருந்து எதற்கு?

## கவிஞர் கரிமேலழகர்



அழைப்பிதழைப் பெற்றவுடன் அயர்ந்து ன்றேன்—
அவ்வளவு நேர்த்தியான உயர்ந்த அச்சு!
பிழைப்பதற்கு வழிதேடும் கவலை யில்லாப்
பிறவியவர்; பெருமனிதர்; பொருள்ஏ ராளம்!
உழைப்பதற்கும், செல்வத்தைப் பெருக்கு தற்கும்
ஓயாமல் ஆயிரம்பேர் காத்துள் ளார்கள்!
தழைப்பதெல்லாம் புகழால்தான்! அன்னார் என்றன்
தரமறிந்து விடுத்துள்ளார்; தயங்கு வேனோ?

மிகப் பெரிய உப்பரிகை உச்சி மீதில்—
வெட்டவெளி மொட்டைமாடி உருவம் மாறி—
அகப் படாத செடிவகையே இல்லை என்ன—
அலங்காரத் தொட்டிநிறை செயற்கைத் தோட்டம்
முகப்பினிலே பதாகைகள்; உந்து வண்டி
முறையோடு நிரல்படுத்தி நிறுத்தப் பந்தல்!
தகத்தகாயச் சுடர்வீசும் பலநி றத்துத்
தண் ணொளிசேர் மின்விளக்குச் சரங்கள் எங்கும்!

வாயிலுள்ள பல்முழுதும் தெரியு மாறு
வற்றாத சிரிப்பொன்றை முகத்தில் தேக்கி
வாயிலிலே வரவேற்கப் பலபேர் ஓடி
வருவோரின் நிலைபுரிந்து வணக்கம் கூற—
தாயிழந்த சேயெனவே தவித்தி டாமல்
தமக்குரிய இடம்சென்று சேரும் நோக்கில்
கோயிலுக்குள் அடியார்போல் கூடி நின்றோர்
குதூகலமாய் விருந்துமன்றம் போய மர்ந்தோம்!

எங்கிருந்து கிளம்பிற்றென் றறியா வண்ணம்
இனிமைதவழ் நாயனத்தின் இசை முழக்கம்
சங்கீத அருவியெனச் சலச லக்கச்—
சல்லடமும், சட்டை, தலைப் பாகை முற்றும்
சங்குநிற வெண்மையாகத் தரித்த ஆட்கள்
தட்டேந்தி தவழ்ந்துவந்து தனியார் பாலும்
இங்கிதமாய் என்னவகை உணவு தேவை
என்பதெலாம் காகிதத்தில் குறித்துச் சென்றார்!

விருந்தென்றால் புலாலுணவே எம்வி ருப்பம்!
வேண்டியதைச் சொல்லிவிட்டுக் காத்திருந் தோம்!
அருந்தியதும் பசியூட்டும் எலும்புச் சாறும்
அருங்கனிகள் பிழிந்தெடுத்த ரசமும் தந்தார்!
வருந்துவோமா? வரவேற்றோம் இரண்டு கோப்பை!
வரிசையாக அடுத்தடுத்து வரைந்த தட்டில்
இருந்தவற்றில் எதைஉண்ண? எதைவி டுக்க?
எனும்மலைப்பே எம்நெஞ்சில் எழுந்து நிற்கும்!

ஊன்பெதியூண், நெய்ச்சோறு, கோழிக் குஞ்சை
உரித்தவித்துப் பொரித்தெடுத்த வறுவல், நல்ல
மீன்புதைந்த புளிக்குழம்பு, சுறாவின் பிட்டு,
மெல்லுதற்கே எளிதான இறாலின் துண்டம்,
தேன்பிலிற்றும் கருவாடு, நண்டுக் கூட்டு,
திகட்டாத முட்டைஅடை, ஈரல், மூளை,
வான்பிறைபோல் தயிர்தோய்ந்த பெருவெங் காயம்
வாய்மணக்கும் கொத்துமல்லித் துவையல் கூட!

ஒருவழியாய் அரைஇரவு கரையும் நேரம்—
உண்டிக்கு விடைகொடுக்க ஒருப்பட் டோம்யாம்
வருவாரும் செல்வாரும் ஆவ லோடு
வள்ளலவர் திருமுகத்தைப் பார்த்தி ருந்தோம்!
தெருவோரம் திரிகின்ற இலைபொ றுக்கும்
சிறுகூட்டம் கூச்சலிடும்; எமக்கா கேட்கும்
திரு வாயால் பெரியவர்சொல் ஒன்றுக் காகத்
தின்றதெல்லாம் செரிக்காமல் எழுந்து நின்று

"மன்னிப்பீர் அய்யா! எம் மனம் நிறைந்த
வணக்கங்கள், நன்றியுடன் உவந்த ளித்தோம்!
என்னவொரு காரணத்தை முன்னி றுத்தி
இவ்விருந்து? யாமறிய லாமா?" என்றோம்.
"சென்னைஉயர் நீதிமன்றம் மட்டு மன்றித்
தில்லிநகர் உச்சநீதி மன்றம் சென்றும்
நன்மையன்றி வழக்கொன்று தோற்ற தற்கே!
நமக்கல்ல; அடுத்தவீட்டுக் காரர்க்" கென்றார்!










தென்மலைச் சாரலில் தேன்நிறை கூடு — கட்டத்
தேன்சுரும் பாயிரம் பட்டன பாடு
பொன்மலை மீதினில் பூமலர்க் காடு — முற்றும்
போய்வந்து தேன்மிகத் தேக்கிய வீடு!

புன்மனப் பிள்ளையர் கண்டழுக் காறு —கொண்டு
பொங்கினர் வீசினர் வீண்மணற் சேறு
நன்மன வண்டுகள் கொண்டன வீறு — சென்று
நாண்மலர் தேடின நாடொறும் நூறு

ஆயிரம் சூழ்ச்சிகள் செய்தனர் கூடித்—தீயர்
ஆடினர் நாடகம் மேடையில் பாடி
போயின போயின சூழ்ச்சிகள் ஓடி — மாயப்
பொய்ம்மைகள் வீழ்ந்தன வேருடன் வாடி

ஆனிரை மேய்ந்திடும் ஆங்கொரு காடு—தன்னில்
ஆடிடும் பெண்மகள் தீங்குயிற் பேடு
வானுயர் சாரலில் தேன்விளை கூடு — கண்டு
வாயுற வாழ்த்தினள் அன்புளத் தோடு

வாழ்த்திய வாழ்த்தொலி பிள்ளையர் காது—புக்கு
வாட்டிட எண்ணினர் வேறொரு சூது;
வீழ்த்திட வேண்டினர்; ஆமெனும் மாது—கல்லை
விட்டெறிந் தாள்மலைச் சாரலின் மீது!

வீசிய கல்நுனி கூட்டினில் பட்டுக் — கீழே
வீழ்ந்திடும் தேன்துளி பிள்ளையர் தொட்டுப்
பூசினர் நாவினில் கூசுதல் விட்டுப் — பின்னும்
பூமியில் தூற்றினர் நாநயம் கெட்டு!

கோடுயர் தென்மலை தாழ்வது மில்லை — தேனின்
கூடுள சாரலும் வீழ்வது மில்லை
காடுகள் மேடுகள் பூத்துள முல்லை — மொய்த்துக்
கட்டிடும் தேனினம் கூட்டினை ஒல்லை

தேனினம் சஞ்சலம் விட்டன கூடி — மீண்டும்
தேடிடும் பாடிடும் பூவினை நாடி
வானுயர் மாமலைக் காவினில் பாடிச் — சென்று
வந்திடும் வென்றிடும் வாகைகள் சூடி!





# மண்டபம்

பாவை சந்திரன்

மண்டபம்

—இது கோயிலைச் சார்ந்த மண்டபம்.

கோயில் கட்டுமானம் நடந்தபோதே இதுவும் எழுப்பப்பட்டதாக சரித்திரம். பதினாறு கல்தூண்களால் இம்மண்டபம் தாங்கி நின்றபோதிலும் ஊரார் இதை நாலுகால் மண்டபம் என்றே அழைத்து வந்தனர்.

கோயிலின் பிரதான கோபுர வாயிலின் எதிரே இந்த மண்டபம் நிற்கிறது. கோயிலில் குடிகொண்டிருக்கும் மூலவர்களின் 'பிரதிகள்' திருவீதி உலா கிளம்புகிற வேளையில் இங்கு வந்து நின்று ஆராதனை செய்த பின்னரே 'உலா' கிளப்புவார்கள். அதேபோன்று 'உலா' முடிந்து ஆலயத்தினுள் பிரவேசிக்கும் போதுமறுபடியும் தீபாராதனையும் நிவேத்திய வைபவமும் நடந்து, பின்னர் இன்னொரு தீபாராதனை முடிந்த பின்னர்தான் உள்ளே கொண்டு செல்லப்படும்.

இந்த மூலவர்களின் 'பிரதிகள்' வரும் — போகும் நேரம் தவிர, ஏனைய நேரங்களில் அங்கே — அந்தப் பகுதியில் அத்துமீறல் செய்பவர்கள் கண்ணிழந்த பாடகன் சாரங்கன் குடும்பமும்—மலைப் பாம்பை வைத்துக் கொண்டு பிழைப்பை நடத்தும் இருவனும்தான்.

அவ்வப்போது சில ரிக்ஷாக்காரர்களும், வீடில்லாத சில நடைபாதைவாசிகளும் தங்குவர்.

திருவீதி உலா நிகழ்ச்சிக்குச் சற்று முன்னதாகவோ அல்லது பின்னதாகவோ கோயிலைச் சுத்தம் செய்யும் பெண்டிர் இருவர் விளக்குமாறும்—ஒரு குடம் தண்ணீர் சகிதமாக வந்து மண்டபத்தைச் சுத்தம் செய்துவிட்டு செல்வார்கள்.

இதோ, ஒரு குடம் தண்ணீரும் — விளக்குமாறுமாக அந்த இரு பெண்களும் வந்துவிட்டார்கள்.

காலையிலேயே இன்று "பிரதோஷம்' நடக்கப் போகிறது.

அதற்கு ஆயத்தமாக அதிகாலையிலேயே சுத்தம் செய்ய வந்துவிட்டார்கள்.

மண்டபத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் இந்த ஜீவன்களை ஏகவசனத்தில் சில அசிங்கமான வார்த்தைகளைச் சொல்லி எழுப்புகிறார்கள் — அந்தத் துடைப்பமேந்திகள்.

இவர்கள் எழுப்புகிற அந்த நேரத்தில்.....

பாடகனின் மனைவி சாந்தா இரவு முழுவதும் உறங்கவே இல்லை. இவளுக்கும் கண் தெரியாது.

வழக்கமாக ஊர் அடங்கிய பிறகு பதினோரு மணிக்குமேல் அவர்கள் படுக்கையை விரிப்பார்கள்.

முதல் நாளிரவும் அப்படித்தான் படுக்கையை விரித்தனர். இரண்டு சாமம் ஆகியிருக்கும், தூக்கம் கலைந்து எழுந்தாள் சாந்தா. பக்கத்தில் தன் மகள் லலிதா படுத்திருந்த இடத்தைத் தடவிப் பார்த்தாள். அவள் இல்லை. பக்கத்திலேயே வலப்புறத்தில் அவளது கணவன் அமைதியாகத் தூங்குவதைக் கண்டு அமைதியுற்றாள். மகளின் செய்கை அவளது மூளையை வண்டாய்த் துளைத்தது.

உடல் அந்தப் பனியிலும் வியர்வையால் நனைந்தது.

மூலையிலிருக்கும் சிட் பண்ட் கம்பெனியின் 'நைட் வாட்ச்மேன்' உரக்க தாள ஒலியை வாயால் வரவழைத்துக் கொண்டு அந்த இசைக்குரிய சினிமாப் பாடலைப் பாடிக் கொண்டிருந்தான். அந்தப் பாடல் அவளது மனநிலைக்கு ஒத்திருந்தது.

சற்று நேரத்திற்கெல்லாம் மூச்சிறைக்க, லலிதா வந்து தன் படுக்கையில் மெதுவாக சாய்ந்தாள். உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. படுத்துக்கொண்ட சூரக்கில் தன் தாய் தூங்குகிறாளாவென்று அவளது உடலைத் தொட்டு 'அம்மா'வென்று முனகுகிற பாவனையில் தொட்டாள். 'அம்மா தூங்குகிறாள்!' — என்ற தைரியம் அவளது இதயத்தை அமைதிப்படுத்தியது.

''இவ்வளவு நாழி எங்கே போயிருந்தே?''

குரல் கேட்டதோ இல்லையோ அவளது நாடிகளனைத்தும் ஒடுங்கிப்போயின. ஏற்கனவே நாக்கு வறட்சி கண்டிருந்தது. இப்போது மேலும் விக்கித்துப் போய்



# தமிழ் நாகரிகம்

## புதுவை ச. சிவப்பிரகாசம்

நாகரிகம் என ஒன்றை உலகங் காணு
நளியிருளில் உழன்றிட்ட அந்த நாளில்,
வேகமுடன் அதைக் கண்டு சிறந்த வாழ்வில்
விளங்கியவர் நம்முன்னேர்; மற்ருே ரெல்லாம்
ஏகமுடன் வாழ்ந்திட்ட தமிழர் வாழ்வில்
இயலறிவின் ஒளிகொண்ட புதுமை கண்டு,
தாகமுற்ருேர் நீர் கண்ட வாறு போலத்
தக்கவற்றை ஏற்றிருளைக் கடக்க லானுர்.

நாள் கண்டார்; மாதங்கள் ஆண்டு கண்டார்;
நல்லதொரு பருவநிலை மாற்றங் கண்டார்;
கோள் கண்டார்; அவை இயங்கும் தன்மை கண்டார்;
குளிர் வெப்ப நிலைகண்டு பயிர்கள் கண்டார்;
நீள் புவியின் வாழ்வினிலே இன்பஞ் சேர்க்க
நெஞ்சமரும் சுவைமிக்க அகத்தைக் கண்டார்;
தோள் வலிக்கும் அறிவார்ந்த பண்பாட்டிற்கும்
தொடர்புடைய புறவாழ்வு கண்டு யர்ந்தார்!

ஒழுக்கத்தின் அடிப்படையில் எழுந்த வாழ்வில்
உயர்வு கண்டார்! அவ்வொழுக்கம் உயிராய்க்
கொண்டார்!
இழுக்கற்ற உள்ளத்தால் 'யாதும் ஊரே
யாவருமே கேளிர்' என இயம்ப லானுர்!
விழுப்பத்தின் உச்சியிலே தமிழர் வாழும்
மேலான நிலைகண்டு பிறநாட் டார்கள்,
அழுக்குள்ளம் இல்லாமல் தமிழர் கண்ட
அறிவார்ந்த செயலெல்லாம் போற்ற லானுர்!

அறிவுடையார் 'புகழுடையார்' எனப்பா ராட்டும்
அவ்வுரையைச் சகியாத வஞ்சர் சில்லோர்,
செறிவுடைய தமிழ்வாழ்வில் இருள்பு குத்திச்
சீரழிக்க முற்பட்டார்; பலனுங் கண்டார்!
அறியாமை வெறுத்திடோர், பகைவர் தாளுக்
கடிமையுற்று வீழ்ந்ததனுல் பொய்ம்மை நம்பி
மறுபடியும் உயர்வதற்கு வழிகா ணுமல்
வஞ்சகத்துக் கிரையாகிச் சிதைந்து போனுர்;

சுமப்பரிய பழிவிளைக்கும் சாதி பேதம்
தொல்லை தரும் சடங்கு, மதம் ஏற்று விட்டோம்!
நமைப்பார்த்துப் பரிகசிக்கும் உலகைப் பார்த்து
நட்ட தலை நிமிராமல் ஏங்க லுற்ருேம்!

இதையறிந்தார் நம்பெரியார்; வஞ்சர் சூழ்ச்சி
இரிந்தோடப் பகுத்தறிவுப் போர்தொ டுத்தார்!
அதை யேற்றுத் துணைநின்ருர் அறிஞர் அண்ணு;
அறிவுலகம் போற்றுகின்ற தமிழர் வாழ்வின்
இதயம்போல் விளங்குகின்ற நாக ரீகம்
எழிலோடு மறுமலர்ச்சி அடையக் கண்டோம்!

விட்டாள். பதில் சொல்வதற்குத் தோணுமல் விம்மிஞள். சாந்தா அவளது வலது கையை தனது இடது கையால் பற்றி அழுத்தினுள். அவளது விம்மல் ஒலி மட்டும் தொடர்ந்து கொண்டிருந்தது சாந்தாவுக்கும் அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை.

ஓசைப்படாமல் எழுந்து உட்கார்ந்து கொண்டு புடவைத் தலைப்பைச் சரி செய்து கொண்டு எழுந்தவள்:

''சத்தம் செய்யாமல் குளத் தங்கரைக்கு அழைச்சுக்கிட்டுப் போ'' என்ற

அவர்கள் நடப்பதற்கு எத்தனிக்கும் சமயம் புரண்டு படுத்தான் சாரங்கன். அவன் விழித்துக் கொண்டான் என்ற எண்ணத்தில், ''குளக்கரைப் பக்கம் போய்ட்டு வர்ரோம்'' என்று சொல்லிக்கொண்டே அவன் அருகில் உட்கார்ந்து போர்வையைச் சரி செய்து விட்டு எழுந்து கொண்டாள்.

அதிகாலையில் எழுந்து சென்று கைகால் கழுவி வருவது அவர்களின் வழக்கமாதலால், ''மணி இப்போ என்னுயிருக்கும்?'' என்று கேட்டான் சாரங்கன்.

''ம்ம்..அஞ்சு, அஞ்சரையிருக்கும்'' என்று பதில் கூறிவிட்டு லலிதாவின் தோளைப் பற்றிக்கொண்டே நடந்தாள் சாந்தா.

நடக்க முடியாமல் கால்கள் நடுங்குவதை உணர்ந்து, எதைஎதையோ எண்ணிஞள். குளம் வந்ததும் லலிதா நின்ருள்.

''என்ன, குளம் வந்தாச்சா?'' என்ருள் சாந்தா. லலிதாவின் தோளிலிருந்த கையை எடுத்து, படிக்கட்டுச் சுவரில் போட்டு இறங்கும் வழியைத் தடவிப் பார்த்து இறங்கினுள். சாதாரண நாளாக இருந்தால் லலிதாவே படிக்கட்டுவரை அழைத்துவருவாள். இன்று இருவர் மனமும் இருவேறு திசைகளில் சென்று கொண்டிருந்தன. சாந்தா தண்ணீருக்கு மேல் மூன்ருவது படிக்கட்டில் உட்கார்ந்து கொண்டாள்.

''இப்ப சொல்லு, என்ன ஆச்சு...எங்கேபோயிருந்தே?''

இப்போதும் அவள் அழுது கொண்டேயிருந்தாள்.

''நா'ல்லேடி இப்ப அழ வேண்டிய! ....நா பொறப்பெடுத்த நேரம்....! எங்கே போயிருந்த சொல்லு.... சினிமாவுக்கா....யார் கூட்டிப்போனு....?'' என்று மீண்டும் சாந்தா கேட்டாள்.

''இல்லே....சினிமாவுக்குப் போகலே....''

''இல்லேன்னு....?''

''துரோபதையம்மன் கோயில் கூத்துக்கு''

''இதுக்கு ஏன் அழணும்.. நல்ல பொண்ணுதான் போ.. நா'என்னமோஏதோன்னு..'' அதிர்ச்சி குறைந்து சாவதானமானுள் சாந்தா.

''நீ பயந்ததுதான்'மா நடந்துப்போச்சு....''

சொல்லிவிட்டு தாயாரைக் கட்டிக்கொண்டு அழுதாள் மகள்.

''அடிப்பாவி மகளே..! நீ இப்படி பண்ணுவியா! கபோதியான நாங்க எவ்வளவு பயம்—பத்ரமா யிருக்கோம். கண்ணு தெரிஞ்ச நீ.... உனக்கு எப்படி'டீ இப்படி புத்திப்போனது....'' என்ற சாந்தா அப்படியே குத்துக்கல்லாக உட்கார்ந்துவிட்டாள். லலிதாவை வயிற்றிலே சுமக்கும்போது பட்ட கஷ்டம் அவளது மூளைக்குள் புகுந்து கொண்டது.

கண் தெரியாமல் —தெருவோரம் படுத்துக் கிடக்கும் போது, அவளது காலைப் பிருண்டி எழுப்பிய நபர்களிடமிருந்து தப்பித்ததை நினைத்துக்கொண்டாள்.



# கொஞ்சிக் கொஞ்சிப் பேசிலை மனம் மகிழ்ச்சி'



புகைப்படம்: வேடசந்தூர் வி. நாகசுந்தரம்

அப்படியெல்லாம் தப்பித்துக் காப்பாற்றிய அவளது கற்பு குருட்டுச் சாரங்கனிடம் தோற்றுப் போனதுபோலவே லலிதாவும் தோற்றுப்போயிருப்பாள் என்று மனதைத் தேற்றிக் கொண்டாள். குரலில் பிசிறில்லாமல் தீர்க்கமாக அவள் கேட்டாள்:

''ஏண்டி, அவன் யாருன்னு உனக்குத் தெரியுமா....?''

''ஒருத்தரா இருந்தாதானே'மா தெரியறதுக்கு? ...அஞ்சு பேரு ஆச்சே!''

சொல்லிவிட்டு வறண்ட குரலில் அழுதாள் லலிதா. துரோபதை அம்மன் கூத்துப் பார்க்கப்போன இடத்தில் நடந்தது அவளை இப்போது குமட்டியது. ''ஏழைக்கு அழகே கூடாதும்மா.. அழகு கூடாது — எங்களுக்கு உன் அழகைப் பார்க்க கொடுத்து வைக்கலே. அவர்களுக்கு கொடுத்து வைச்சிருக்கு.... இப்படி....!'' என்று விம்மினாள் சாந்தா.

ஃ ஃ ஃ

நேரடி ஓரமாக சாரங்கன் பத்துமணிவாக்கில் ஆர்மோனியப் பெட்டியும் கையுமாக உட்கார்ந்து கொண்டான். லலிதா தன் சோர்வையும் மனநோயையும் பொருட்படுத்தாமல் மண்டபத்தின் மூலையிலிருந்து ஒரு போர்வையை எடுத்து கக்கத்தில் செருகிக் கொண்டாள்.

தபேலா, டோலக்கை இரு கையிலுமாகப் பிடித்துக் கொண்டு சாரங்கன் அருகில் வந்தாள். ஓரடிகூட எடுத்து வைக்க முடியாத அளவுக்கு அவளது கால்கள் நடுங்கின. அவளது தோளைப் பற்றியவாறு வந்த சாந்தாவுக்கு லலிதாவின் இயலாமை நன்கு புரிந்தது.

விடியற்காலைகுளத்தங்கரையில் வாயைத் திறந்தவள்தான், இதுவரை வாயே திறக்கவில்லை. லலிதா போர்வையை ரோடு ஓரமாக சாரங்கனுக்கு எதிரில் விரித்துவிட்டு சாரங்கனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து தபேலா, டோலக்கின் தொய்ந்திருந்த வார்களைக் கெட்டிப்படுத்தினாள். சாந்தாவும் அவளுக்கு அருகில் உட்கார்ந்து கொண்டாள்.

பிரதோஷ மூர்த்தியான சுப்ரமண்யர் மண்டபத்தை விட்டு வெளிக் கிளம்பினார்.

அவர் தேரடியைத் தாண்டும் வரை சாரங்கன் காத்திருந்தான். ஓதுவார் கோஷ்டி பிரதோஷ மூர்த்தி சென்று ஐம்பது கெஜ தூரத்தில் தேவார' பண்ணிசைத்தபடி செல்வார்கள். அவர்கள் கடந்த பிறகே இவர்கள் தங்கள் நிகழ்ச்சியை நடத்துவார்கள்.

சாரங்கன் வழக்கமான தனது வணக்கப் பாடலை தனி ஆர்மோனியத்தில் வாசித்துவிட்டு இரு கைகளையும் தலைக்குமேலாகத் தூக்கி சொன்னான்:

''தோழர்களே! இன்றைய எங்களது வயிற்றுப் பாட்டை உங்களுக்கு வணக்கம் கூறி தொடங்குகிறோம்.''

சாந்தா பாட ஆரம்பித்தாள். அவளது பாடல்களில் வழக்கமான ஜீவன் இல்லை. அந்த ஜீவனின் குரல் வளையை முறித்தவர்கள் அந்தப் பஞ்சபாதர்களா? அல்லது லலிதாவா? 'இல்லை, இவர்கள் யாருமில்லை, நானேதான் — என்னால்தான் — இவ்வளவும்! கொஞ்சம் மனதை அடக்கியிருந்தால் — சாரங்கனின் இச்சைக்கு இணங்காமல் இருந்திருந்தால் லலிதா விளைந்திருக்கவேமாட்டாள்! 'என்று சாந்தாவின் உள் மனம் கூறிக் கொண்டிருந்தது.

வழக்கமாக அவள் பாடும்போது அண்ணாந்த நிலையில் வானத்தைப் பார்த்தபடியே பாடுவாள். அப்போது அவளைப் பார்த்தால் எதிர்த்தாற்போல் மூன்றடுக்கு மாடிக் கட்டிடமாக நிற்கும் சிட்பண்ட் கட்டிடத்தின் மாடியிலிருந்து பார்க்கும் குடும்பத்தினரைப் பார்த்துப் பாடுவது போலவே தோன்றும்!

இன்று அவளது தலை தாழ்ந்திருந்தது.

விரிக்கப்பட்டிருந்த சமுக்காளத்தில் அங்கொன்றும், இங்கொன்றுமாக காசுகள் விழத் தொடங்கின. ஒரேயொரு நோட்டு லலிதாவின் பக்கம் வந்து விழுந்தது. அருகில் விழுந்த ஐந்து ரூபாய் நோட்டைப் போட்டவனை உணர்வுஉந்தநிமிர்ந்து பார்த்த லலிதாவுக்கு 'இவனை எங்கேயோ சந்தித்திருக்கிறோம்' — என்று மனது உறுத்தியது.

அந்த உறுத்தல் — உணர்வின் வேகத்தில் தாளத்தை விட்டாள். அவள் தாளத்தை விட்டுத் தடுமாறிய நேரத்தில் சாந்தாவும் பாட்டின் தொடர்ச்சியில் தடுமாறினாள்.

சாரங்கன் இந்த இருவரது தடுமாற்றத்தையும் கண்டு, அவர்களது குறை தெரியா வண்ணம் ஆர்மோனியத்தில் தன் திறமையைக் காட்டி நிரவல் செய்தான். இந்தச் சாமர்த்தியமான நிரவலை சாந்தாவாலும் — லலிதாவாலும்தான் புரிந்துகொள்ள முடிந்தது. — முடியும். அடுத்த இரண்டு பாடல்களும் சோகப் பாடலாகப் பாடியதைக் கண்டதும் சாரகன் மனமும் குழம்பியது.

எங்கே தானும் தவறு செய்துவிடுவோமோ என்று யோசித்துக் கொண்டிருந்த அந்த நேரம் பார்த்து மேள—நாயன கோஷ்டி சத்தம் அருகில் கேட்டது. — 'கொஞ்ச நேரத்தில் 'ஸ்வாமி' வந்துவிடும்'என்று நினைத்து திருப்தி அடைந்தான்.

வழக்கமாக ஒவ்வொரு நிகழ்ச்சியின்போதும் 'காகித ஓடம் கடல் அலை மேலே போவது போலே மூவாம் போவோம்' பாட்டை சாந்தா பாடி முடிப்பாள். இன்று சாரங்கன் முந்திக்கொண்டு அப்பாட்டை ஆர்மோனியத்தில் தனியாக வாசித்து முடித்துவிட்டு சொன்னான்:

''தோழர்களே! சற்றுநேரம் இடைவேளை. உங்களுக்கு மட்டுமல்ல, எங்களுக்குந்தான்.''

—கூறிவிட்டு காலுக்குக் கீழாக வைத்திருந்த துணி உறையை எடுத்து ஆர்மோனியப் பெட்டியை மூடினான். லலிதாவும் தபேலா—டோலக் இரண்டையும் அதன் உறைகளிலிட்டாள்.

சுப்ரமண்யர் அவர்களைக் கடந்து மண்டபத்துக்குச் சென்றார். சிலர் அவர்களைத் தாண்டிக்கொண்டு சென்றார்கள். சாரங்கன் தனக்குத் தானே சிரித்துக்கொண்டான்.

மண்டபத்தினுள் 'ஸ்வாமி' நுழைந்து அங்கே தீபாராதனை முடிந்ததும், சண்டிகேஸ்வரர் மண்டபத்தை மூன்று சுற்று வலம் வந்தார். அடுத்து, மேள—நாயன கோஷ்டியும் அவ்வாறேசெய்தது,. ஸ்ரீசுப்ரமண்யர்' கோயிலினுள்—பிரவேசித்தார்.

இந்த நிகழ்ச்சிகள் நடந்து முடிந்த பின்னர்தான் சாரங்கனின் குடும்பமோ, பிடாரன் இருளன் குடும்பமோ மண்டபத்தினுள் நுழைய வேண்டும். லலிதாவும்—சாந்தாவும் — குளத்தங்கரைப் பக்கம் சென்றனர்.

குளத்தை யொட்டி இரும்பு வேலி அடைப்பு உண்டு. இந்த முள்வேலி சில இடங்களில் சரிந்து போயிருக்கும். அதைத் தாண்டிச் சென்றால் நான்கு வயதில் தென்னை மரங்கள் வரிசையாக இருக்கும். இடிவிழுந்த தென்னை மரம் ஒன்று தலை கருகி முக்கால்வாசி காய்ந்துபோய் நின்றுகொண்டிருந்தது. இந்த மரத்தினடியில்தான் இவர்கள் சமையல் செய்யும் அடுப்பு சில சிதிலமடைந்த கற்களால் கூட்டப்பட்டிருக்கும். சாந்தா, வந்ததும், வராததுமாகக் கேட்டாள்:

''ஏண்டீ, தாளத்தை தப்ப விட்டே ..?''

''இன்னிக்கு ஒரு அஞ்சு ரூபா நோட்டு விழுந்துச்சு''

''அதுக்கா அப்படிப் பதறிப் போனே..?''

''இல்லே''

''விஷயத்தைச் சொல்லேண்டீ, இப்படியே என் உயிரை வாங்கறயே..!''

''அந்த ரூபா நோட்டுப் போட்டவனை நிமிர்ந்து பார்த்தேன்.... எங்கேயோ பார்த்த மாதிரியிருந்திச்சு..''

''எத்தனையோ பேர் வருவாங்க, போவாங்க.. அதுக்காக..''

''அந்த நோட்'ல வெள்ளையா இருக்கிற இடத்திலே''

''நோட்'ல வெள்ளையா இடம் வேற இருக்கா..?''

''ஆமாம்....இன்னிக்கி பாஞ்சாலி சபதம் எடுக்கப் போற நாள். நீ வர்றியா'ன்னு எழுதியிருக்கு..''

''நேத்திய ஆசை விடலைப் போல்ருக்கு..'' என்றவள் சமையலில் கவனம் செலுத்தாமல் அப்படியே குத்துக்காலிட்டு அதில் முகத்தைப் பதித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

லலிதா சமையலை முடித்து ஒரு பெரிய துணிப் பையில் பானையைத் தூக்கி வைத்துக் கொண்டு, ''போவலாம்'' என்றாள். சாந்தா அவள் தோளைப் பிடித்துக் கொண்டு நடந்தாள். திருப்பத்தைக் கடந்ததும் ''அந்த ரூபாய் நோட்டை இப்படி தா'', என்று வாங்கி இடுப்பில் செருகிக்கொண்டாள்.

ஃ ஃ ஃ

குருட்டுப் பாடகனின் பெண்ணுட்டி கொலை செய்து விட்டாள் என்று அந்தப் பகுதி முழுவதும் ஒரே பேச்சாக இருந்தது.

சாரங்கன், லலிதா இருவரும் சாந்தாவை போலீசார் அழைத்துச் சென்றதற்கப்புறம் படுத்தே பொழுதைப் போக்கினார்கள்.

சாரங்கனுக்கு சாந்தா கொலையைச் செய்திருப்பாளா என்று சந்தேகம் எழுந்து, எழுந்து அடங்கியது.

# பிஞ்சும்........



ஓவியம்: ஹேமா




சங்க இலக்கியம் புகழ் மணக்கும் சந்தனப் பேழை. அதனுள் பத்துப் பாட்டு ஒரு முத்துமாலை. அம்மாலையில் ஓர் அழகிய பொற்பதக்கம் நெடுநல்வாடை. பாடியிருப்பவர் பைந்தமிழ்ப் பாவலர் நக்கீரர். பாட்டுடைத் தலைவன் தன் இளமைப் பருவத்திலேயே வீறும் வெற்றியும் விளங்க வளர்ந்தவன். தலையாலங்கானத்துப் போரில் ஒருங்கு திரண்டுவந்த பகைவர் எழுவரைப் புறங்காட்டி ஓடச் செய்தவன். அதனால் தலையாலங்கானத்துச் செரு வென்றநெடுஞ்செழியன்என்று போற்றப்படுபவன்.

''வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம்'' என்ற தொடரில் உள்ள 'வேம்பு' என்ற சொல் பாண்டியனுக்கு உரிய வேப்பமாலையைக் குறிக்கிறது என்று கொள்ளப்பட்டு அதனால் புறப்பாடல் என்று கருதப்படுகிறது, இந்நெடும் பாட்டு. வேம்பு என்ற சொல் மட்டும் இடம் பெறாவிடில் முற்றிலும் அகத்துறைப் பாடல் என்று கருதமுடியும்.

'சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறார்' என்ற வரையறை அகத்திணைப் பாடல்கட்கு உள்ளது. அதிற் சிறிது மாறினும் அது புறப்பாடலாகவே கருதப்படும்.

188 அடிகளில் நெடுநல்வாடையினைப் பாடிய நக்கீரர் அங்கு ஓர் அரிய புரட்சியினை நிகழ்த்தியுள்ளார். அகத்திணைச் சிறப்பும் புறத்திணை மரபும் கலந்திடப் பாடியதின் மூலம் காப்பியமென்னும் தொடர்நிலைச் செய்யுளுக்கு வித்திட்டுள்ளார் என்று கருதுவது மிகையாகாது.

பாட்டின் இறுதியில் காட்டப்படுவது பாசறைக் காட்சியாகும். அதுவே பாடலின் மையக் கருத்து எனக் கொள்ளலாம். அப் புறக்காட்சிக்கு மாறான அகக்காட்சி அதற்கு முன் கூறப்படுகிறது. மற்றவை எல்லாம் குளிர் நடுக்கம் கூதிர்க்கால வருணனை, தலைவியை வருத்தும் நெடும் வாடை எப்படி நல்வாடையாகும்? வாடை எப்படி நல்லதாகும்? அதனைப் பாடல் விளக்குகிறது.

போர் முனைக்குப் போயிருக்கும் மன்னன் ஆகிய தலைவன் குறித்த நாளில் வரவில்லை. அவன் கடமைப்பணி – வீரப் பணி – இன்னும் முடியவில்லை. ஆனால் அதற்குள் வாடைக்காலம் வந்து விடுகிறது. பாண்டியன் தேவியான தலைவி பிரிவுத் துயரால் வருந்துகிறாள். அவள் துயரம் தீர்ந்திட, அரசன் தன்கடமைகளை விரைந்து முடித்துத் திரும்பட்டும் என்று வாழ்த்துகின்றாள் தோழி, இதுதான் பாட்டு.

பாட்டின் முதற் பகுதியில் கூதிர்க்காலச் சூழல் கூறப்படுகிறது. கார்ப்பருவத்து மழை கனவேகமாகப்பொழிகின்றது. அதனால் சிற்றூர்வாழ் இடையர்தம் ஆனிரைகளை மேடான முல்லை நிலங்களில் மேயவிட்டு, தம் தலைமாலையாய்ச் சூடிய காந்தட் பூக்களில் துளிர்க்கும் மழைத்துளி தம் மேல் சிதற, அதனால் குளிர் வருத்திட, தம் பற்கள் பறை கொட்ட நடுங்குகின்றனர். அதனால் கையில் நெருப்பினை உடையவராய் விளங்குகின்றனர்.

கூதிர்காலத்துக் குளிரின் கொடுமைஇயற்கைப்பொருட்களின் மேல் வைத்துச் சொல்லும் பாங்கு அழகுறத் திகழ்கின்றது. விலங்குகள் உணவு தேடிமேயவில்லையாம். குரங்குகள் குளிரால் வருந்திடப் பறவைகள் நிலத்தில் வீழ்ந்து கிடந்தனவாம். கன்றைக் கண்டதும் ஆவலுடன் பால் தரும் பசு, காலால் உதைத்துப் பாலுண்ணாமல் தடுத்துவிட்டதாம். மலைகளேகுளிர்ந்துவிட்டனவாம்.

''மாமேயல் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக் கறவை
கன்றுகோள் ஒழியக் கடிய வீசிக்
குன்று குளிர்ப்பன்ன கூதிற் பானாள்
(9—13)

என்று உயிரினங்கள் குளிரால் படும் துன்பத்தை அழகுறக் கூறுகின்றார் நக்கீரர்.

அடுத்து, நகரத்தின் ஆறு போல் அகன்ற நெடுந் தெருவில் அலைந்து திரியும் கீழ் மக்கள் தம்மேல் விழும் நீர்த்துளிக்கு அஞ்சவில்லையாம். நீண்டு தொங்கும் ஆடையினை அணிந்திருந்த அவர்கட்குக் கள்ளுண்ட வெறியால் குளிர் தெரியவில்லைபோலும்!

நகரிலுள்ள மகளிர், பகலெல்லாம்மேகமூட்டம்இருப்பதால் மாலையின் வருகையைப் பிச்சிப்பூ மலர்ந்ததால்உணர்ந்தனர். மாலைப் பொழுதில் அம்மங்கையர் தகழியில் நெய் வார்த்துத் தீக்கொளுவி நெல்லும் மலரும் சிதறி இல்லுறை தெய்வத்தை வணங்குகின்றனர். மனையில் வாழும் புறாக்களோ இரை தேடிச் செல்லாமல், இரவு எது, பகல் எது என்று அறியாமல் மயங்கிச் செயலற்றுக் கிடக்கின்றன. சந்தனமும், தண் விசிறியும் பயனற்றுக் கேட்பாரற்ற நிலையிலிருக்க, தலை நிறையச் சூடி மகிழும் மலர்களையும் குளிரால் சூட முடியாமல், பெண்கள் மங்கலங் கருதிச் சில மலர்களைச் சூடியவராய்த் தம் கூந்தலுக்கு அகிற்புகையூட்டிக் குளிரை மாற்ற முயல்கின்றனர். சாளரங்கள் மூடப்பட்டுள்ளன. குடிக்க விருப்பந் தரும் குளிர் நீர்க் குடுவை தேடுவாரற்ற நிலையில் உள்ளது. இசையினை மறவாத ஆடல் மகளிர், குளிரால் நிலைகுலைந்த நரம்புகளையுடைய யாழினைக் கையில் எடுத்துத் தம் மார்பின் வெப்பத்தால் அதனைச் சரிசெய்ய முயல்கின்றனர். கணவரைப் பிரிந்த மகளிரோ வருந்திக் கலங்குகின்றனர். தமிழ் நாட்டு வாழ்வில் கூதிர்க்காலக் கொடுமை எப்படி உள்ளது என்பதனை இப்படிச் சுவைபெற ஒவியம் போல் காட்டுகின்றார் நக்கீரர்.

அடுத்தபகுதி அரண்மனையில் தனிமைத் துயரால் வருந்தும் பாண்டிமாதேவி பற்றிய காட்சியாகும். இப்பகுதியில் அக்கால அரண்மனை அமைப்பு சொல்லப்படுகின்றது. தொழிற்திறம் வாய்ந்த திண்ணிய கதவுகள், உயர்ந்த கோபுர வாயில்கள், நீலமணித் தூண்கள், ஓவியச் சிறப்புடைய நீண்ட சுவர்கள் ஆகிய பகுதிகள் வருணிக்கப்படுகின்றன. அதில் ஆடவர் செல்லமுடியாத காவலுடைய அந்தப்புறத்தில் இருக்கின்றாள் அரசனின் மனைவி பாண்டிமாதேவி.

கட்டிலின் அமைப்பும், அதன்பாலுள்ள சிற்பக் கலைத் திறனும், மெல்லிய பஞ்சணை இயல்பும் பேசப்படுகின்றது. கூதிர்க்காலத்துக் குளிரின் கொடுமை மிகுதியும்தாக்கிடா வாறு செயற்கையான காப்புள்ள இல்லத்திலுள்ளபஞ்சணை




மங்கையர் போற்றிய
மார்கழி போயினள்...
மங்கலத் தை பிறந்தாள்!
பங்க மிலாமலே
ஏங்கும் திருமணப்
பாவை மன மகிழ்ந்தாள்!

குங்குமம் சந்தனம்
குழைத்த கலவையால்
கோலம் மனையில்ட்டு
பொங்கிடும் மங்களம்
எங்கும் நிறைந்திட
புதுமகள் தை பிறந்தாள்!

கன்னலும் வாழையும்
ஏலமும் மஞ்சளும்
காய் கனிக் கிழங்கினமும்
செந் நெல் லரிசியும்
சிறக்கப் புவிதனில்
திருமகள் தை பிறந்தாள்!

புத்துடை யணிந்த
பூவையர் முகத்தில்
புன்னகைப் பூமலர
வித்தகத் தமிழினக்
காளையர் வீரம்
விளைத்திடத் தை பிறந்தாள்!

முத்து முத்தாய்க்கவி
நித்தம் புனைந்திடும்
மூத்த தமிழ் மகனின்
சித்தம் மகிழ்ந்திட
மெத்த நலந்தரும்
சித்திரத் தை பிறந்தாள்!




வட்டமான நீலத்திரையில்
வாங்கிவைத்த கட்டித்தயிரைக்
கொட்டிவிட்டு வந்ததுவும் யாரோ? — விண்ணில்
கோலமிட்டு வரும்வெள்ளித் தேரோ !

கறுப்புவானச் சட்டியிலே
உருட்டிவைத்த சோற்றுருண்டைச்
சிந்தியிங்குச் சிதறியதும் ஏனோ? — அவை
சிந்தனையைத் தூண்டும்விண் மீனோ !

நீளவானில் முழுப்பந்து
நீந்திவரும் அழகுகண்டு
நீலக்கடல் மேலெழும்பும் பொங்கலோ? — அது
நம்மவர்க்கு உணர்வுதூண்டும் திங்களோ !

கட்டிவிட்ட கதைகளெல்லாம்
குட்டுப்பட்டுப் போகும்படி
வெட்டவெளிச் சமாக்கியதும் யாரோ? — இன்று
வானில்சென்று வந்த''ஆம்ஸ்ட் ராங்கோ''!

யில் அமர்ந்திருக்கிறுள் பாண்டியன்தேவி.

கணவனைப் பிரிந்துள்ள கோப்பெருந்தேவியின் கழுத்தில் மங்கல அணியன்றிப் பிறிதணியில்லை. தலைவனைப் பிரிந்த நாள் முதல் கூந்தல் ஒப்பனை செய்யப்படவில்லை. மகரக்குழை யணிந்திருந்த காதுகள் என்பதைக் குழை கிடந்தழுத்திய தழும்பு உணர்த்துகிறது. பட்டாடை உடுத்தாமல் அழகிய நூற்புடவை அணிந்திருக்கிறுள். கையில் முடக்கு என்னும் மோதிரம் மட்டும் அணிந்திருக்கிறுள். ஒப்பனை செய்யப்படாத அவள் தோற்றம் புனையா ஓவியம்போல் பொலிகின்றது.

கூதிர்க்காலத்தில் வருவதாய்ச் சொன்ன தலைவன் வரவில்லை. உறக்கம் வராமல் தவிக்கும் அவள்உணர்வுகளைப் புரிந்துகொண்டவர் போல் மெல்லியல் மகளிர் அவள் திருவடி வருடுகின்றனர். செவிலித்தாயர், ''தலைவர் விரைவிலேயே வருவார்'' என்றுஆறுதல் கூறுகின்றனர்.

ஆனுல் இங்கிதமான அடிவருடுதலும், அன்பான தேறுதல்களும் தேவியின் துயரை ஆற்றவில்லை. அவள் மிகவும் கலங்குகின்றுள். வண்ணக் கட்டிலின் 'மேற்கட்டி'யில் உள்ள திரையில் ஓர் ஓவியக் காட்சியினைக் காணும் தலைவி, அந்த ஓவியத்தில் திங்கள் என்னும் தலைவனைப் பிரியாமல் உரோகினி இருப்பதைப் பார்த்து, ''இவளைப் போல் நாமும் காதலரைப் பிரியாமல் இருக்கும் நிலை வாய்க்கவில்லையே'' என்று நெட்டுயிர்க்கிறுள். கூதிர்க் குளிரில் பாசறையி லிருக்கும் தலைவரின் நிலை எப்படியோ என்ற எண்ணம் தோன்றியதும் அவள் கண்கள் நீரால் நிறைகின்றன. அதனைத் தன் செவ்விரலால் தெறித்துத் தனிமையில் வருந்துகின்றுள்.

தலைவியின் உணர்வு தோழிக்குப் புரிகின்றது. மன்னவன் பாசறையில் ஆற்றும் கடமை பற்றிச் சொல்லிமனந்தேற்றுகிறுள். தலைவியின் உள்ளம் புரிந்தவள் தோழியல்லவா? தலைவன் ஆற்றும் கடமையின் சிறப்பினைச் சொல்லி விரைவில் அத்தொழில் முடிந்து திரும்பட்டும் என்று வாழ்த்துகின்றுள்.

தோழியின் கூற்றுய்க் கருத்தகும், 'மன்னன் பாசறைத் தொழில்' பற்றிய செய்தியே நெடுநல்வாடையின் கடைசிக் காட்சியாகும். பாட்டின் தலைமைக் காட்சியுமாகும்.

விலங்கும் பறவையும் கூடத் தம் தொழில் மறந்திருக்கும் குளிர்காலத்தில், சிற்றூர் இடையர் அடையும் துயரம், முடலைமாக்கள் கள்ளுண்டு அலையும் கோலம், நகர மகளிர் நிலை ஆகிய எல்லாம் சொன்ன புலவர் பெருந்தகை, அக்குளிர் நெருங்கிடா இருப்பான அரண்மனையினைச் சுட்டிக்காட்டி, அங்கும் தனிமையில் வருந்திடும் தலைவி நிலைபேசி அவ்வாடை 'நெடும் வாடை' என்று புலப்படுத்துகின்றுர். இனி பாசறைக் காட்சி அது 'நல்ல வாடை' என்று காட்டும்.

முகபடாம் அணிந்த போர்த் தொழில் பயின்ற யானைகள் பல வ ற்ற றக் கையற்று நிலத்தில் வீழ்ந்து புரளும்படி வீழ்த்திய பாண்டிய நாட்டு வீரரிற பலர், பண்பட்ட பயிற்சியாளர் எனினும் போரிற் புண்பட்டு வருந்துகின்றனர். அவர் மனத்தில் தாம்பட்ட காயம் பற்றிப் புகழ்க்காயம் என்ற பூரிப்பு இருக்கும் என்றுலும் உடம்பில் நோவு இருப்பது இயற்கைதானே!

பகற்பொழுதில், போர் முனையில் தம் மெய்யில் படும் காயம் பற்றி எண்ணிடாது வீறு கொண்டு நின்ற வீரர் திருக்கூட்டம் இரவில் பாசறையில் ஒய்வு கொண்டிருக்கும் வேளை. புண்ணிற்கு மருந்திடும் பணி நடந்தபடி இருக்கிறது.

சில்லென்ற வாடைக்காற்று வீசிக்கொண்டிருக்கிறது. பாசறைகளிடையேஎரியும் விளக்குகளின் சுடர்கள் தெற்கு நோக்கிச் சாய்ந்து எரிவதிலிருந்து வீசுவது வாடைக் காற்றே என்று விளக்குகின்றுர் புலவர்.

காடும் மேடும் அலைந்து திரியும் இடையரையும் வருந்தும் வாடைக் குளிர் வீசும் வேளையில் அக்குளிர் நெருங்காத அரண்மனையில் தலைவியுடன் மகிழ்ந்திருந்து பழக்கப்பட்ட தலைவன், — அதற்கான வாய்ப்பும் வசதியும் உள்ள மன்னவன் —தன் உயிரனைய தலைவி தன் பிரிவினைப் பொறுக்காமல் வருந்துவாளே என்ற கவலையில்லாமல் தன் வீரர் புண்ணைப் பரிகரிக்க' அந்தவீரத் திருவுருவங்களுக்கு ஆறுதல் சொல்ல அலைந்து கொண்டிருக்கிறுன்.

அந்த வீரத் திருமகன் வீதி உலாக் காட்சிதான் எவ்வளவு உணச்சிமயமாய் இருக்கிறது! இருமருங்கும் தன் நாட்டு மக்கள் கூடிநின்று வாழ்த்துரைக்க, அணிதேர்ப் புரவிகள், ஆட்பெரும் படைகள், அவையத்துச் சான்ருேர் ஊர்ந்து வரும் தேர்கள்அனைத் திருேடும், பட்டத்து யானை மீதமர்ந்து, பாதையெல்லாம் அலங்கரித்த தோரணங்களைப் பார்த்தவண்ணம், வண்ண மாலை சூடித் தன் கோப்பெருந்தேவியுடன் எத்துணை முறை உலா வந்திருக்கின்றுன்! அவன் கால்படாத நிலமில்லை தமிழகத்தில் என்னும்படி. களம்பலகண்டு வெற்றி கொண்ட வீரப் பெருமகனின் இன்றைய உலா எப்படி இருக்கின்றது, பாருங்கள்.

வண்ண விளக்கலங்கார வீதிகளில் வலம் வந்த மன்னன் தீப்பந்தங்கள் எரியும் பாசறைகளிடையே வலம் வருகின்றுன். நடந்தறியாத கால்கள் சேறு நிறைந்த, நீர் தேங்கிய பகுதியில் நடக்கின்றன.

வேப்பமாலை சூடிய வேலினை ஏந்திய படைத் தலைவன் முன்னே செல்கிறுன். காயம்பட்ட வீரர்கள் களத்தில் காட்டிய வீரச் செயல்களைக் கூறியவண்ணம் 'இவன் ஆற்றிய தீரமான செயல் இது' என்றும், 'இவன் தான் ஒரே வேலால் யானையினை வீழ்ந்தலறச் செய்த மறவன்,என்றும் படை வீரர்களை வரிசை பெற மன்னனுக்குக் காட்டிய வண்ணம் செல்கின்றுன் படைத் தலைவன்.

'வேம்புதலையாத்த நோன்காழ், எஃகம்' என்ற தொடர் இங்குதான் வருகின்றது. வேப்ப மாலையினை நுனியில் பொருந்திய வலியவேல் என்பது பொருள். வேம்பு என்ற சொல்தான் வேப்ப மாலையுடைய பாண்டியன் என்ற குறிப்பினை உணர்த்துகின்றது வேலின் நுனியில் பாண்டியனின் வெற்றி மாலையான வேப்பந்தார் இருப்பது அடையாள மாலையாய் மட்டுமில்லை, வெற்றி உறுதி என்பதையும் நமக்குக் குறிப்பால் காட்டுகின்றுர் புலவர்.

முன்னே படைத் தலைவன் செல்ல, அவன் பின்னே வரும் மன்னன் தன் இடத் தோளிலிருந்த நீண்ட மேலாடை காற்றில் அசைந்து நழுவி விழுந்திட, அதனை இடப்பக்கத்தில் தன் இடக்கையால் அணைத்துக்கொள்கிறுன். தன் முன்னே வாளுடன் செல்லும் வீரனின் தோள்மேல் தன் வலக்கையினை வைத்த வண்ணம் நடந்துசெல்கிறுன் மன்னன். காற்றில் தன் மேலாடை அசைந்திட வீரன் தோள்மேல் கை வைத்து நடந்து செல்லும் நிமிர்ந்த நடைத்திறம் வாய்ந்த மன்னனின் பக்கம் கொற்றக்குடை ஏந்திவருகின்றுன் ஒருவீரன். குளிரால் குடையும் ''தவ்''வென்னும் ஒலி எழுப்புகின்றது. அந்தக் குடை நிழலே தங்களுக்குக் காவல் என்ற துணிவுடைய வீரமறவர் கூட்டத்திற்குத் தன் அன்பும் அருளும் என்றும் உண்டு என உணர்த்துவது போல் உள்ளது, அவன் தன் வீரன் ஒருவன் தோளின்மேல் கைகொடுத்து நடந்து வருவது

குளிர்காலத்தில் தண்ணீரைத் தொடவே தயங்கும் இயல்பினைப் பார்க்கிறோம். அப்படியிருக்கத் திடீரென்று தன்மேல் நீர்த்துளி பட்டால் அது எலும்பினையே குடைவது போன்ற வருத்தம் தருவதையும் உணர்கிறோம்.

ஆனுல் பாசறை வழியே நடந்துவரும் மன்னவன் மேல் தன் படை வீரர் நலம் போற்றிச் செல்லும் பாண்டியன் மேல், வழியில் கட்டிக்கிடக்கும் யானை, குதிரைகளாம் விலங்கினக் கூட்டம் தரையில் உள்ளசேற்றினைவிதிர்த்து விடுகின்றன. சேற்றுத் துளியின் குளிருக்கு வருந்தாதது மட்டுமல்ல. அது தன் உடம்பில், உடுத்தியுள்ள ஆடையில் தெறித்து விழுவதால் ஏற்படும் களங்கத்திற்கும் முகம் சுழிக்கவில்லை. சேற்றின் களங்கம் அவ்வீரத் திருமகனின் கவனத்தைக் கவரவில்லை.

அவன் பெருவீரன். ஒரே போரில் எழுவரைப் புறங்கண்டவன். எத்துணைப் போர்கள்! அத்துணைவெற்றிகள். பாசறை வாழ்க்கை அவனுக்குப் புதியதில்லை. பண்பட்ட வீரர் தன் படை வீரராய்க் கொண்டவன் அவன். ஆட்பெரும் படையுடைய அம்மன்னன் இன்று பாசறையிடையே சிலர் சூழ நடைபோடுகின்றுன். பாடல் அழகுற முடிகின்றது.

''நள்ளென் யாமத்தும்
பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும்
வேந்தன்
பலரொடு முரணிய
பாசறைத் தொழிலே
என்று முடிகிறது பாடல்.

''யாமத்திலும் பள்ளிகொள்ளாமல் வீரர் சிலருடன் திரியும் வேந்தன்பகைவர் பலரை வென்று திரும்புக'' என்று வாழ்த்தும் தோழி கூற்று தலைவனைப் பற்றிய பெருமித உணர்வினைத் தலைவிக்குக் கூறுவதுபோல் பாடியுள்ள நக்கீரர் வேம்பு என்ற குறிப்பினைச் சொல்லி அவன் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்ற குறிப்பை வெளிப்படுத்துவதற்கு ஒரு நோக்கம் இருக்தல் வேண்டும்.

பாண்டியன் எப்படிப்பட்டவன் என்பதனைப் பாண்டிமாதேவி அறிவாள். அகத்துறைப் பாடல் பல பாடியுள்ள நக்கீரர் அம்மரபினை மறந்து பாடினுர் என்றும் கருத முடியாது.

தோழியின் கூற்றில் தலைவன் பற்றித் தலைவிக்கு நினைவூட்டுவதுபோல், களச் செய்தி சொல்வதுபோல், அக்காலத் தமிழ்நாட்டின் ஆற்றல் மறவனை, அந்நாள் தமிழ் மக்களுக்கு அடையாளம் காட்டுகின்றுர் என்று கருத முடியும்.

நீண்ட வாடைப்பொழுது: மன்னன் ஆற்றும் அன்புக் கடமையால், ஆறுதல் மொழிகளால், அந்த வாடையினைப் போற்றுத மன்னனின் பெரும் பண்புச் சிறப்பால் நல்லவாடையாய்த் திகழ்வதனைக் காண்கிறோம். நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளாமல், வீசும் துன்பக் காற்றினையும், தெறிக்கும் களங்கச் சேற்றினையும் நினையாமல் தன் மறவர் கூட்டத்தைத் தேற்றி ஊக்கம் தந்திட, நாளைப் போருக்கு நல்லவேகம் ஊட்டிப்பயன்படும் வாடைக் கால இரவினை நல்லவாடை என்று நக்கீரர் கருதுவதில் குறை என்ன காணமுடியும்?

நெடுநல்வாடை என்ற தலைப்பினை மீண்டும் நினையுங்கள். தலைநிமிர்ந்த வீரத் திருமகனின் கனிந்த முறுவல் காட்டும் அன்புத் தோற்றம் தான் தெரிகின்றதேயன்றி வாடையின் குளிரெங்கே தெரிகிறது?

# கறிச் சாப்பாட்டுக்காக ஒரு கரிசனம்



விருந்தினர்களை உபசரிப்பதில் தந்தை பெரியாரின் துணைவியார் நாகம்மையாருக்கு அளவற்ற ஆனந்தம். நல்ல அழகும் அழகுக்கேற்ற குணமும் கொண்ட அந்த அம்மையாரின் பார்வையில் பட்டவர்கள் எவரும் அவர்கள் வீட்டிலே சாப்பிடாமல் திரும்பியது கிடையாது. ஒருமுறை சாப்பிட்டவர்கள் எதைப் பிரியமாகச் சாப்பிடுவார்கள் என்று கருதி அடுத்தமுறை மிகவும் அக்கறையோடு சாப்பிடுவோரின் விருப்பமறிந்து பரிமாறுவதிலே நாகம்மையாருக்கு சிறந்த நினைவாற்றலுண்டு.

ஒரு நண்பர் கறியை விரும்பிச் சாப்பிடுவார் என்று அறிந்து அவர் வரும்போதெல்லாம் உடனே கறிக்கடைச்கு வேலைக்காரனை அனுப்பினுர் நாகம்மையார்.

அந்த நண்பர் அன்று மத்தியானம் பெரியாரின் இல்லத்தில் சாப்பிட்டு முடித்த பிறகு தந்தை பெரியாருடன் உரையாடிக் கொண்டிருந்தார்.

திடீரென்று அவரைப் பார்த்து, ''நீங்கள் தினமும் இங்கு வந்து தொலைவதுதானே?'' என்றுர்:

''தினமும் வந்து போக ரயில்வேக்காரன் என்ன என் மாமஞரா?'' என்றுர் அந்த நண்பர்.

''இல்லை! நீங்கள் வந்தால்தான் இங்கே எனக்கும் கறி சாப்பாடு கிடைக்கிறது'' என்றுர் பெரியார், சட்டென்று.









# இரா. செழியன்

எம்.ஏ. எம்.பி.


"முரசொலி" இதழின் பொங்கல் மலர் வெளிவருகிறது. இந்த 'மலரை'ப் பற்றி நினைக்கும்பொழுது, மற்றொரு மலரின் நினைவு வருகிறது. அது ஏட்டு மலரல்ல, காகிதமலர் அல்ல, நாட்டில் காட்டில், பூத்திடும் மலர் — முல்லை!

பூந்தோட்டத்தில் பளிச்சிடும் மலர், மலர்க் கூட்டத்தில் மணம் சிறந்த மலர் — முல்லை!

வெள்ளை நிறம் — உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் நறுமலர் — இந்த முல்லை பற்றிப் பாடாத தமிழ்ப் புலவர்கள் கிடையாது! முல்லைக் கொடி, முல்லையின் அரும்பு, முல்லையின் சிரிப்பு, முல்லைச் சரம், அதன் மணம், இப்படி இயற்கையின் எழில் இலக்கியத்தின் அணியாகப் பாடப் பட்டுள்ளது!

காலை அரும்பி, பகலெல்லாம் போதாகி, மாலை மலரும் நோய் வாய்ப்பட்டோரும், தமது நோய் தீர்க்கும் மருந்தைத் தேடும் முன், இந்த, மாலை மலரைத் தேடுவர் மருந்துக்கு இது ஒரு நல்ல தூதாக அமையாதா என்று!

கரும்புலியை வேட்டையாடச் செல்லும் காட்டு மறவனும், வழியில் அசைந்தாடும் முல்லைக் கொடியைப் பார்க்கும்பொழுது, அதைத் தன் வேலால் விலக்கவும் மனமின்றி, குனிந்து செல்கிறான்!

ஆடிடும் முல்லைக் கொடியைக் கண்டு, விரைந்து செல்லும் தனது தேரை நிறுத்தி, வேள்பாரி நடந்து செல்லவில்லையா?

குழலினும் யாழினும் குரல் முதல் ஏழும்வழுவின்றிஇசைத்திடும் பாணரும்,

ஆடலரங்கில் புகுந்து, பார்ப்பவர்களின் மனதையும் ஆடவைக்கும் ஆடல் மகளிரும்,

மாறிடும் எழிலை, மறைந்திடும் காட்சியை மாறுமல் மறையாமல் திரையில் காத்திடும் வண்ண ஓவியரும்,

அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு அவனி சுற்றிவரும் வீரர் தலைவரும்,

வானிடை மிதந்திடும் தென்றலிலே, மணிமாடங்கள் கூடங்கள் மீதினிலே, அழகின் அணியாய் உலாவரும் ஆரணங்குகளும்,

முல்லை மலரைத் தேடுகின்றனர், பார்க்கின்றனர்; எடுக்கிறார்கள், தொடுக்கிறார்கள் மாலையாக, மலர்க் கணையாக!

இவர்கள் எல்லோரையும் பார்த்து முல்லை சிரிக்கிறது. அன்புடன். அனுதாபத்துடன் அன்பு எளிமையைக் கண்டு. பரிவைக் கண்டு! அனுதாபம் சிறிது நேரத்தில் வாடப்போகும் இதழ்கள், மறையப் போகும் மணம், இதற்கு ஏன் இவ்வளவு வேகம் என்று!

தமிழகத்தில், தமிழிலக்கியத்தில் முல்லைக்கு ஒரு தனி இடம் தரப்பட்டிருக்கிறது.

முல்லை—நறு மணமுள்ள மலர்!
முல்லை—தமிழிசையில் ஒரு இனிய பண்!
முல்லை—காடும் காடு சார்ந்த நிலமும்!
முல்லை—கார்கால மும் மாலைப்பொழுதும்!
முல்லை—ஐவகைத் திணையில், பிரிந்தவர் ஆற்றியிருக்கும் நிலைமை!

முல்லையை முன் வைத்து, முல்லை மலர், முல்லைப்பண், முல்லை நிலம், முல்லைப் பொழுது, முல்லைத் திணை இப்படி இலக்கியத்தில், இசையில், தமிழர்தம் வாழ்வில் அது இடம் பெற்றது!

பத்துப்பாட்டில் முல்லைப் பாட்டு இருக்கிறது! எட்டுத் தொகையில் முல்லை மணம் வீசுகிறது! கொடியில் முல்லை இருக்கிறது; கொடியிடையாள் அள்ளி முடித்த கூந்தலில் முல்லை இருக்கிறது! குழலில் முல்லை ஆடுகிறது, குழலில்—ஊதும் குழலோசையில் முல்லைப்பண் வருகிறது!

நாட்டில், காட்டில், ஏட்டில், இசையில், அகத்தில், புறத்தில், முல்லையைப் பற்றி ஏராளமாகப் பாடியிருக்கிறார்கள் அருந்தமிழ்ப் புலவர்கள்!

ஆனால் ஒரு புலவர் தவிர! மலர்ந்தமுல்லையைப் பார்த்து இவர் மகிழ்ச்சி கொள்ளவில்லை; ''ஏனோ நீ பூத்தாய்?'' என்று வெறுப்புடன் பார்த்தார்!

அவர் குடவாயில் கீரத்தனார் என்ற சங்ககாலப் புலவர்! சோழநாட்டைச் சேர்ந்த குடவாயல் என்பது — இப்பொழுது 'குடவாசல்' என்று அழைக்கப்படும் ஊராக இருக்குமோ—அவரது ஊராகும்.

அவர்காலத்தில், சோழ நாட்டிற்கும் பாண்டி நாட்டிற்கும் எல்லையோரத்தில், பாண்டிநாட்டுப் பகுதியில் 'ஒல்லையூர்' என்ற பகுதிக்குத் தலைவனாக பெருஞ்சாத்தன் என்பவன் இருந்தான். இவன் தந்தைபெயர்கிழான். எனவே முழுப் பெயர் 'ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன்! இப்பொழுது உள்ளதை போலவே, முதலில் ஊர்ப் பெயர், இரண்டாவது தந்தை பெயர், மூன்றாவது இயற்பெயர் என்று, அன்றும் ஒருவரின் பெயர் அமைவதாயிற்று.

ஒல்லையூர் நாட்டுத் தலைவனான பெருஞ்சாத்தன், தன் வீரத்தால் மக்களின் மதிப்பையும் மறவர்களின் போற்றுதலையும் பெற்றிருந்தான்.; கொடை வல்யால் தமிழ்ப் புலவர்களின் பாராட்டுதலையும் பெற்றிருந்தான். அவன் மாளிகையில் யாழோசையும் குழலோசையும் கேட்டது! இளைஞரும் வீரரும், ஆடுவோரும் பாடுவோரும் சூழ, அவன் அவை சிறந்து விளங்குகிறது! அவனுடைய ஆண்மையால், அன்பால் ஈர்க்கப் பட்டவர்களில் புலவர் குடவாயில் கீரத்தனாரும் ஒருவர்!

வீரர்கள் போற்ற, புலவர்கள் பாட, மக்கள் மனமகிழ, ஒல்லையூர் நாட்டை நடத்திச்சென்ற பெருஞ்சாத்தன் திடீரென இறந்துவிடுகிறான்!

வீரர்கள் கண்ணீர் விடுகின்றனர், மகளிர் அழுதுபுலம்புகின்றனர்; நாடு சோக மயமாகிறது!

அப்பொழுது புலவர் குடவாயில் கீரத்தனார், ஒல்லையூர் வருகிறார்! துயரத்தின் எல்லையைக் கடந்த ஒல்லையூரை, அந்த ஊர் மக்களைப் பார்த்ததும் அவரும் துயரில் ஆழ்ந்துபோகிறார்.

இந்த நிலையில் ஒரு முல்லைக்கொடியில் ஒரு முல்லை மலர் பூத்திருப்பதைப் பார்க்கிறார்!

முல்லையின் மலர்ச்சி புலவர் மனதில் நெகிழ்ச்சியை உண்டாக்கவில்லை, மாறாக எரிச்சலை மூட்டியது! முல்லை மலர்ந்து என்ன பலன்? யாருக்கு வேண்டும் இந்த முல்லை மலர்! என்று அவருக்குத் தோன்றுகிறது.

முல்லைக் கொடியைப் பார்த்துப் புலவர் கேட்கிறார். ''முல்லையே! இப்பொழுது உன்னை இளைஞர் சூடமாட்டார்; வளையணிந்த மகளிர் கொய்ய வாரார்; யாழின் வளைந்த கோட்டின் மீது மெல்ல வாங்கி, பாணன், சூடான்; பாடினி உன்னை அணியமாட்டாள்! தனது ஆண்மை வெளிப்பட, பல வீரர்களை வென்ற, வலிய வேலையுடைய சாத்தன் இறந்த பின்பு, இந்த ஒல்லையூர் நாட்டில்முல்லையே, நீயும் ஏனோ பூத்துள்ளாய்?''

இந்தக் கருத்துள்ள பாட்டு, 'புறநானூறு' என்ற சங்கத் தமிழ்த் தொகுப்பில், வருகிறது.

''இளையோர் சூடார்
வளையோர் கொய்யார்
நல்லியாழ்மருப்பின் மெல்ல
வாங்கிப்
பாணன் சூடான் பாடினி
அணியாள்
ஆண்மைதோன்றஆடவர்க்
கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த
பின்றை
முல்லையும் பூத்தியோ
ஒல்லையூர் நாட்டே''

இறந்தார்க்கு இரங்கலைத் தெரிவிக்கும் 'கையறு நிலை' என்ற துறையின் கீழ் இந்தப் பாடல் தொகுக்கப்பட்டுள்ளது.

[இந்தப் பாட்டிலுள்ள அருஞ்சொற்கள் : வளையோர்—வளையணிந்த மகளிர்; நல்லியாழ்—நல்ல யாழ்; மருப்பு—கோடு, யாழின் வளைந்த பகுதி; பாணன்—பாடுபவன்; பாடினி-பாடும்பெண்; மாய்ந்த பின்றை—இறந்த பிறகு]

வேலெடுத்து, வாளெடுத்து வீரர் பலரை வென்றவன் — அடலேறு சாத்தன், அடங்கி விட்டான், அமைதி யடைந்து விட்டான்! அவன் இறந்ததும் அந்த நாட்டிலிருந்தேமகிழ்ச்சி இறந்துவிட்டது!

''இளையோர் சூடார்' என்பதில், 'இளையோர்' என்பதற்கு 'இளைய வீரர்' என்று உரையாசிரியர் எழுதுகிறார். இளமை மட்டும் போதாது. இளமையுடன் வீரமும் உள்ளவர்கள்தாம் பொலிவுடன் திகழ்கிறார்கள்; அவர்கள் முல்லை மலரை சூடும் பொழுது, எடுப்பாக இருக்கிறது, ஏற்றமாக இருக்கிறது! அதிலும் வீரர்களுக்குத்தான், இறந்துபோன சாத்தனின் அருமை பெருமை தெரியும்; அதனால்தான், முல்லை மலர்ந்தும் அதை ஏற்றுக்கொள்ள இளம் வீரர்களால் முடியவில்லை!

''வளையோர் கொய்யார்''—வளையணிந்த இளைய மகளிர் பூத்த முல்லை மலரைக் கொய்ய முன்வரவில்லை! இளையோர் சூடார் என்று கூறிய புலவர், வளையோர் கொய்யார் என்று கூறினார். கொடியிலிருந்து மலரை முதலில் கொய்யவேண்டும்,



# இதயத்தில் நிற்கும் அந்த இனிய நினைவுகள்

இம்மாதம் மூன்றும் தேதி கிளி சோதிடர்கள் தலைமைச் செயலகம் சென்று வெள்ள நிவாரண நிதியளித்த செய்தி பத்திரிகைகள் வாயிலாக வந்தது.

நிவாரண நிதியளிப்பதற்காகச் சென்ற கிளி சோதிடர்கள் ஒருமுறை நிவாரணம் பெறுவதற்காகச் சென்ற சம்பவம் என் நெஞ்சில் நிழலாடியது.

இச்சமூக மக்களில் நானும் ஒருவன் என்ற முறையில் கடந்த காலத்துச் சம்பவங்களை இப்போது நினைத்துப் பார்த்தேன்.

1954-ல் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ தி. மு. க. சார்பில் ஒரு பொதுக் கூட்டம் சென்னைக் கடற்கரையிலே நடந்தது. அந்தக் கூட்டத்தில் பலரும் தங்களால் இயன்ற உதவிகளை வழங்கினர். கிளி சோதிடர்கள் சார்பில் ஆயிரத்து ஒரு காலணாக்கள் அன்று பேரறிஞர் அண்ணா அவர்களிடம் வழங்கப்பட்டது.

அதனைப் பெற்றுக்கொண்ட அண்ணா அவர்கள் சொன்னது இன்றும் பசுமையாக என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

''கிளி சோதிடர்கள் ஆயிரத்தொரு காலணாக்களை நிதியாக அளித்துள்ளனர். அவர்கள் செய்யும் தொழில் நல்லதா கெட்டதா என்ற ஆராய்ச்சிக்கு நாம் இப்போது செல்லவில்லை. இச்சமயத்தில் தம்மாலியன்ற உதவியினைச் செய்யவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு அவர்களும் இந்த உதவியினைச் செய்துள்ளது கண்டு நன்றி; மிக்க மகிழ்வு.''

பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறிய இந்தச் சொற்கள் எங்கள் சமூக மக்களை மிகவும் நெகிழ்வடையச் செய்தது என்பதை மறைப்பதற்கில்லை.



எங்கள் சமூக மக்களெல்லாம் காலையில் எழுந்து அன்றுடம் கிளிப் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு தொழிலுக்கு பல இடங்களில் அலைவர். மாலை வீடு திரும்பும் போதும் அவர்கள் நடந்தேதான் வந்து சேரவேண்டும். இளைஞர்களாலேயே கூட தாங்கமுடியாத இந்தத் துன்பத்தை வயது வந்த பெரியவர்களும் அனுபவித்துக் கொண்டிருந்தனர். காரணம் — பேருந்துகளில் கிளிப் பெட்டிகளைக் கொண்டு செல்ல அனுமதியில்லாமலிருந்தது. எனவே, இத்தொழில் செய்து பிழைக்கும் அத்தனைபேருக்கும் இதுதான் நிலை.

இச் சமூக மக்களிலே படித்தோரும் தொழில் பயின்றோரும் உண்டுஎன்றாலும் பெரும்பாலான மக்கள் இத் தொழிலையே நம்பியுள்ளனர்.

கழக ஆட்சி ஏற்பட்ட 1967, கலைஞர் அவர்கள் போக்குவரத்து அமைச்சராஞர். இத்தருணத்தில் எங்கள் நிலைமைகளை கலைஞர் அவர்களிடம் எடுத்துக் கூறி ஏதாவது பரிகாரம் தேடலாமே என்று எங்கள் சமூக மக்கள் விரும்பினார்கள். அந்த விருப்பப்படி ஒரு முறை நானும், நண்பர் பவளவண்ணன் அவர்களும் எங்கள் சமூகத்தவர் பலருமாகக் கூடி தலைமைச் செயலகம் சென்றோம். டாக்டர் கலைஞர் அவர்களைச் சந்தித்து எங்கள் சமூக மக்களின் துன்பங்களை விளக்கி ஒரு மகஜர் கொடுத்தோம்.

கலைஞர் அவர்கள் எங்கள் நிலைமையை மிக்க அனுதாபத்தோடு கேட்டுவிட்டு, முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களுடன் கலந்து பேசி ஆவன செய்வதாக வாக்குறுதி அளித்தார்.

மிக்க மகிழ்வோடு திரும்பினோம்.

ஒரு வாரத்தில் — கிளி சோதிடர்களுக்கு மட்டுமல்ல; வேறு சிலரும் பயன்படும் வகையில் ஒரு உத்தரவு வந்தது.

இயங்காத வானொலிப் பெட்டி, எலக்ட்ரிக் பல்புகள், மேளதாளங்கள், கிளிக் கூண்டு ஆகியன பேருந்துகளில் கட்டணமின்றி எடுத்துச் செல்ல அனுமதிக்கலாம் என்று அந்தஉத்தரவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதன் பின்னரே ஏழைகளாகிய எங்கள் சமூகத்தினர் கிளிப்பெட்டிகளுடன் பேருந்துகளில் சென்று வர அனுமதிக்கப்பட்டனர்.

**என். பி. அன்பானந்தம்**
**சென்னை - 35**

# பெரியாருக்குப் பிடிக்காத ஒன்று

தந்தை பெரியார் அவர்களுக்குப் பிடிக்காத சிலவற்றில் தண்ணீரும் ஒன்று: அது வெந்நீரானாலும் சரியே. ஒரு துளி கூட உடம்பில் படக்கூடாது என்பதில் அவர் பல நேரங்களில் பிடிவாதம் காட்டுவார்.

எவ்வளவு தொலைதூரம் பயணம் செய்வதென்றாலும்— ஒரு நீளமான சுருக்குப் பையிலே பிரயாணத்துக்குவேண்டிய வேட்டி சட்டை இவற்றையும் கூடவே மடக்கி வைக்கக் கூடிய பாயையும் மடித்து வைத்துக்கொண்டு புறப்பட்டு விடுவது அந்நாளில் பெரியார் கையாண்ட வழக்கம். கூடவே, குளிப்பதற்குப் பயன்படும் வகையில் ஒரு செம்பையும் போட்டு அனுப்புவார் நாகம்மையார். தோளில் அழுக்கு நிறத்தில் ஒரு பெரிய துப்பட்டா இருக்கும்.

பிரயாண காலங்களில் இவை எதனையும் அவர் பயன்படுத்துவதில்லை. குளித்தால்தானே ஆடை மாற்றவேண்டும்? அவருக்கு குளிப்பது என்றால் கட்டோடு பிடிப்பதில்லை. எனவே போட்ட சட்டை துணியை மாற்றாமல் அழுக்குச் சாமியார் மாதிரி அவ்வப்போது வீடு வந்து சேருவார் அவர்.

இக்கோலத்தில் திரும்பி வந்து ஒருநாள் திண்ணையில் உட்கார்ந்து நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார் பெரியார்.

நாகம்மையார் வெகுநேரம் கூப்பிட்டுக் கூப்பிட்டுப் பார்த்துவிட்டு ஒரு கிண்ணம் நல்லெண்ணெயோடு வெளிப்பட்டார். அப்போது பெரியார் தலையை மொட்டை அடித்துக்கொண்டிருந்த நேரம்.

''நீ என்ன செய்தாலும் நான் குளிக்கப்போவதில்லை'' என்று சொல்லிக்கொண்டே அவர் தமது தோள் துண்டினால் தலையைத் துவட்டிக்கொண்டார். நாகம்மையார் மவுனமாக உள்ளே சென்று எருமைத் தாழியிலிருந்த புண்ணாக்கு கலந்த தண்ணீரைக் கொண்டுவந்து பெரியாரின் தலையில் கொட்டினார். ''நீ என்ன செய்வாயோ செய்!'' என்று கொஞ்சமும் பதறாமல் உட்கார்ந்திருந்தார் அவர். கடைசியில் நண்பர்கள் எல்லாம் கெஞ்சி கூத்தாடி அவரைக் குளிக்க வைப்பதற்குள் அன்று போதும் போதுமென்றாகிவிட்டது. இது 1922—23 வாக்கில் நடந்த சம்பவம்.

இப்படி ஒவ்வொரு தடவையும் பெரியாரை நாகம்மையார் குளிக்கவைப்பதற்குப் பெரும் பாடுபடுவார்.

ஒவ்வொருமுறையும் பெரியார் தாம் குளிக்காமல் இருப்பதற்குக் கூறும் சமாதானம் —'முடைநாற்றம் வீசினால் தானே குளிக்கவேண்டும்? எனக்குத்தான் வியர்ப்பதே இல்லையே!' என்பதாகும்.



பின்புதான் அதைச் சூட வேண்டும்! வழக்கமாக காதல் விளைஞன் மலரைக் கொய்வான்: தான் கொய்த மலரை காதலியின் கூந்தலில் சூடி மகிழ்வான். இதுதான் வழக்கம்! ஆனால், முல்லை மென்மையான மலர்; அதை வாள் பிடித்து முரட்டுத் தனம்பெற்ற கரத்தால், கொய்யக்கூடாது; வளை தவழும் மென்மையான கரத்தால் மெதுவாக எடுக்க வேண்டும்! அவ்வாறு மலர் எடுக்கும் மென்மடவாரும் இப்பொழுது, பூத்த முல்லையைக் கொய்ய வரவில்லை!

யாழ் இனிய இசையை மேன்மையாகத் தருவது! அதை அழகுற இசைக்கும் பாணன், முல்லைப் பூவைத் தன் கரத்தால் — நரம்புகளை மீட்டி மரத்த விரல்களால் வேகமாக எடுக்கவில்லை; யாழின் வளைந்த பகுதியை நீட்டி ''மெல்ல'' வாங்குவான்; மென்மையான மலர் அதை 'மெல்ல' வாங்குவான் பாணன்!

ஒல்லையூர் நாட்டுத் தலைவன் சாத்தன் இறந்தபின், அவன் புகழ் பாடி வரும் இசைவாணரும், பாட்டு மகளிரும், முல்லைப்பூவைஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர்! நம்மை விட்டு பிரிந்தாரை நினைக்கும் பொழுது, மலரின் நினைவு வருமா? வசமிழந்த உள்ளத்திற்கு,, வாசமலர் தெரிவதில்லை! பாட வைத்தவன், ஆடவைத்தவன், எதிரிகளை ஓடவைத்தவன் — இறந்துவிட்டதும், பாடல் அடங்குகிறது, ஆடல் மறைகிறது, பறிப்பாரின்றி முல்லை வாடுகிறது!

''ஆண்மை தோன்ற
ஆடலர்க் கடந்த
வல்வேற் சாத்தன்''

என்று, பாட்டுடைத் தலைவன் சாத்தனைப் புலவர் படம் பிடித்துக் காட்டுகிறார். எப்படிப்பட்ட வீரன், எவ்வளவு ஆண்மையுடன் போராடுவான், எவ்வளவு வீரர்களை வென்று பெருமிதம் காட்டியிருக்கிறான், அவன் பிடித்த வேல் எவ்வளவு வலிதானது, வீர வரலாறுகளைப் படைத்தது? என்றெல்லாம் பெருவீரன் சாத்தன் — அவன் பெயரே பெருஞ்சாத்தன் —பற்றிக் கூறி, அத்தகைய ''வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை'' என்கிறார். ஆண்மை தோன்ற பல வீரர்களை வென்று வெற்றிக் குரல் எழுப்பியவன்.

எவ்வளவு தடவை இந்த மாவீரன் — பெருஞ்சாத்தன் முல்லை மலரை எடுத்துத் தந்திருப்பான்! அவன் தந்த மலரைப் பெற்று, காதலி மகிழ்ந்தாள்; மணம் பெற்றாள்

அவன் தந்த முல்லையை யாழின் வளைந்த கோட்டினால் மெல்ல வாங்கி, பாடகர் அமிழ்துறப் பாடினர்!

அவன் தந்த பூவைப் பெற்று புலவர் வாழ்த்தினர்.

நினைக்கும்பொழுது, புலவர் கீரத்தனரின் கண்களில் ஈரம் படர்கிறது! ''ஐயோ! அவனை இழந்து கொடியேனாய் நான் வாழ்கிறேன், நீயும் கொடியையாய் பூத்து நிற்கிறாய்..'' என்று முல்லைக்கொடியைப் பார்த்துக் கூறுகிறார். ''அவனையிழந்து, இளைத்து, கொடி போல, கொடுமையாளனாக, கொடியேனாக, நான் இருக்கிறேன்! நீயும், கொடியாகப் பூத்து இருக்கிறாய்! நான் வாழ்வதிலும் பலனில்லை. நீ பூத்து நிற்பதிலும் பலனில்லை!'' என்கிறார் புலவர்.



பாட்டில் கடைசி அடியில் ''முல்லையும்'' என்று வருவதிலுள்ள 'உம்' என்ற எச்சவும்மை, இவ்வளவு பொருளையும் தன்னுள் அடக்கியிருப்பதாக, புறநானூறு பாடலுக்கு உரை தந்த பழையவுரைகாரர் ஒருவர் கூறுகிறார்!

ஒல்லையூர் நாட்டில் பூத்த முல்லை மலரைப்போலிருக்கிறது, இப்பொழுது நம்மிடம் வருகிற பொங்கல், தருகிற 'மலர்' எல்லாம்!

ரசிகப்பெருமக்களுக்கு

பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

★

# தியேட்டர் டிலைட்

(உயர்தர சினிமா அரங்க உரிமையாளர்கள்)

கோயமுத்தூர்-1

தந்தி: தியேட்டர் டிலைட் போன்: 23436

பிரகாசமாய் நீடிக்கும்

நிக்கல்பூச்சு வேலைகள் அனைத்துக்கும்

சிறந்த இடம்

# முருகதாஸ்

(எலக்ட்ரோ பிளேட்டிங் ஒர்க்ஸ்)

137, படேல் ரோடு, கோயமுத்தூர்-641009

உங்கள் தேவைக்கு அணுகவும்

வெகுமதி அளிக்கக்கூடிய

பலதரப்பட்ட பரிசுப்பொருள்கள்

அலங்காரச் சாதனங்கள்

பொம்மைகள்......

# வெரைட்டி ஸ்டோர்ஸ்

ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர்-1

தொலைபேசி: 31805



## மறையாது மாணிக்கப் பரிதி

# சிட்டிபாபு

## குடும்பத்தினருடன் ஒரு பேட்டி

சிட்டி!

கழக வரலாற்றில் நீக்கமற நிறைந்துவிட்ட மாவீரன்!

அந்த மாவீரரின் பெயர் கழகக் குடும்பங்களின் அனைத்திலும் மரியாதையோடு உச்சரிக்கப்படுகிற திருப்பெயராகிவிட்டது.

குகை விட்டுக் கிளம்பும் வரிப்புலியென, மாற்றாரின் தாக்குதல்களையெல்லாம் தவிடுபொடியாக்கிவிட்டு, ஆவேசமாய், உணர்ச்சிப் பிழம்பாய் கழகப் பணிகளை ஆற்றிவந்த அந்த துடிப்பு மிக்க வாலிபப் பருவத்திலேயே சென்னை மாநகராட்சியின் மேயர் நாற்காலியில் அமர்ந்து அலங்கரித்தவர், ஆட்சி செய்தவர் அந்த மாவீரன்.

இளம் வாலிபனான அந்த மேயரின் கரம்பட்ட காரியங்கள் பளிச்சௌனப்பிரகாசித்ததைக் கண்டு பலபேர் மூக்கிலே விரல் வைத்தது உண்டு.

பரம்பரை பரம்பரையாக "சர்"களும், பகதூர்களும் திவான்களும், ராவ்சாகிப்புகளும் அலங்கரித்து வந்த மேயர் நாற்காலியில் உழைப்பை மட்டுமே மூலதனமாகக் கொண்ட இந்த கழகக் காளை அமர்ந்து அலங்கரித்தார்.

ஓராண்டு காலம்தான் மேயர் பதவி என்றாலும் அந்த குறுகிய காலத்தில் அவர் சாதித்த சாதனைகள் பலப்பல!

அவர் தொட்டுச் செய்த செயல் ஒவ்வொன்றும் கழகத்திற்குப் பெருமை சேர்ப்பதாய் அமைந்தது.

இருமுறை நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நாடாளுமன்றத்தில் அவன் பேசியதை விட தமிழகத்தில் ஆற்றிய கழகப் பணிகளே அதிகம்.

அவரது நிலைகுலையா நெஞ்சமும் எடுத்த காரியத்தை முடித்தே தீருவது என்ற உள்ள உறுதியும்தான் கழகத் தோழர்களை வெகுவாகக் கவர்ந்தது.

இலட்சியப் பிடிப்போடு வளர்ந்து வரும் அரசியல் வாதிகளுக்கு அவர் ஒரு முன்னுதாரணமாக விளங்கினார்.

இயக்கத்திற்கு நெருக்கடி ஏற்பட்ட நேரங்களிலெல்லாம் அவன் சிங்கமென கிளர்த்து நின்றான். அவன் தலைவர் கலைஞர் மீது கொண்டிருந்த அன்பு ஒருபடி மேலே போய்பக்தியாகவேஉருவெடுத்தது. ஏனெனில் துன்பங்கள் ஏற்பட்ட நேரங்களிலெல்லாம் தலைவருக்குத் தோள் கொடுத்துப் பழகியவர். எந்த சந்தர்ப்பத்திலும் அவர் சோடை போனதாக வரலாறே இல்லை

1972-ம் ஆண்டு!

துரோகக் கும்பலொன்று நடுத்தெருவில்மேடைபோட்டு கழகத்தை விமர்சித்து விட்டு வெளியேறி வேறு முகாம் அமைத்துக்கொண்ட போது, இந்த லட்சிய வீரர் ஊர் ஊராகக் கொள்கைப் பிரச்சாரம் செய்து அவர்களது முகத்திரையைக் கிழித்து நாட்டுக்கு அவர்களை அடையாளங் காட்டினார்.

இதைத்தான் சிட்டிபாபுவின் படத்திறப்பு விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் உருக்கமான தமது உரையில் தெளிவுபடுத்தினார்.

"கழகத்திலே எட்டப்பர்களுக்கு மத்தியிலே ஒரு ஊமைத்துரையாக சிட்டிபாபு இருந்தார்" என்ற தலைவரின் வாசகங்கள் அந்த லட்சிய வீரனின் அரசியல் வாழ்வுக்கு சூட்டப்பட்ட மணிமகுடமல்லவா!

கழகத்தின் பிரச்சாரச் செயலாளராக அவர் ஆற்றிய பணிகள் அனைவரையும் கவர்ந்தன. கடமை உணர்வுக்கு இலக்கணமாய்த் திகழ்ந்தார் அவன்.

கழக மாநாடுகள் அனைத்திலும் அவர் தனது கைவண்ணத்தைக் காட்டினார்.

மாநாடு தொடங்குவதற்கு முன்பே பந்தலுக்கு வந்து நிர்வாகிகளைச் சந்தித்து உற்சாகப்படுத்துவார், மாநாட்டுப் பந்தலுக்குள் கூட்டத்தை ஒழுங்குபடுத்த ஏற்பாடு செய்திடுவான்.

கூட்டல் கழித்தலின்றி பேச்சாளர் பட்டியலை தயாரிப்பதில் அனைவரது நம்பிக்கையையும் பெற்றவர் இந்த லட்சிய மறவன்.

கோவை மாநில மாநாட்டு ஊர்வலத்தில் தலைவர்கள் அலங்கார ரதத்தில் வீற்றிருக்க அவர்களுக்குப் பின்னால் கம்பீரமாக நின்று அந்த வீரத்தளபதி மக்கள் வெள்ளத்திடையே பவனி வந்த காட்சி நமது நெஞ்சங்களை விட்டு அகலக்கூடியதா?

கழகத்திற்காக இந்த ஆற்றல் மிக்க மறவன் ஆற்ற வேண்டிய பணிகள் இன்னும் எவ்வளவு இருக்கின்றன!

துணைவியர், குழந்தைச் செல்வங்கள் எழுபது வயது நிரம்பியதாய், கழக உடன் பிறப்புக்கள்அத்துணை பேரையும் கண்ணீர் கடலில் தவிக்க விட்டுவிட்டு பறந்துவிட்டதே அந்தப் பறவை!

இனி யாருக்கு யார் ஆறுதல் சொல்லிக்கொள்வது?

**சிட்டிபாபுவின் அண்ணன் சம்பந்தம் அவர்கள் நமது செய்தியாளரிடம் சிட்டியின் கடந்தகால அரசியல் வாழ்க்கையை யெல்லாம் விவரித்தார்.**

சிட்டியின் மூத்த துணைவியார் கங்காபாய் அம்மையார் அவர்களும் சில தகவல்களைச் சொன்னார்கள்.

அவையனைத்தும் பேட்டி வடிவில் கீழே தரப்படுகின்றன:—

செய்தியாளர்: சிட்டிபாபுவின் பள்ளிப் பருவத்தைப் பற்றிச் சொல்லுங்கள்.

சம்பந்தம்: 1931-ம் ஆண்டு திண்டிவனத்திலே பிறந்த இவர் கல்வி கற்றது பூராவும் சென்னை திருவல்லிக்கேணியிலுள்ள இந்து உயர்நிலைப்பள்ளியில்தான். அதன் பிறகு பெங்களூரிலும் படித்திருக்கிறார். இளமைபருவத்திலேயே மிகவும் துடிப்போடு இருப்பார்.

பள்ளிப் படிப்பு முடிந்ததுமே 'சண்டே அப்சர்வர்' பி. பாலசுப்பிரமணியத்துடன் இவருக்கு நெருக்கமான தொடர்பு ஏற்பட்டது. பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் தான் அண்ணாவிடம் சிட்டிபாபுவை அறிமுகம் செய்து வைத்தார்.

1955-ம் ஆண்டு 'விதவை மணம்' என்ற நாடகத்தைப் பேராசிரியர் தலைமையில் வால்டாக்ஸ் தியேட்டரில் நடத்திப் பாராட்டுக்களையும் பெற்றார்.

நாடாளுமன்ற தேர்தலில் பி. பாலசுப்பிரமணியம்நின்ற போது அவருக்காக அல்லும் பகலும் அயராது உழைத்தார்

செய்தியாளர்: ஆரம்ப காலந்தொட்டே நாகப்பையர் தெருவில்தான் குடியிருந்து வந்தாரா?

சம்பந்தம்: ஆரம்பத்திலிருந்தே இவர் குடியிருந்தது நாகப்பையர் தெருதான். அதனால் இப்பகுதியில் இவருக்கு நல்ல செல்வாக்கு. குடிசை வாசிகள், கைவண்டி இழுப்போர், ரிக்ஷா தொழிலாளர் சிறு கடை வியாபாரிகள் போன்ற ஏழைகளிடமும், நடுத்தர மக்களிடமும் அவர்களது சகோதரனைப் போலவே பழகி வந்தார். இதனால் தான் இவர் இறந்தபோது அவர்களெல்லாம் கண்ணீர் விட்டு கதறிய காட்சி நெஞ்சைக் கசக்கிப் பிழிகிறது.

செய்தியாளர்: மேயராவதற்கு முன்பு இவர் கட்சியில் வகித்த பொறுப்புக்கள் என்ன?

சம்பந்தம்: 58-வது வட்டத்தில் அறிஞர் அண்ணா மன்றம் ஒன்று இருந்தது. அதன் செயலாளராக இருந்து திறம்பட செயல்பட்டு வந்தார். ஆயிரம் விளக்குப் பகுதிச் செயலாளராகவும் இவர் இருந்திருக்கிறார். கட்சியின் பொறுப்பான பதவியிலிருந்து பணியாற்றியதால் அவருக்கு இளமையிலேயே நல்ல அனுபவம் ஏற்படுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது.

செய்தியாளர்: முதன் முதலில் அவர் கவுன்சிலர் தேர்தலில் எப்போது நின்றார்?

சம்பந்தம்: முதன் முதல் கவுன்சிலர் தேர்தலுக்கு அவர் போட்டியிட்டது 1958 ஆண்டு இதே 58-வது வட்டத்தில்தான்.

செய்தியாளர்: மேயராவதற்கு முன்பு இவர் ஆற்றிய சிறப்பான பணிகள் என்னென்ன?

சம்பந்தம்: 'ரிப்பன் மாளிகை ரகசியம்' என்ற நூலை வெளியிட்டு மாநகராட்சியையே கதிகலங்க வைத்தார். மாநகராட்சி கணக்குக் குழுவின் தலைவர் பொறுப்பையும் வகித்து வந்தார். 'ஞாயிறு' என்ற தமிழ் வார ஏட்டுக்கு இவரே ஆசிரியராக இருந்து திறம்பட நடத்தி வந்தார். அதன்பிறகுதான் மேயரானார்.

செய்தியாளா: இவர் மேயராக இருந்தபோது நடைபெற்ற மறக்க முடியாத சம்பவம் எதையாவது • குறிப்பாகச் சொல்ல முடியுமா?

சம்பந்தம்: 1961-ம்ஆண்டு எடின்பரோ கோமகன்சென்னை வந்திருந்தாா. அவருக்கு சென்னைப் பல்கலைக் கழகம் மிகப் பெரிய வரவேற்பொன்றையளித்தது. அந்த வரவேற்பில் பல்கலைக் கழக செனட் உறுப்பினாகள் அனைவரும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டபோது எடின்பரோ கோமகன் ஆச்சரியத்துடன் சிட்டிபாபுவை நோக்கி "இவ்வளவு குறைந்த வயதில் செனட் உறுப்பினராகயிருக்கும்உன்னைநான் பாராட்டுகிறேன். ஆண்டவன் உன்னைக் காப்பாற்றுவதாக" என்றாா.

"என்னை ஆண்டவன் காப்பாற்றுவதைவிட என்னை உருவாக்கிய என் தலைவர் மீதுதான் நம்பிக்கை வைத்திருக்கிறேன். என் வாழ்நாளை அவருக்கு அர்ப்பணிக்கவும் கடமைப்பட்டுள்ளேன்" என சிட்டிபாபு அவருக்கு பதில் கூறினார்.

சிட்டி மேயராக இருந்த போதுதான் லால்பகதூா சாஸ்திரிக்கு சென்னை மாநகராட்சியின் சாாபில் வரவேற்பளிக்கப்பட்டது.

செய்தியாளா: மேயராக இருந்தபோது இந்த வட்டத்தின் வளர்ச்சிக்காக அவர் செய்த மேம்பாட்டுப் பணிகள் என்ன?

சம்பந்தம்: இந்த வட்டத்தில் பாலசுப்பிரமணியம் பூங்கா ஒன்றை நிறுவினாா. குழந்தைகள் வளர்ப்பு விடுதியை ஏற்படுத்தியுள்ளார். உயர்நிலைப் பள்ளி ஒன்றை நிறுவவும் இவர்தான் அரிய முயற்சிகளை எடுத்துக் கொண்டார்.



தலைவருடன் சிட்டிபாபு

விளையாட்டு அரங்குகள் சிலவற்றையும் ஏற்படுத்தியுள்ளார்.

செய்தியாளர்: மேயராக இருந்தபோது இவர் வெளிநாடு சென்றிருக்கிருரா?

சம்பந்தம்: ஆம்! இவர் மேயராக இருந்தபோது பெல்கிரேடு நகரில் நடைபெற்ற உலக மேயர்கள் மாநாட்டில் கலந்து கொண்டார்.

செய்தியாளர்: அண்ணுவோடு இவருக்கு நெருக்கமான தொடர்பிருந்ததல்லவா

சம்பந்தம்: ஆமாம்! அண்ணுவோடும் அவரது குடும்பத்தினரோடும் இவருக்கு நெருக்கமான தொடாபிருந்தது. 'ஹோம் ரூல்' ஏட்டின் ஆசிரியர் பொறுப்பையும் அவர் ஏற்ருர். பத்திரிகைக்குவேண்டியதையெல்லாம் பேரறிஞர் அண்ணு அவர்கள் எழுத. அது அச்சிட்டு வெளி வரும் பொறுப்பை சிட்டிபாபு கவனித்து வந்தார்.

சிட்டிபாபு மீது அண்ணு அவர்கள் தணியாத அன்பு வைத்திருந்தார். அமெரிக்காவில் அறுவை சிகிச்சை முடிந்து தமிழகம் திரும்பி ஓய்வெடுத்துக் கொண்டிருந்த அண்ணு அவர்கள் சிட்டியின் துணைவியாருக்குக் குழந்தை பிறந்திருக்கிறது என்று கேள்விப்பட்டதும் நேரில் வீட்டுக்கு வந்து, வாழ்த்திவிட்டுச் சென்ருர்.

செய்தியாளா: எத்தனை முறை கவுன்சிலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்?

சம்பந்தம்: இரண்டு முறை கவுன்சிலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினர் தேர்தலில் நின்று வெற்றிபெற்ருர்.

1967-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் செங்கற்பட்டு நாடாளுமன்ற தொகுதியில் முன்ளுள் அமைச்சர் ஓ. வி. அளகேசனை எதிர்த்துப் போட்டியிட்டு



'கழகக் குரல்' ஆசிரியர் சிட்டிபாபு எம். பி. கலைஞர் பொன்விழா மலரை தலைவர்களிடம் அளிந்து மகிழும் காட்சி இது.

லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் அவரை வெற்றி பெற்ருர். 71-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் அதே தொகுதியில் வெற்றிபெற்ருர்.

தனது தொகுதியின் வளர்ச்சிக்காக இவர் சிறப்பான பணிகளைச் செய்திருக்கிருர். மருத்துவமனைகள், பாலங்கள் போன்றவற்றை ஏற்படுத்தவும் சுற்றுலாப் பயணிகளை மேலும் கவரத்தக்க அளவுக்கு மகாபலிபுரத்தை மேம்படுத்தவும் இவர் முயற்சிகளை மேற்கொண்டார. திருப்போரூர் அறக்கட்டளையின் தலைவராக இருந்து இவர் ஆற்றிய பணிகள் சிறப்புமிக்கவை.

செய்தியாளர்: இதற்கு முன்பு எந்தெந்த போராட்டங்களில் கலந்து கொண்டிருக்கிருர்?

சம்பந்தம்: ஏறத்தாழ கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கு பெற்றிருக்கிருர்.

செய்தியாளர்: சிட்டியோடு பிறந்தவர்கள் எத்தனை பேர்? அவருக்கு எத்தனை குழந்தைகள்?

சம்பந்தம்: அவரோடு பிறந்தவர்கள் நாங்கள் மூன்று சகோதரர்கள். ஒரு சகோதரி. சகோதரியின் பெயர் சகுந்தலா. எங்களோடு பிறந்த நீலகண்டன் என்ற சகோதரர் இறந்துவிட்டார. நானும், ராஜாவும் இருக்கிருேம்.

சிட்டியின் முதல் துணைவியார் பெயர் கங்காபாய். இவருக்கு சேகர் (15) சுகுமாறன் (13) என்ற இரண்டு புதல்வாகள் இருக்கிருர்கள்.

இரண்டாவது துணைவியார் பெயர் ராஜலட்சுமி. இவருக்கு மாலதி (12) என்ற பெண்ணும், விசுவேசுவரன் (9) என்ற பையனும் இருக்கிருர்கள்.

எங்கள் சகோதரர் நீலகண்டன் இறந்ததும் அவரது மகன் சந்திரசேகரனை சிட்டிபாபுவே வளர்த்து வந்தார்.

செய்தியாளர்: 1971-ம் ஆண்டு நடிகர் கட்சி பிரிந்ததும் இவருடைய பணியில் ஒரு வேகம் ஏற்பட்டது. அல்லவா!

கங்காபாய் அம்மையார்: ஆமாம்! நிச்சயமாக 1971—ம் ஆண்டு நடிகர் கட்சி தனியாகப் பிரிந்ததுமே இவரது வேலைகளில் வேகம் அதிகரித்தது. இரவு பகலென்று பாராமல் கழகப் பணியாற்றி வந்தார்.

வீட்டில் ஓய்வாக இருக்கும் போது கலைஞர் தலைமையின் சிறப்பைப் பற்றியும், அவரது ஆற்றலைப் பற்றியும் சொல்லிச் சொல்லி பெருமைப்பட்டுக்கொள்வார்.

(கங்காபாய் அம்மையார் தேம்பி தேம்பி அழுகிருர். கண்களில் பெருக்கெடுக்கும் நீரை துடைத்துக்கொள்கிருர்.

சிட்டிபாபுவின் மறைவைத் தாங்கிக்கொள்ள முடியாமல் கலைஞர் வடித்த கண்ணீர் வரிகள் நம் கண் முன்னே நிழலாடுகின்றன.

அய்யோ சிட்டி! சிட்டி! நீ மறைந்துவிட்டாயா! அய்யோ! என்ஞல் நம்ப முடியவில்லையே! கொள்கை முரசமே! தியாக மறவனே! கழகத்தின் தூணே! எங்கள் துணையே! நீ போய்விட்டாயா? அய்யகோ! இன்று இந்தக் காட்சியா காணவேண்டும்! அந்தோ! நான் யாருக்கப்பா ஆறுதல் சொல்வேன், என்ஞல் தாங்கமுடியவில்லையே! நான் என் செய்வேன்!



சிட்டிபாபுவின் உடலுகது இறுதி மரியாதை.

ரசிகப் பெருமக்களுக்கும்

தியேட்டர் உரிமையாளர்களுக்கும்

எங்கள் இதயங்கனிந்த

# பொங்கல் வாழ்த்துக்கள்

சிறந்த படங்களை வினியோகிப்பவர்கள்:

## குரு எண்டர்பிரைஸஸ்

மற்றும்

## குரு பிக்சர்ஸ் சர்க்யூட்

கோபாலபுரம், கோயமுத்தூர்-641 081

தொலைபேசி: 34479






கால்நடை மற்றும் கோழிப்பண்ணை
உற்பத்தி பெருக

## ஏ. வி. எம். கால்நடை கோழித் தீவனங்கள்

சத்தூட்டம் மிக்கவை!
சகாயமானவை!

தயாரிப்பாளர்கள் :-

## ஏ. வி. எம். கேட்டில் & பவுல்டரி ஃபீட்ஸ் மேன்யுபேக்சரிங் இண்டஸ்ட்ரீஸ்.

25 / 689, ரங்கே கவுடர் வீதி, கோயமுத்தூர்-1

தொலைபேசி: அலுவலகம் 23683, இல்லம் : 24460

அணுகுங்கள்

எங்களிடம் டர்னிங், வெல்டிங் சிலிண்டர், ஹெட்டு வால்வு, ரீபேசிங் வால்வு, கட்டரிங் சிட்டிங், சிலிண்டர் ஹெட்டு சர்பேஸ், கூல்வெல்டிங், கிரைண்டிங் சிலிண்டர், பிளாக் ரிபோரிங், லைன் போரிங், கனெக்ட்ராடு போரிங், சிலிண்டர் ஹெட் மற்றும் ஆட்டோ மோபைல் உதிரி உறுப்புகளுக்கு குறித்த காலத்தில் ரீ கண்டிசன் செய்யப்படும்.

## சந்தர் டர்னிங் ஒர்க்ஸ்

9 / 124 - டி; கிராஸ்கட் ரோடு,

காந்திபுரம் — கோயமுத்தூர்

# தியாகச் செம்மல் சாத்தூர் பாலகிருஷ்ணன்

## குடும்பத்தினருடன் ஒரு பேட்டி

குன்றனையநெடுந்தோள்கள் கொள்கை உறுதி படைத்த நெஞ்சு, அன்பு கலந்த பார்வை, அமைதி தவழும்முகம், இடையறுகழகப் பணி — இவர்தான் சாத்தூர் நகரக் கழகச் செயலாளர் பு. பாலகிருட்டினன்.

கடந்த ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாள் பிற்பகலில் சாத்தூரிலிருந்து சென்னைக்குச் செய்தி வருகிறது, சாத்தூர் பாலகிருட்டினன் மதுரையில்திடீரென்று மாரடைப்பால் மரணமடைந்துவிட்டார் என்று.

நெஞ்சில் ஈட்டிகளைப் பாய்ச்சும் அதிர்ச்சி தரத்தக்க இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டதும் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் பதறிப்போகிறார். பொதுச் செயலாளர் நாவலர், பொருளாளர் பேராசிரியர் மற்றும் முன்னணியினருக்குத் தகவல் தரப்படுகிறது. அனைவரும் வேதனையுற்றனர்.

வேதனை தலைவரதுநெஞ்சை வாட்டி எடுக்கிறது. லட்சியப் பிடிப்பு நிறைந்த செயல் வீரரை இழந்துவிட்டோமே என்ற வேதனையால் அவரது கண்கள் குளமாகின்றன.

பாலகிருட்டினனின் மறைவு குறித்து 'முரசொலிக்கு' கண்ணீர்க்காவியம் ஒன்றைத் தீட்டிக் கொடுத்துவிட்டுப் புறப்படுகிறார்.

அக்கக் கண்ணீர்க் கடிதத்தின் தலைப்பு—'அவர் தாளுக்கு மாலை சூட்டுகிறேன்' என்பதாகும். அதிலே தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுள்ள வரிகள் வருமாறு:

''இதோ ஒரு விளக்கு அணைந்துவிட்டது. கார்த்திகை தீபம்போல் வரிசை வரிசையாக உள்ள கழக விளக்குகளில் ஒரு விளக்கு அணைந்து போய்விட்டது.

''கழக மெனும் தோட்டத்தில் பூத்திருந்த ரோஜாக்களில் ஒரு கறுப்பு ரோஜா உதிர்ந்துவிட்டது.

''லட்சிய கீதம் பாடிக் கொண்டிருந்த பூஞ்சோலைக் குயில்களில் ஒன்றின் குரல் வளையைச் சாவு நசுக்கிப் போட்டுவிட்டது.

''சாத்தூர் பாலகிருஷ்ணன் — அய்யோ! எவ்வளவு உயரமான உருவம்! எத்துணை கம்பீரத் தோற்றம்! எவ்வளவு இனிய இயல்பு! அடக்கம்! அமைதி! அன்பின் பெருக்கு! எல்லாமே பொதிந்திருந்த அந்த ஆருயிர் உடன்பிறப்பு, இனி திறக்கமாட்டேன் என்று விழிகளை மூடிக் கொண்டதாமே! இனி எழுந்து நடமாடமாட்டேன் என்று தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டதாமே!

''அந்தப் பகுதிக்குச் செல்லும்போதும் பார்ப்பேன். முகவை மாவட்டம் மட்டுமல்ல; வேறு பக்கத்து மாவட்டங்களிலும் நான் சுற்றுப்பயணம் செய்யும் போதும் எதிரே வந்து நிற்பார்.

''என்னையே கனிவோடு நோக்குகிற ஒரு குளிர்ந்த பார்வை! கழகம், எப்படியெல்லாம் சாத்தூர் பகுதியிலே வளர்க்கப்படுகிறது என்பது பற்றிய விளக்கங்கள் ''எங்கள் ஊர்க் கூட்டத்துக்கு எப்போது வருகிறீர்கள்?'' என்ற மிருதுவான — வாஞ்சை நிறைந்த ஒரு கேள்வி!

''இனி, நான் அந்தப் பகுதிகளுக்குச் செல்லும்போது அந்தப் பாச மிகு உருவத்தைச் சந்திக்க முடியாது....

''....அவரை நேரிலே பார்த்தவர்கள், அவர் காலமாகிவிட்டார் என்ற செய்தியை நம்ப முடியாதுதான்!

அவர் இத்தனை நாள் உழைத்த உழைப்புக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல — பாட்டிற்கெல்லாம் கலசம் அமைத்தாற்போல — அவருடைய சாவும் ஒரு சரித்திர ஏடாகிவிட்டது.

''உடன்பிறப்பே, நமது கண்ணீரால் அவர் கால்களைக் கழுவுவோம். அவர் எத்தனை யோமுறை என் தோளுக்கு மாலை சூட்டியிருக்கிறார். இன்று நான் அந்த உத்தமத் தியாகத் திருவுருவத்தின் தாளுக்கு மாலை சூட்டுகிறேன்

''கண்ணீர்!—

''கண்ணீர்!

''கண்ணீர்!

''நமது கண்ணீர் சங்கமமாகட்டும். மறைந்தவரின் இலட்சியங்களை நிறைவேற்ற உறுதி எடுத்துக் கொள்வோம்.

''அவர் வாழ்க!

''அவர் பெயர் நிலைத்திடுக!''

—இவ்வாறு உடன்பிறப்புக்கு மடல் தீட்டிவிட்டு வேகமாக சாத்தூருக்குப் புறப்படுகிறார் — கலைஞர்.

அவருடன் முன்னாள் அமைச்சர் கண்ணப்பன், ஓ. பி. ராமன், ஆகியோரும் புறப்படுகின்றனர்.

கழகத் தோழர்களின் இன்ப துன்பங்களில் இரண்டறக் கலந்து பங்கேற்கும் தலைவரது வருகைச் செய்தியைக் கேள்விப்பட்டதும் சாத்தூர் நகரமே திரண்டு நிற்கிறது.

பாலகிருட்டினன் தியாகத் திரு உடல் மீது தலைவர் மலர் வளையம் வைத்து இறுதி மரியாதை செலுத்துகிறார். இறுதி ஊர்வலச் செலவுக்காக பாலகிருட்டினன் குடும்பத்தாரிடம் தலைமைக் கழகத்தின் சார்பில் ரூ. 1000 வழங்குகிறார்.

தலைவரும், முன்னாள் அமைச்சர்களும் முன்னே நடந்து செல்ல இறுதி ஊர்வலம் புறப்படுகிறது.

கொள்கைக் குன்றும் பாலகிருட்டினன் மறைவு தமது நெஞ்சத்தை எவ்வளவு தூரம் கசக்கிப் பிழிந்துவிட்டது என்பதை சோகம் இழையோடும் குரலில் தலைவர் கலைஞர் தமது இரங்கலுரையில் குறிப்பிடுகிறார்.

துக்கம் அவரது தொண்டையை அடைக்கிறது. பாலகிருட்டினன் மீது என்றுமே தலைவருக்குத் தணியாத அன்பு.

இவ்வளவு சிறப்புக்களுக்குரிய பாலகிருட்டினனின் வாழ்க்கைக் குறிப்பை முரசொலி பொங்கல் மலரில் படங்களுடன் வெளியிட விருப்பம் கொண்டு நமது செய்தியாளர் சாத்தூருக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

தமது இளமைக் காலந்தொட்டு அரசியலில் இரண்டறக் கலந்துவிட்ட பாலகிருட்டினன் விளம்பரத்தையே விரும்பாதவர். தனது படத்தை எடுத்து இவர் வீட்டில் மாட்டிக்கொள்ளவில்லை. இவர் குடும்பத்தோடு எடுத்த படமும் இல்லை. பல விழாக்களை இவர் ஏற்பாடு செய்திருக்கிறார். ஆனால், விழா மேடையில் ஒரு மூலையில் இவர் அமைதியாக அமர்ந்திருப்பதையோ அல்லது நின்றிருப்பதையோ தான் படங்களில் காணமுடிகிறது.

இவரது துணைவியார் சண்முகத்தாய் அம்மையார், மகன் பா. செண்பகலிங்கம், நகரக் கழக அவைத் தலைவர் செ. அய்யாச்சாமி ஆகியோரிடம் நமது செய்தியாளர் பேட்டி கண்டபோது பாலகிருட்டினனின் வாழ்க்கைக் குறிப்பு பற்றிய விவரங்கள் முழுமையாகக் கிடைத்தன.

பேட்டி வடிவிலேயே வாழ்க்கைக் குறிப்பு இங்கே தரப்படுகிறது.

செய்தியாளர்: பாலகிருட்டினனின் இளமைப் பருவ வாழ்க்கையைப் பற்றிய குறிப்புக்களைச் சொல்ல முடியுமா?

நகரக் கழக அவைத் தலைவர் அய்யாசாமி: பாலகிருட்டினன்பிறந்ததே சாத்தூர் தான். 1923-ம் ஆண்டு பிறந் இவர் எட்வர்ட் உயர்நிலைப் பள்ளியில் 8-வது வகுப்பு வரைப் படித்திருக்கிறார். வசதிக் குறைவான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அந்தக் காலத்தில் இதைவிட அதிகமாகப் படிக்க வாய்ப்பேது!

செய்தியாளர்: சுயமரியாதை இயக்கத்தில்இவர் தீவிரப் பங்கு பெற்றவரா?

அய்யாசாமி: என்ன அப்படிக் கேட்டுவிட்டீர்கள்! சுயமரியாதை இயக்கந்தானே பாலகிருட்டினனை லட்சியச் சிங்கமாக வளர்த்து தந்தது. சுயமரியாதை இயக்கத்தில் இவர் தீவிர பங்கு பெற்றார். தந்தை பெரியாரின் உரம் மிக்க கொள்கைகள் இவருக்குத் தீனியாக அமைந்தன. சாதிமத வேறுபாடுகளையும், சனாதனச் சனியனையும் எதிர்த்து பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரைகள் இவரைக் கவர்ந்தன.

கட்டுப்பாற்றல் மிக்க தமது வாலிபப் பருவத்தில் தந்தை பெரியாரையும் பேரறிஞர் அண்ணா அவர்களையும் பல முறை அழைத்து இவர் சாத்தூரில் கூட்டம் போட்டிருக்கிறார். சாத்தூர் பகுதியில் சுயமரியாதைக் கருத்துக்கள் பரவ இவர் முழு முதற் காரணமாக இருந்தார். 1938-ம் ஆண்டு சென்னை சென்று தந்தை பெரியாரோடு தங்கியிருந்தார். பின்னர் மொழிப் போராட்டத்தில் கலந்து கொண்டு கைது செய்யப்பட்டார். 6 மாத சிறை தண்டனை இவருக்கு வழங்கப்பட்டது. சென்னை மத்திய சிறையில் 4 மாதங்களும் வேலூர் சிறையில் 2 மாதங்களும் இருந்தார். 1944-ம் ஆண்டு முதல் 47 வரை சாத்தூர் நகர திராவிடர் கழகச் செயலாளராகப் பொறுப்பு வகித்து பம்பரமென சுற்றிச் சுழன்று பணியாற்றியிருக்கிறார்.

செய்தியாளர்: இது தவிர இவர் கலந்துகொண்ட போராட்டங்கள் வேறு ஏதேனும் உண்டா?

அய்யாச்சாமி: கழகம் நடத்திய போராட்டங்களில் இவர் பங்கு பெற்றார். கழகச் செயல் வீரர்களை இதில் பங்கு பெறுமாறு ஊக்குவித்தார்.

ஏராளமான கழகத்தோழர்கள் இப்போராட்டத்தில் பங்கு பெற்றனர். இவரது சொல்லும் செயலும் அவர்களுக்குப் பெரும் ஊக்கத்தை அளித்து வந்தது. ஆனால், இப்போராட்டத்தில் பாலகிருட்டினன் கைது செய்யப் படவில்லை.

செய்தியாளர்: (பாலகிருட்டினன் துணைவியார் சண்முகத்தாய் அம்மையாரிடம்) உங்கள் திருமணம் எந்த ஆண்டு நடைபெற்றது?

சண்முகத்தாய் அம்மையார்: எங்கள் திருமணம் 1949-ம் ஆண்டு நடைபெற்றது. சீர்திருத்த முறையில் நடைபெற்ற கலப்புத் திருமணம். தந்தை பெரியாரின் கொள்கைகளை இவர் தனது சொந்த வாழ்க்கையிலேயே நடைமுறைப்படுத்திக் காட்டினார்.

செய்தியாளர்: உங்களுக்கு எத்தனை குழந்தைகள்!

சண்முகத்தாய்அம்மையார்: — மூன்று குழந்தைகள். இரண்டு பெண்கள், ஒரு பையன், மூத்த பெண் பெயர் கஸ்தூரி. இவளுக்குத் திருமணமாகி குழந்தைகள் இருக்கின்றன. அடுத்தது பையன், பெயர் செண்பகலிங்கம், எஸ். எஸ். எல். சி. இந்த அக்டோபரில் தேர்ச்சி பெற்றிருக்கிறான். அடுத்த ஆண்டு கல்லூரிக்கு அனுப்ப வேண்டும். கடைசியாக பெண். பெயர் திலகம். 8-வது வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறாள்.

செய்தியாளர்: அரசியலில் இளமைப் பருவத்திலிருந்தே தீவிரப் பங்கு கொண்ட இவர் குடும்பத்தைக் காக்க என்ன தொழில் செய்து வந்தார்?

சண்முகத்தாய் அம்மையார்: முதலில் தீப்பெட்டி தயாரிக்கும் தொழிலும், பிறகு பஞ்சு வியாபாரமும் செய்தார். இதில் வரும் வருமானத்தைக் கொண்டு தான் குடும்பம் நடத்தினோம். வேறு சொத்து சுகங்கள் எதுவும் எங்களுக்குக் கிடையாது.

செய்தியாளர்: இவர் எத்



1961 ல் சாத்தூர் வந்த தலைவருடன் பாலகிருட்டினன்

## கண்ணீர்!
## கண்ணீர்!
## கண்ணீர்!

## நமது கண்ணீர் சங்கமம் ஆகட்டும்! மறைந்தவர்களின் இலட்சியங்களை நிறைவேற்ற உறுதி எடுத்துக் கொள்வோம்!

## அவர் வாழ்க! அவர் பெயர் நிலைத்திடுக!

**-தலைவர் கலைஞர்**

தனை வருடம் நகரக் கழகச் செயலாளர் பொறுப்பை வகித்தார்?

அய்யாசாமி: 1950-ம் ஆண்டிலிருந்து இறக்கும் வரை அதாவது 25 ஆண்டு காலம் இவர்தான் நகரச் செயலாளராக இருந்து வந்தார். கழகத்தவர் அனைவரும் இவர் மீது நீங்காத அன்புகொண்டிருந்தனர். எல்லாப் பிரச்சினைகளிலும் இவர் மற்றவர்களைக் கலந்தாலோசித்து அரவணைத்துச் சென்றதால் இவருக்கு எதிர்ப்பு என்பதே இல்லாமல்இருந்தது. கழகப் பணிகளும் இம்மியளவு கூடத் தடையின்றி நடந்து வந்தன.

செய்தியாளர்: நகரச் செயலாளர் பொறுப்பு தவிர வேறு ஏதாவதுபதவிகளைஇவர் வகித்திருக்கிறாரா?

செண்பகலிங்கம்: ஆமாம்! 1973 ஆண்டிலிருந்து ஏறத்தாழ மூன்றாண்டு காலம் சிவகாசி நிலவள வங்கியின் தலைவர் பொறுப்பைத் திறம்பட வகித்துவந்தார். இடமார நாடார் சங்க அறக்கட்டளையின் தலைவர் பொறுப்பையும் வகித்து வந்தார். எங்கள் தந்தை தலைவராக இருந்த போதுதான் இச்சங்கத்திற்கு அழகான கட்டிடம் ஒன்று கட்டி, கிணறு வெட்டி பல அபிவிருத்திப் பணிகளைச் செய்தார். ஏற்றுக்கொண்ட பொறுப்பை நேர்மையாகவும் நாணயமாகவும் திறம்படச் செய்து முடிப்பவர் என்ற நல்ல பெயர் என்றுமே எங்கள் தந்தைக்கு இப்பகுதியில் உண்டு. அதுவே எங்கள் குடும்பத்துக்கு அவர் விட்டுச் சென்றிருக்கிற பெருமை.

அய்யாசாமி (குறுக்கிட்டு): 'தியாகராஜா' கால்பந்தாட்டச் சங்கத்தைப் பற்றிச் சொல்லாவிட்டால் அவரது வாழ்க்கைக் குறிப்பு முழுமையானதாக அமையாது. பாலகிருட்டினன் சிறந்த கால்பந்தாட்ட வீரர். 'தியாகராராஜா' கால் பந்தாட்டச் சங்கம் என்ற பெயரில் ஒன்றை நிறுவி பல அரிய கால் பந்தாட்டப் போட்டிகளை இங்கே நடத்தியிருக்கிறார்.

36 ஆண்டுகள் தொடர்ந்து இச்சங்கத்தின் தலைவராக இவர் இருந்து 36 ஆண்டு விழாக்களை நடத்தியிருக்கிறார். தியாகராஜ பாகவதர் 6 முறை இச்சங்கத்தின் ஆண்டு விழாவுக்கு வந்திருக்கிறார். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், நடிகவேள் எம். ஆர். இராதா போன்ற நடிகர்கள் பலமுறை இச்சங்க ஆண்டு







விழாவுக்கு வந்திருக்கிறார்கள்.

செய்தியாளர்: கழகத் தலைவர்கள் உங்கள் இல்லத்துக்கு வருகை தந்திருக்கிறார்களா?

சண்முகத்தாய் அம்மையார்: கலைஞர் அவர்கள் இரண்டு முறை எங்கள் இல்லத்துக்கு வருகை தந்திருக்கிறார். 1957-ம் ஆண்டு கலைஞர் அவர்கள் தேர்தலுக்காக நிதி சேர்ப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்த நேரம். தமிழகமெங்கும் சூறாவளியான சுற்றுப் பயணம் செய்து நிதி சேர்க்கிறார். அப்போது சாத்தூருக்கு வந்த கலைஞர் எங்கள் வீட்டுக்கு வருகை தந்து, நாங்கள் உண்டியலில் சேர்த்து வைத்திருந்த தேர்தல் நிதியைப் பெற்றுக்கொண்டு எங்கள் வீட்டில் சிறிது நேரம் தங்கி ஓய்வெடுத்துச்சென்றார். இது எங்கள் வாழ்க்கையில் நாங்கள் மறக்க முடியாத நிகழ்ச்சி. பேரறிஞர் அண்ணா அவர்களும், நாவலரும் எங்கள் வீட்டுக்கு வருகை தந்திருக்கிறார்கள். அண்ணாவோடு இவருக்கு நெருக்கமான தொடர் உண்டு. முரசொலி, கமகக் குரல் ஆகிய ஏடுகளின் ஏஜெண்டாகக்கூட இவர் இருந்திருக்கிறார்.

(அய்யாசாமி குறுக்கிட்டு) பாலகிருட்டினனின் இறுதி ஊர்வலம் எனது வாழ்நாளிலேயே மறக்க முடியாத ஊர்வலம். அன்று கூடியது போன்ற கூட்டத்தை நான் சாத்தூர் நகரில் இதுவரையில் கண்டதேயில்லை. பாலகிருட்டினனின் சடலத்தின் மீது மலர் வளையம் வைத்துவிட்டு கலைஞர் கண்ணீர் விட்டதைக் கண்டு கூடியிருந்தவர்களெல்லாம் ஓவெனக் கதறியழுத காட்சி மிக மிக உருக்கமானது. தொண்டர்கள் மீது தலைவர் உயிரையே வைத்திருக்கிறார் என்பதற்கு இதைவிட வேறுஎன்ன சான்று வேண்டும்? இறுதி ஊர்வலத்தை ஒழுங்குபடுத்துவதற்குள் காவல் துறையினர் தடுமாறிப் போய்விட்டனர். கூட்டம் மேலும் மேலும் பெருகிக் கொண்டே வந்தது. இறுதி ஊர்வலத்தின் முன்னே தலைவரும் முன்னாள் அமைச்சர்களும் நடந்தே சென்றனர்.

சண்முகத்தாய் அம்மையார்: தலைமைக் கழகத்திலிருந்து இப்போது எங்களுக்கு மாதம் 200 ரூபாய் அனுப்புகிறார்கள். அது பெரிதும் உதவிகரமாக இருக்கிறது. இந்த உதவியை நாங்கள் என்றென்றும் மறக்கமாட்டோம்.

★



# இலக்கியப் பொங்கல்



**விசித்திர சித்தன்**

"பொங்குக பொங்குக!
பொங்கல், பாலோ பால்!
பொங்குக பொங்குக
பொங்கலோ பொங்கல்."

குளித்துப் புத்தாடை அணிந்து மங்கலப் பொட்டிட்டு, பூச்சூடி, புதுப்பானைக்குக் காப்பிட்டு, பால் நீர் உலையிட்டு அது பொங்கி வழியும் போது மங்கல மங்கையர் இப்படி மகிழ்ச்சிக் குலவையிடுவது தமிழக மரபு.

தை நீராடலும், தையூண் உண்ணலும், வேளாண் மக்களுக்குத்தலையாய சிறப்புவிழா. விளைச்சல் பலன் காணும் கண்டுமுதல் காணும் மகிழ்ச்சிப் பண்டிகை தை முதல் நாள் — தலைப் பொங்கல் — தலைப் பலன் காண கொண்டாட்டம்.

உண்டியளித்து மக்கள் தமக்கு உடலூட்டமும் உயிர் வளர்ச்சியும் அளிக்கும் பெண்பாலினர்க்கு, அத்தாய்மைப் பணிக்கான உணவளித்தல் பொருட்டு தானிய விளைச்சல் செல்வத்தைக் காணும் முதல் காட்சி, பால் விழா இது. எனவே, பால் நீர் உலையிட்டு, அது பொங்கி வடியும் போதினில்—

"பொங்குக பொங்குக
பொங்கல் பாலோ பால்
பொங்குக பொங்குக
பொங்கலோ பொங்கல்"—

எனவும் மகிழ்ச்சிக் குரல் எழுப்புவர்.

கார்த்திகையில் கார் மழை திகைந்து பொழிந்திடும்.

மார்கழியில் மாரி கழிந்திடும்: மார்கழித் திங்களின் நின்ற மதிக்கதிர்கள், பயிர்களுக்கு வளர்ச்சி அளித்திடும்.

மார்கழிப் பனி, பயிர்களையும், தானியக் கதிர்களையும் பாதிக்கும் பூச்சிகளையும், நோய்க் கிருமிகளையும் ஒழித்திடும். பால்போன்ற பனித்துகள்கள் தானியத்தின் பால் வளத்தை மிகுக்கிடும்.

மாசி—மகசூல் மாதம்.

பங்குனி—மகசூலைப் பங்கிட்டு உண்ணும் மாதம்.

தை எனில் இணைத்தல் — கூட்டுதல் என்பார்கள். தைத் திங்களில் விளைச்சல் பலன் கூட்டிடத் தொடங்கும்.

தலைப்பிள்ளை° குடும்பத்துக்குப் பெருமகிழ்ச்சி அளிப்பது போல, தலைக்கதிர் பலன் வெற்றி வாய்ப்பும் பெருமகிழ்வும் அளித்திடலால், தலைப்பிள்ளைப் பிறப்பு விழாவைப் போன்று இதனையும் சிறப்பாகக் கொண்டாடுவது இயல்ப.

குழந்தைக்கு முதல் உணவு தாய்ப்பால். இதன் அடிப்படையிலேயே முதற் கதிர் தானியம் கொண்டு பால் பொங்கல் பொங்குவது நடைமுறையாகிறது.

உயிரினங்களுக்கு ஊட்டச் சக்தியும் உயிர் வளர்ச்சியும் அளிப்பது கதிரவன். இதனால் பச்சை குழந்தைகளுக்கு முதல் காட்சியாக காலைக் கதிரவனின் பொன்னொளி காட்டுவர். செம்மஞ்சள் வெயிலில் படுக்கவைப்பர். கதிரவனால் உடல் ஊட்டம் பெறுவதேபோல் தானியக் கதிர்களும் ஊட்டம் பெறுகின்றது. அதனால்தான் தானியங்களுக்கும் கதிர் எனப்பட்டது.

முதற் கதிர் அரிந்து, தானிய மணிகளை எடுத்துப் பொங்கி, கதிரவனுக்கு முதல் நன்றிக் காணிக்கையாக அப் பொங்கலைப் படையலிடுவர்.

முதல் நாள் போகிப் பண்டிகை.

பழையன போக்கி புதியன கொள்ளுதலால் இப்பெயர் என்று விளக்கம் கூறுவர்.

போகம் என்றால் விளைச்சல். இது கார் போகம், பங்குனி போகம் என்று கொங்குக் குடியானவர்கள் கூறுவர். முப்போகம் காணுவதும் உண்டு. இந்த விளைச்சலை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதே தையின் முதல் நாள் நிகழ்ச்சியாகும்.

அடுத்த நாள் கன்னிப் பொங்கல்.

ஆண்டாளும், மாணிக்க வாசகரும் குறிப்பிட்ட பாவை நோன்புகள் இதுதான்.

கன்னுப் பொங்கல் மற்றொன்று. கன்று காலைகளுக்கு பொங்கலிடுவது; நன்றி தெரிவிப்பது இந்த நாளில்.

காணும் பொங்கல் — ஒருவரை ஒருவர் சென்று கண்டு, நலம் விசாரித்து வாழ்த்தும் நாள் என்பர். இது 'காணும்' அதாவது விளைச்சலைக் கண்டு முதல் காணும் மகிழ்ச்சிவிழா என்பதே பொருத்தமாகும்.

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய நான்கு நில மக்களுக்கும் பொதுவான கொண்டாட்டம் இது. மதச் சார்பின்றி வேளாண் மக்களின் வாழ்க்கை வளத்துடன் இணைந்தது.

மலை, காடு, வயல், கடல் நிலங்களின் மக்கள் அவரவர்களுக்கான தானியங்களைக் கொண்டு, அவரவர் மரபுக்கும் சுவைக்கும் ஏற்றபடி பொங்கலிட்டு, ஊரோடும் உறவோடும் ஒத்து குடும்பத்துடன் மகிழ்ந்து உண்பர். களியாட்டங்களும் நடத்துவர்.

வேளாண்மைக்கும் பாட்டுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

வேளாண்மை — பாடுபடுதலால் உண்டாவதே போல், பாடல்கள் பாடுதலால் உண்டாகின்றன. பாடல்கள் மனப் பொலிவும், செயலூக்கமும் அளிக்கும். எனவேதான்—

மழைப்பாட்டு—
உழவுப் பாட்டு
நீர் இரவைப் பாட்டு
கதிரரிப் பாட்டு—
கதிரடிப் பாட்டு—
உழத்திப் பாட்டு
உலக்கைப் பாட்டு—

பொங்கற் பாட்டு என வேளாண்மையுடன் இணைந்த பாடல்கள் தமிழில் நிறைய உள்ளன. இவை ஆடல் பாவனைகளுடனும் உள்ளன. இவற்றுள் குரவைப் பாட்டும் ஆடலும் சிறப்பானவை.

வேளாண்மைப் பாடல்களை, மங்கலப் பாட்டு —(ஏர் மங்கலம்)—நல்லவை கூட்டுவிக்கும் பாடல்கள் — என்று கூறுவர்.

புறநானூற்றில் நான்கு நில மக்களின் பொங்கல் வகைகளும், அவற்றின் செயல் முறைகளும் தரப்பட்டுள்ளன.

அடுமகள் முகந்த
அளவா வெண்ணெய்
தொடி மானுலக்கை
பரு(உ) குற்றரிசி
காடி வெள்ளுலைக்
கொளு (இ) நீழல்
ஓங்குசினை மாவின்
தீங்கனி நறும்புளி
கூட்டு சுட்டு
மோட்டிரு வரால்
கோட்டு மீன்கொழுங்குறை
செறுவின்வள்ளைச்
சிறு கொடிப் பாகல்
மூடிப் பெய்த
முருக்கவிழ் புழுக்கல்
மெய் கலந்தின்னற்கு
விரவு—"
என்று கூறப்படுகிறது.

பொங்கல் சமைக்கும் மங்கல மங்கை நல்லாள், பொங்கல் பச்சரிசிக்கான வெண்ணெல்லை, உரிய அளவு அளந்தெடுத்து, உரலில் பெய்து குத்திப்புடைத்தெடுத்தாள். தண்ணீர் ஊற்றி ஊற வைத்தாள்.

வழக்கமாக உலை வைக்கும் தண்ணீருக்குப் பதிலாக காடியைப் புதுப்பானையில் ஊற்றி நீரும் கலந்து அடுப்பெரித்துக் கொதிக்க வைத்தாள். அரிசியைத் தவிடும், கல்லும் போகக் கழுவி களைந்து பானையில் போட்டாள். சோறு பதமாக வெந்ததும் இறக்கி வைத்தாள்.

மாம்பழ மாங்காயைப் பிழிந்து உப்பு மிளகாய் சேர்த்துக் கொதிக்க வைத்துத் தாளித்துப் புளிக் குழம்பாக்கினாள். வரால் மீன்களை அறுத்துக் கழுவி, அரைத்த உப்பு மிளகாய் தடவி நெய்யிலிட்டு வறுத்தெடுத்தாள். சுறா மீனைவேகவைத்துத் தாளித்துப் புட்டாக்கினாள். வள்ளைக் கீரை கொடிப் பாகக்காய் ஆகிய வற்றை துவட்டல் கறி செய்தாள் விருந்து படைத்தாள்— என்று நெல்லரிசிப் பொங்கலைப் பற்றிக் குறிப்பிடப்படுகிறது.

அடுத்தது—
"சுவைக் கதிர் வரகின்
அவைப்புறு வாக்கல்
தாதை மறுகில்
போதொடு புதனிய
வேளை வெண் பூ
எனத் தயிர் கொளுவி
ஆய மகளிட்ட
அம்புளி மிதவை
அவரைக் கொய்யுடன்
மாந்துனர்"—

வரகுச் சோறு, மனங் கவரும் ஒரு வகைத் தேன் மணமும் சிறிதளவுக்கு இன் சுவையும் கொண்டது.

அகமுடையாள் வரகரிசிச் சோறுசமைத்து தயிர்பிசைந்து மோர்க் குழம்பு வைத்தாள். வேளைக் கீரையைக் கடைந்தும்; பிற துணைக் கறிகளோடும், வரகுச் சோற்றை இலையில் படைத்து மோர்க் குழம்பு ஊற்றி, "சாப்பிடுங்கள்" என்று சொல்லி விருந்தினரை உபசரித்தாள்.

கடைந்த கீரையை சாதத்துடன் கலந்து உண்ணச் செய்து, மறு சாதம் வைத்துத் தயிர் ஊற்றி உண்ணச் செய்தாள் என்று சுவை வரகுப் பொங்கலைப் பற்றிக் கூறப்படுகிறது.

அடுத்து இறைச்சிப் பொங்கல் பற்றிய குறிப்பில் பால் பணியாரமும் இதனுடன் விருந்திடப்படுவதைப் பற்றிக் கூறப்படுவது வருமாறு:

"ஊனும் ஊணும்
முனைதல் இனிதென
பாலில் பெய்தவும்
பாகின் கொண்டவும்
அளவுக புகந்து
மெல்லிது பகினர்
விருந்கினர்"—

புலால் கலந்து சமைத்த பொங்கற் சோறு (புலவு) உண்ணச் சுவையும் சத்துமானதென விளக்கம் கூறி விருந்தினர்க்குப் படைத்தாள், இல்லத்தரசி என்கிறது இப் பாடல்.

இதற்கு முன்னதாக பால் பணியாரமும், வெல்லப் பாகுப் பணியாரமும் வாழைப் பழமும் பரிமாறினள் (புத்தருக்கு நெய்யை நிறைய ஊற்றினள்). புலால் உணவு உண்டபின்னர்: பாசிப் பருப்பும் பாலும் கலந்த கஞ்சிப் பானகம் வார்த்தனள். பின்னர் முறைப்படி தயிர்ச் சாதமும் துணைக் கறிகளும் பரிமாறப்பட்டன.

ஊன் உண்ணுதவர்க்கு பணியாரங்கள் செய்து படைத்ததாகவும் கெட்டியான பணியாரத்தை (கச்சாயம்) உண்ண இயலாத முதியோருக்கு பாலில் பிசைந்து தந்தனர் — என்கிறது இப் பாடல்.

நெல் விளையும் ஊர்களில் அரிசி உணவு பரிமாறப்படுவதுபோல் — நெல் விளையாத ஊர்களில் விருந்து எப்படி இருந்தது எனக் குறிக்கிறது அந்தப் பாடல்.

"புல்லென டைவு புறவு
சேர்ந்திருந்த
புனப்புல் சிற்றூர்
நெல் விளையாதே
வரகும் தினையும்
உள்ளன எல்லாமாக்கி
இரவலர் தமக்கு
ஈய்ந்திடுவர்—" எனத்
தொடங்கும் பாடலில் நெல்விளையாதஊரில் வராகுச் சோறும்; தினைமாவும் விருந்தினர்க்கும் பிறருக்கும் படைத்து உபசரித்த குறிப்பு வருகிறது. அது மட்டுமின்றி—

"நெய்யொடு பொரித்த
குய்யுடைநெடுஞ்சூடு"-என
துணைக்கறிகளை நெய்யில் இட்டுப் பொறித்த இறைச்சி வகைகளைப் பற்றியும் சொல்லப்படுகிறது.

"குறு முயலின் சூட்டோடு
நெடுவாளைப் பல உவவில்"
என்று சுட்ட முயற் கறியையும், மீன் துண்டங்களையும் படைத்த குறிப்பும் தரப்படுகிறது. மேலும்,

"சொல் குரவை
அரிவையர்
நெய் பெய்திட்ட
துடுப்பொடு சிவனிய
சுனிகொள்
வெண் சோறு..." என்று
வேளாண்குடி மக்கள் விருந்தினர்க்கு வழங்கிய நெய்ப் பொங்கலைப் பற்றியும்;

"ஆடையுடுப்போம்
அதன் பின்னே பால் சோறு
மூட நெய் பெய்து
முழங்கை வழி வார
கூடியிருந்து
குளிர்ந்தே லோர்
எம்பாவாய்—" என்று ஆண்டாள்திருப்பாவையில் அக்கார வடிசிலைப் பற்றியும் சொல்லப்படுகிறது.

பால் சோற்றுப் பொங்கலை மாவிளக்குப் போல் இலையில் வைத்து அதன் மேல் மையத்தில் அகல் விளக்கு அகடு போல் குழி செய்து அதில் பொடித்த பனை வெல்லம் இட்டு நெய் ஊற்றி உண்ண உபசரித்த கிராம வேளாண் மக்களின் மாண்பு பற்றிக் குறிப்பிடும் வரிகள் இவை:

பாடுநர்க் கீந்த
பல் புகழினரே!
ஆடுநர்க்கீந்த
பேரன்பினரே!
அறவோர்க் கீந்த
வாய் கொள்ளளியினரே
திறவோர்
புகழ்ந்தனர் பின்னே"

—பொங்கல் திருவிழாவின் போது வேளாண் மக்கள் பாடுகிறவர்களுக்கும் ஆடும் கூத்தர்களுக்கும் படித்த புலமையாளர்களுக்கும், நீதி நெறியாளர்களுக்கும் பொங்கல் அமுதிட்டு வெகுமதியும் அளிப்பர்.

விருந்திற்குப் பின்னர் வெற்றிலை பாக்கு உபசாரம் நடக்கும். விருந்தாளிகள் விருந்தளிப்போரைப் புகழ்வர். பாவலரோ பாமாலைசூட்டினர். வேளாண் மக்கள் — விருந்து புறத்திருக்க தாம் தனியுண்ணார் என்பது குறிப்பிடத்தக்கது.

———

# பணத்தை மிச்சப்படுத்த நீங்கள் இப்படி நேரத்தை வீணுக்க வேண்டாமே!



முடிவில்லாமல் நீண்டிருக்கும் க்யூ வரிசையில் காத்துக் கிடப்பதால் உங்களுக்கு என்ன பயன்? ஒரு சுவேகா மோபெட்டின் துணையுடன் நேரத்தை வீணுக்காமல் காப்பதோடு உங்கள் செலவையும் — பஸ் பிரயாணத்திற்காக செய்வதைவிட — குறைக்கலாமே!

**சுவேகா — ஒரே லிட்டரில் அறுபது கிலோ மீட்டர்கள்! பஸ்ஸைவிட சிக்கனமானது.**

யோசித்துப்பாருங்கள், உங்கள் சுவேகா மோபெட் ஒரே லிட்டர் பெட்ரோலில் உங்களை அறுபது கிலோ மீட்டர்கள் கொண்டு செல்கிறது. கிடைக்கும் சவாரியோ உல்லாசமானது! இனி நீங்கள் நிரம்பி வழியும் பஸ்ஸில் நெருக்கடியில் இடிபட்டு, மூச்சுத் திணறி அவதியுற அவசியமில்லை. வாடகை வண்டிகளுக்கும் சக்திக்கு மீறிய வாடகையைக் கொடுக்க வேண்டியதில்லை.

அதுமட்டுமா? உங்கள் சுவேகா தனது சிறந்த பிக்-அப், உறுதியான எஃகு வடிவமைப்பு மற்றும் செயின் ட்ரைவ் ஆகியவற்றின் துணைகொண்டு உங்களுக்கு சீரான வேகத்துடன் கூடிய சிறந்த ஓட்டத்தை அளிக்கிறது. ஹார்ட்-க்ரோம்ட் அலுமினியம் சிலிண்டர்கள் கொண்ட ஒரே மோபெட் சுவேகா மட்டுமே. ஆச்சரியமென்ன பின், உங்கள் சுவேகா அயர்ந்து உழைப்பதில்!

உம், தயங்காதீர்கள். விரைவிலேயே உங்கள் வாழ்வில் சுவேகாவின் சுகம் மலரட்டும். அது மிகவும் சிக்கனமானது (பராமரிப்பிலும்கூட).

**மோபெட்ஸ் இந்தியா லிமிடெட்**
**திருப்பதி, ஆந்திர பிரதேசம்**

இரண்டு
அழகிய மாடல்கள்
பரவசமூட்டும்
பல வண்ணங்கள்



## பயணச்செலவைக் குறைக்க இதோ ஒரு சிறந்த வழி!

**Suvega**

சுவேகா - இந்தியாவில் மிகவும் அதிகம் விற்பனையாகும் மோபெட்

SAA/MIL/2363

# மணிவிழாக் கண்ட நமது இயக்கம்

இந்த உலகில் தோன்றிய ஆதி மனிதன் மிகமிக சுதந்திரமாக வாழ்ந்தான்!

பசித்தால் புசித்து, அலுத்தால் ஓய்வுக்கொண்டு, குதூகலம் வந்தால் ஆடிப்பாடி மனநிறைவோடு வாழ்ந்தான்.

அந்த சுதந்திரவாழ்வு, ஒருவகையில் உண்மையான சோஷலிச வாழ்வு எனலாம்.

சாதிபேதமற்ற வாழ்வு – உயர்வு, தாழ்வு பேதமற்ற வாழ்வு – வேற்றுமையற்ற வாழ்வு – சுரண்டல், அடிமைத்தனம், பகை, காழ்ப்புணர்ச்சி, பூசல், பொறுமை, பழிவாங்கும் எண்ணம், ஏமாற்றும்தன்மை, வஞ்சிக்கும் குணம், ஆக எத்தகைய தீய சக்திகளுக்கும் அவன் அப்பாற்பட்டே சுதந்திரமாக வாழ்ந்தான்.

ஆனால்...

அவனுக்கு சுதந்திர வாழ்வு கிட்டியதே தவிர சுகவாழ்வு கிட்டடவில்லை.

எவரும் அவனைக் கட்டுப்படுத்திடவில்லையே, தவிர; அவனுக்கு நிம்மதியோடு கூடிய சுசுவாழ்வு கிட்டவில்லை! இயற்கை அவனுக்கு எதிரியாக அமைந்தது. காட்டில் உலவிய விலங்குகள் அவனுக்கு எதிரிகளாக அமைந்துவிட்டன.

நிம்மதியுடன் கூடிய நல்வாழ்வு வாழவேண்டும் என்று, அதனைத் தேடி அலைந்தான். அதன் விளைவாக ஒற்றுமையுடன் கூடிவாழும் சமுதாயத்தை படைத்தான்.

எல்லோரும் இன்புற்று வாழ இப்படித்தான் வாழவேண்டும் என்று புதிய பாதையை அமைத்துக் கொண்டான். கூடிவாழும் முறையைக் கண்டான். விதிமுறைகள் உருவாயிற்று!

சமுதாயமும், அதற்கான நெறிமுறைகளும் தோன்றின. அப்போதுதான், வலி உள்ளவன்; ஒரே இடத்தில் கூடிவாழும் ஆதி மனிதர்களுக்குத் தலைவனாக விளங்கினான்.

இயற்கையின் எதிர்ப்பையும், விலங்குகளின் தொல்லையையும், தாங்கிக் கொண்டு, நிம்மதியுடன் வாழ வழிமுறைகளை வகுத்துக்கொண்டு, வாழ முற்பட்டனர் ஆதி மனிதர்கள்.

அதற்குப் பின்னர்தான் மன்னர் ஆட்சிமுறை – சர்வாதிகார ஆட்சிமுறை – மக்கள் ஆட்சிமுறை என்ற புதிய தத்துவங்களுக்கு மனித சமுதாயம் ஆளாக்கப்பட்டதாகும்.

இந்த இடைக்காலத்தில்தான் மனிதனை மனிதன் வஞ்சிக்கவும், சுரண்டவும், தாழ்த்தவும், ஏய்க்கவும், அடக்கி ஒடுக்கவும், அடிமைகளாக்கவும் வெறுக்கவும், பகைத்துக்கொள்ளவும், புதிய கேட்டுச்சூழல் உருவெடுத்தது.

நிம்மதியுடன் கூடிய நல்வாழ்வு வாழத்துடித்த மக்கள் பலர் உரிமைகளை இழந்தும், சுதந்திரத்தை இழந்தும், தன்மானமிழந்தும், வேதனை நிரம்பிய வாழ்க்கை வாழ வேண்டியதாயிற்று. நாடுகள் தோன்றின – இனங்கள் தோன்றின – மொழிகள் பிறந்தன – மதங்கள் பிறந்தன – ஜாதிகள் பிறந்தன. – மூட நம்பிக்கைகள் பெருகிற்று – சிறுபான்மையினர், பின்தங்கியோர், தீண்டப்படாதோர், நீசர்கள்; சண்டாளர்கள், பாவிகள்–போன்ற கூடாத ஏற்பாடுகள் மனித சமுதாயத்தில் வேர்விட்டு வளர்ந்து வலிவுபெற்றுவிட்டன.

உலகெங்கும் சுதந்திரமாக வாழ்ந்த ஆதிமனிதர்கள் காலத்தில், காணப்படாத சீர்கேடுகள் பரவலாகவும், அச்சுறுத்தும் நிலைக்கும் விரைவாக பெருகிவிட்டன.

மனிதருக்குள் பேதத்தையும், அச்சத்தையும், மூட்டக்கூடிய வளர்க்கக் கூடிய பல ஏற்பாடுகள் திணிக்கப்பட்டு விட்டன.




வஞ்சகர்கள், சூதுமதியினர், சதிகாரர்கள், தந்திரக்காரர்கள்; தன்னல நோக்குடன் பல தீய வழிமுறைகளை பின்பற்றி அறியாமையில் மூழ்கிக்கிடக்கும் அப்பாவிமக்களை சுரண்டி, சுகவாழ்வுவாழத்தலைப்பட்டனர், சுரண்டல்முறை – தட்டிப்பறிக்கும் தன்னலம் மேலோங்கியது!

உலகெங்கும் இந்த கேட்டுச் சூழலை எதிர்த்து பல்வேறு இயக்கங்களும். பலப்பல தலைவர்களும், சீர்திருத்த செம்மல்களும் தோன்றி மனித சமுதாயத்தில் மலிந்து வரும் கொடுமைகளை எதிர்த்து, எல்லோரும் இன்புற்று வாழ புதிய பாதை அமைத்தனர், என்பது உலக வரலாறு படித்தோர் அறிவர்.

20–நூற்றுண்டின்நடப்புகள் பல வியக்கத்தக்கனவாகும். உலக வரலாற்றில் பலகோடி மக்கள் அநீதிகளை எதிர்த்துப் பேராடி நிம்மதியுடன் கூடிய நல்வாழ்வுக்கு வழிதேடிக் கொண்ட நூற்றுண்டு 20–ம் நூற்றுண்டு.

ஆங்கிலேயரது ஆட்சியில் நம் மக்கள் கல்வி அறிவு பெறத் துவங்கிய காலம் 20 – ம் நூற்றுண்டு!

ஆங்கிலேயர் ஆட்சிக்கு அடிமைப்பட்ட பின்னர், பாட நூல்களாக வெளிவந்த வரலாறுகளில் நமது உண்மையான வரலாறு ஏதும் முழுமையாகவும், முறையாகவும் எழுதப்படவில்லை என்பதை உண்மை அறிந்தோர் ஒப்புக்கொள்வர்.

சிறுபான்மையினர் சாகசத்தால் வகுத்த தீய ஏற்பாடுகளின் மூலம் பறிக்கப்பட்ட பெரும்பான்மையினரது உரிமைகளை மீட்கும் நற்பணியிலும், தாழ்ந்த நிலையில் உள்ளவர்களின் வாழ்வை மேலோங்கச் செய்யும் நற்காரியத்திலும், சமூகக் கேடுகளுக்கும், பொருளாதார சீர்கேடுகளுக்கும், தூய ஜனநாயக அரசியலுக்கும், ஏற்பட்டிருக்கும் தடைகளை அகற்றிடவும் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா அம்மையார் காட்டிவரும் தீவிரத்தின் அவசியத்தை ஆராய்ந்தாலே; இந்தநாட்டு மக்களின் கடந்தகால வரலாறு எளிதில் புலப்படும்.

நலிந்தவர்கள் நிம்மதிபெற !
தாழ்ந்தவர்கள் உயர்ந்திட !
நாதியற்றவர்கள் ஏற்றம்பெற !
பின்தள்ளப்பட்டோர் உயர்ந்திட !
கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டோர் ஆனந்தம் பெற !
வஞ்சிக்கப்பட்டோர் வாழ்வுபெற !
அறியாமை அகன்று எங்கும் அறிவுமணம் கமழ !
இல்லாமையால் அவதிப்படுவோர் இன்பம்பெற !

சமத்துவம், சகோதரத்துவம், சமநீதி, எங்கும் மலர்ந்திட! சுருக்கமாக; எங்கும் எல்லோரும் இன்புற்று வாழ்ந்திட; தோன்றிய இயக்கங்களில் பெருமையுடன் இடம் பெற்றது நீதிக்கட்சி இயக்கமாகும். சமுதாயத்தில் பல்வேறு காரணங்களால் – ஏற்றத் தாழ்வுகள் ''காண்க்ரீட்'' போன்று உடைக்க முடியாத நிலைபெற்றிருந்த நேரத்தில்; அவை நாளும் வலிவுபெற்று ஏற்றத் தாழ்வுகள் மிகுவதற்கு சூழ்நிலை இடம் தந்ததால் வேற்றுமை உணர்ச்சிஓங்கி; உயர் பிறப்பு – இழிபிறப்பு, மேலான தொழில், தாழ்வான தொழில் ஆகிய பழக்க வழக்கங்களோடு ஒட்டிய நம்பிக்கையும், மாற்ற முடியாத வடிவத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் நிரம்பிய காலகட்டத்தில்; வேறு வழியின்றி உருவாக்கப்பட்டதே இந்த திராவிட இயக்கம்!

ஏதோ ஒரு வகையில் எப்படியோ முன்னேறி சமுதாயத்தின் மேல் மட்டத்திற்கு உயர்ந்துவிட்டவர்களும், எப்படியோ இல்லாத மதிப்பைத் தேடிக்கொண்டு ஆட்டிப்படைப்பவர்களும், அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் உயரிய நிலை, ஆண்டவன் அருளியம் வரப்பிரசாத என்றே நம்பிக்கொண்டு அதற்கு மூலக்காரணம், முன்ஜென்மத்தில் அவர்கள் செய்த புண்ணியம் தான் என்று தப்புக் கணக்குப் போட்டுக்கொண்டு; எதையும் இழக்கவோ மாற்றிக் கொள்ளவோ, விட்டுக்கொடுக்கவோ மறுத்துப் பிடிவாதம் காட்டி வந்திருக்கின்றனர். இப்படிப்பட்ட நிலை உலகமெங்கும் பரவிக்கிடந்த நேரத்தில் பல்வேறு தலைவர்கள் கவலையுற்று, பல இயக்கங்களை தோற்றுவித்து இன்னல்களுக்கு ஆளாகி, வெற்றியை சாதித்துக் காட்டினர்.

அப்படிப்பட்ட நிலை 20-ம் நூற்றுண்டில், ஆங்கிலேயர் ஆட்சியில் இங்கும் இருப்பதைக் கண்டு நீதியின் அடிப்படையில் நல்ல இலட்சியத்துடன் நாட்டை நல்ல சமதர்ம பூங்கா வாக்கிட மேற்கொண்ட முயற்சியின் விளைவே, நமது இயக்கம் பிறந்ததற்கு காரணமாகும்!



டாக்டர் நடேசனார்

சமுதாய நிலையோடு ஒட்டி, தாழ்வு மனப்பான்மையைப் பெற்ற நமது மக்கள், அதை உதறித் தள்ளவும் துணிவின்றி—சமத்துவ நிலையை கேட்டுப் பெறவும் முடியாத நிலையில், நாதியற்று நலிந்துக் கிடந்தபோது அவர்கள் வாழ்வில் விடிவெள்ளியை உண்டாக்கிய பெருமை நமது இயக்கத்திற்கு உண்டு!

தாழ்ந்தவர்கள், பின் தள்ளப்பட்டவர்கள், பல்வேறு வகையான இழிவுகளுக்கு ஆளாக்கப்பட்டு, சமநிலை குலைந்து, சம நீதி அழிந்து, சமுதாயம் நைந்து போய்க்கொண்டிருந்த கால கட்டத்தில், உரியவர்களால்—வல்லவர்களால், துவக்கிவைக்கப்பட்ட தற்காப்புக் கேடயம் — நமது இயக்கம்!

இப்படிப்பட்ட சமுதாய சீர்கேடுகள், வெறும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளால் மட்டுமே கட்டப்பட்டிருப்பின், ஓரளவிற்குத் தெளிவும், எதிர்க்கும் துணிவும் ஏற்பட்ட உடன் மேல் நாடுகளில் கடும் புரட்சிகள் ஏற்பட்டுள்ளன. சில நாடுகளில் வன்முறை புரட்சியாகவும் அவை மாறி இருக்கின்றன.

நமது மக்கள் வளர்த்துக் கொண்ட அமைதிப் பண்பு அத்தகைய தீவிர முறைகளை ஏற்கவும் இல்லை — மனதாரக்கூட நினைக்கவும் இல்லை.

நியாயவாதங்களை எடுத்துக்கூறி, நீதியை நிலைநாட்ட உதயமானதே நமது இயக்கம்.

20-ம் நூற்றுண்டில் துவக்க காலத்தில் சென்னை மாகாணம் (Madras Presidency) மொழிவழி பிறக்கப்படாத — ஆந்திரம், கேரளம், மலையாளம் மற்றும் சில சமஸ்தானங்கள் நீங்கலாக கொண்ட ஒரே மாநிலமாக விளங்கியது (கம்போசைட் மெட்ராஸ் ஸ்டேட்) மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்து, துரைத்தனம் அதிகார பூர்வமாக அறிவித்தபோது இம்மாநிலத்தின் மக்கட்தொகை 4 கோடியே 75 இலட்சம் என்று கூறப்பட்டது. இதில் 75 இலட்சம் பேர் கொண்ட மேட்டு குடியினர் பெருவாரியாவ மக்களின் நல்வாழ்வை பறித்து நிம்மதியுடன் முன்னேறி எத்துறையிலும் ஆதிக்கம் பெற்று வந்த கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைத்து, இம்மாநிலத்து மக்கள் அனைவரும் சம நீதியை பெற்றிட பாடுபட்ட அறிவியக்கமே நமது இயக்கம்!

ஆங்கிலம் 'மிலேச்ச' மொழி என்று பிறருக்கு புகட்டிய சிறுபான்மையினரும், ஒதலையும், ஓதுவித்தலையும் தொழிலாகக் கொண்டவர்களும் ஆங்கிலேயர் ஆட்சியில் அளிக்கப்பட்ட ஆங்கிலக் கல்வியை எளிதில் கற்கவும் விரைவாக முன்னேறவும் தலைப்பட்டனர்! எத்துறையிலும்; பெருவாரியான கீழ்த்தட்டு மக்கள் உரிமைகளை இழந்து வாழ்வை பறிகொடுத்தவர்களாக இருந்தனர். ஆனல் அவர்கள்தான் பெரும்பகுதி துரைத்தனத்திற்கு வரிகளை ஒழுங்காகவும் அதிகப்படியாகவும் செலுத்திவந்தனர்.

அவர்கள் கூடிப்பேசி குறைகளை களைந்திட எந்த அமைப்பும் இல்லாத நிலையில் நாதியற்றுக் கிடந்த நேரத்தில், அவர்களுக்காகப் பிறந்ததே நமது இயக்கம்!

தாள்களின் முனையில், கருப்பு வண்ணம் கண்டால் அழவும், "மஞ்சள்" பூசியிருந்தால் மக்களகரமானது என்று மகிழவுமான தற்குறி நிலையிலிருந்து, விடுபடாது தவித்துக் கொண்டிருந்த பெருவாரியான மக்களின் சார்பாக, குரல்கொடுக்கப் பிறந்ததே நமது இயக்கம்!

கைநாட்டு பேர்வழிகளாக இருந்த பெரும்பாலோர், கல்வி அறிவின் முக்கியத்துவத்தை மதிப்பிட்டுக் கொண்டு ஏற்றமிகு புதுவாழ்வு பெற்றிடும் வழியை காட்ட பிறந்தது நமது இயக்கம்.

தென்னகத்தில் கிழக்கு இந்தியா கம்பெனி(ஈஸ்ட் இண்டியா கம்பெனி) நிறுவி ஆங்கிலேயர் ஆதிக்கம்பெறதலைப்பட்ட உடன் கல்வி அறிவுபெற்றவர்களுக்கு பல புதிய வாய்ப்புகள் ஏற்பட்டும், கூட கல்வி அறிவற்ற பெருவாரியான மக்கள் குறிப்பிடத்தக்க பங்கை பெற்றிடும் வாய்ப்பினை இழந்தனர். கல்வி அறிவு பெற்ற சிறுபான்மையினர் அதனை தட்டிப் பறித்துக்கொண்டு முன்னேறினர். அவர்கள் ஆங்கிலேயரின் நன்மதிப்பையும் பெற்றனர். காலதாமதமாக கல்வி அறிவு பெறும் போட்டியில், ஈடுபட்ட பெரும்பான்மையான அப்பாவி மக்களின் வாழ்வு முன்னேறவும், இழந்த உரிமைகளை பெறவும், சமுதாயத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை அகற்றி எல்லோருக்கும் சமவாய்ப்பு கிட்டவும் செய்த தனிச்சிறப்பு—பெற்றது நமது இயக்கம்.

அந்தக் காலத்தில் மத சார்பற்ற கொள்கையை கடைபிடித்த ஆங்கிலேயர் ஆட்சி; சமுதாயத்தில் மலிந்துவிட்ட கொடுமைகளை அகற்றிட துணியவில்லை. உயர் ஜாதியினர் விருப்பப்படியே தங்களின் தனித்தன்மையை பாதுகாத்துக்கொள்ள வழி செய்தனர்.

உயர் ஜாதியினரோடு சரிசமமாக பழகுவது கூடாது!
உயர் ஜாதியினர் உண்பதற்கு தனி இடம்!
உயர் ஜாதியினர் பயணம் செல்ல தனி இடம்!

உயர் ஜாதியினர் தண்ணீர் அருந்த, பித்தளை பாத்திரமும் மற்றவர்களுக்கு பானையில் தண்ணீரும் 'தகரக்' குவளைகளும் இருந்து வந்ததை ஏன்னென்று கேட்ட நாதியுமில்லை. கூடாது என்று தடை செய்திட அரைத்தனத்திற்கு துணிவும் இருக்கவில்லை.

குறிப்பிட்ட ஜாதியினர் குறிப்பிட்ட வீதிகளில்தான் வசிக்க முடிந்தது! வாடகைக்கு வீடு தேடுவோர் கண்களில் குறிப்பிட்ட ஜாதியினருக்கே வீடு வாடகைக்கு விடப்படும் என்ற பலகைகள் காட்சியளித்தன:

விருப்பப்படி உடைஉடுத்த இயலாது. சட்டை அணியக் கூடாதவர்கள், செருப்பு அணியக் கூடாதவர்கள், சர்வ சுதந்திரத்துடன் எங்கும் காலெடுத்து வைத்து நடக்கக் கூடாதவர்கள், பாவிகளாக கருதப்பட்டு, அவர்கள் தாழ்விற்கும் துன்பத்திற்கும் அவர்களின் விதியே காரணம் என்று கூறப்பட்டு, பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்ட காலத்தில்; மனிதர்கள் மனிதர்களாக மதிக்கப்பட வேண்டும்—எல்லோருக்கும் சமஉரிமை, சம பங்கு வேண்டும் — எல்லோரும் இன்புற்று வாழும் சமதர்ம இலட்சிய விதையை தூவிட முற்பட்டதே நமது இயக்கம்!

அந்தக் காலத்தில் திருச்சியிலும், சென்னையிலும் மட்டுமே முதல்தர கல்லூரிகள் இயங்கின. வெளியூர்களிலிருந்து கல்வி பயில வரும் கீழ்குடி மாணவர்கள் தங்குவதற்கு திண்டாடினர். உணவு விடுதிகளில் கூட அவர்களுக்கு உள்ளே நுழைந்து உணவுப் பண்டங்களை விலைகொடுத்து வாங்கிக்கொண்டு வெளியே வந்துதான் உண்ண உரிமை இருந்தது.

இந்த கொடிய பழக்கங்களை, மூடநம்பிக்கைகளை, கூடாத கெட்ட ஏற்பாடுகளை முதன்முதலில் தெளிவாகக் கண்டறிந்து, மன வேதனைப்பட்டு, அநீதிகளை எதிர்த்து நீதியை நிலைநாட்டி சமதர்ம இலட்சியத்துடன் உதயமானதே நமது இயக்கம்.

ஆம், இந்த ஆண்டு நமது இயக்கத்திற்கு 60-வது ஆண்டு!

இது நமது இயக்கத்தின் மணி விழா ஆண்டு!

பொன்விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடினேம்! இயக்கத்தின் மூத்ததலைவர்கள் வீற்றிருக்க, அன்றைய மாநில முதல்வர் பேரறிஞர் அண்ணு அவர்கள் பொன்விழா மலரை வெளியிட்டு, வரலாற்று சிறப்புமிக்க சொற்பொழிவை நிகழ்த்தினர். இன்று நம்மிடையே அண்ணன் இல்லை. தள்ளாத வயதில் உள்ளத்தூய்மையுடன் அரும்பாடுபட்டு பொன்விழா ஏற்பாடுகளை சிறப்பாக செய்திட்ட தமிழவேள்—பண்பாளர்—கொண்ட கட்சிக்காக; ஏற்றத்திலும் தாழ்விலும் அயராது உடும்புப் பிடியுடன் வாழ்ந்து காட்டிய பெரியவர் சர். பி.டி. இராசனும், இல்லை. இன்னும் எத்தனையோ மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன.

இருந்தும், நாம் அன்று தொடங்கிய இலட்சியப் பயணத்தின் மணி விழாவை முறையாகக் கொண்டாடத் தவறிடவில்லை.

நாடெங்கும் தி.மு. கழகத் தொண்டர்கள் ஆர்வத்துடன் திராவிட இயக்கத்தின் 60-வது ஆண்டை சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்.

கழகத்தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் நமது இயக்கம் பிறந்த கதையையும், தலைவர்கள் ஆற்றிய தொண்டினையும், நாட்டு மக்களுக்கு நாம் புரிந்த சாதனைகளையும், தெளிவாகவும், விளக்கமாகவும், சிறப்பாகவும் எடுத்துக் கூறியும் எழுதியும் வருகிறார்.

இந்த நேரத்தில் பலர் நமது இயக்கம் பிறந்த கதையை அறிந்திடும் ஆர்வம் பெற்றுள்ளனர். நமது இயக்கத்தின் 60 ஆண்டுகால வரலாறு நமது நாட்டின் உண்மையான வரலாற்றின் முக்கிய பகுதியாகும். வருங்கால மக்களின் நல்வாழ்வுக்கு வழிகோலும் கதையே நமது இயக்கம் பிறந்த கதையாகும்.

நமது இயக்கத்தின் வரலாறு முறையாக எழுதிவைக்க நம் முன்னேர்கள் தவறிவிட்ட காரணத்தினல் பல உண்மைகளை மக்கள் அறிந்திடும் வாய்ப்பு நமக்கு இல்லாது போயிற்று.

அவதார புருஷனென்று போற்றப்படும் இராமனின் கதை தெரியும் என்பார்கள் மக்கள். ஆனல் இந்த இயக்கத்தை தோற்றுவித்த நல்லவர்களைப் பற்றி ஏதும் தெரியாது என்பார்கள்.

கிருஷ்ணனின் லீலைகளை தெரிந்துவைத்திருக்கின்றனர். ஆனல். தங்களுக்கு வாழ்வளித்த செம்மல்களைப் பற்றி தெரிந்து கொள்ளவில்லை.

யானை முகத்தோடு விநாயகர் பிறந்த வரலாறு அறிந்த மக்களுக்கு நமது இயக்கம் பிறந்த கதை புரிந்து கொள்ள இயலாது போயிற்று!

# நாம் பிறந்த கதை

சென்னை, திருவல்லிக்கேணி, அக்பர் சாகிபு தெருவில் குடியிருந்த எளியவர் படித்து பட்டம் பெற்று, மருத்துவத் தொழில் புரிந்து, ஏழை எளியமக்களின் வாழ்வு மலர வழிகாட்டியாகத் திகழ்ந்த டாக்டர் சி. நடேசனர் அவர்களே நமது இயக்கத்தின் தந்தை ஆவார்.

மறுமலர்ச்சி ஏற்பட வேண்டுமானல் மக்களைப் பற்றி ஆராயும் தலைவர்களை விட அன்றாடம் மக்களோடு பழகி, மக்களின் நிலையுணர்ந்த தலைவர்கள் வேண்டும் என்ற எண்ணத்தை டாக்டர் நடேசனர் கொண்டிருந்தார்.

டாக்டர் நடேசனர், சீரும் சிறப்பும் மிகுந்த குடும்பத்தில் பிறந்தார். தன் படிப்பை முடித்ததும் எந்தத் துறையில் சென்றால் மக்களுக்குத் தொண்டாற்ற முடியும் என்று சிந்தித்து ஒரு முடிவிற்கு வந்தார். துவக்கத்தில் ஆசிரியராக சில காலம் பணியாற்றினர். அப்போது சமூகச் சீர்திருத்தவாதியும் பேராசிரியருமான சர்.ஆர். வெங்கடரத்தினம் (நாயுடு) அவர்கள், தான் நினைத்துக் கொண்டிருந்த சமுதாயச் சீர்திருத்தங்களை நிறைவேற்ற, படித்த இளைஞர்களைத் தயார்படுத்திக் கொண்டிருந்தார். சர். வெங்கடரத்தினத்தின் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களைக் கேட்டதும் நமது நடேசனரும், அவர்பால் அன்பு பாராட்டி, அவருக்கு ஒரு சிறந்த தோழரானர். ஆசிரியராக இருந்தால் குறுகிய அளவில்தான் மாணவர்களுக்கு மட்டும் பணியாற்ற முடியும் என்றெண்ணி அதிக அளவில் மக்களுக்கும் சமுதாயத்திற்கும் பணியாற்ற வாய்ப்பு தேடக் கருதினர்.

அதன்படி மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து, எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்று மக்களுக்குத் திறம்படப் பணியாற்றினர். அப்பொழுது மக்கட்தொகையில் ஏழைகள் 4-ல் 3 நபர்கள் கடுமையான நோய்களால் பீடிக்கப்பட்டு ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மக்கள் மடிந்து வந்தனர். இதைக்கண்டு மன வருத்தங்கொண்டு, ஏழை மக்களுக்கு மருத்துவ உதவியளிப்பதில் மிகவும் அக்கறை எடுத்துக் கொண்டார்.

அன்புள்ளமும் இரக்கச் சிந்தையும் இயற்கையிலேயே கொண்டிருந்த அவர், ஏழைமக்கள், உதவி என்று நாடி வந்தபோதெல்லாம் அது நடுநிசியாக இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் உதவிபுரிந்துவந்த உத்தமராவார். அவர் அன்பிற்கே ஒரு இலக்கணமாய் விளங்கினர்.

சென்னை, திருவல்லிக்கேணியில் அவர் வைத்திருந்த மருத்துவமனையில் ஏழைகளுக்கெல்லாம் ஒருவிதக் கட்டணமும் வாங்காமல் இலவசமாகவே மருந்து கொடுத்தார். பல நோயாளிகளுக்குக் கடுமையான நோய்க்கான பிரத்தியேகமான மருந்து எழுதிக்கொடுத்து, அதை அவர்கள் வாங்கிவர பணமில்லை என்றால், அதற்கான பணத்தையும் தானே அளித்து வந்தார்.

பிரபல டாக்டராகத் திகழ்ந்த அவர், ஏழை நோயாளிகளைக் கவனித்துக் கொண்டிருக்கையில் செல்வச் சீமான்களிடமிருந்து தொலைபேசி மூலம் அழைப்புகள் வரும். அவர்கள் சீமான்களாயிற்றே என்று ஒரு சிறிதும் எண்ணமல், நான் தற்போது ஏழை நோயாளிகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறேன் தாங்கள் விரும்புவதுபோல் உடனே வர முடியாது; இவர்கள் எல்லோரையும் பார்த்தானதும் நேரமிருந்தால் வருகிறேன் என்று பதிலளிப்பார். அவர் எப்போதும் ஏழை பங்காளராகவே இருந்தார். டாக்டர்களுக்கெல்லாம் இவர் ஒரு சிறந்த டாக்டர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கினர்.

திருவல்லிக்கேணி மக்களின் அன்புக் கட்டளையால் சென்னை நகராண்மைக் கழகத்தேர்தலில் ஈடுபட்டு வெற்றி பெற்றார். அந்தத் தொகுதியில் அவர் உயிரோடு இருக்கும் வரை அவரைத் தோல்வியுறச் செய்ய எவராலும் இயலவில்லை. அவரை எதிர்த்து நிற்கவே ஆள் இல்லாமல் இருந்ததால், பலமுறை அவர் போட்டியின்றியே தேர்ந்தெடுக்கப்பட்டார். நகராண்மைக் கழகத்திலும் ஏழைமக்களின் உண்மைப் பிரதிநிதியாக இருந்து அவர்களின் வசதிகளுக்காக வாதாடினார். அப்பொழுதெல்லாம், பணக்காரர்களும் — உயர் சாதியினரும் வசிக்கும் பகுதிகளுக்குத்தான் வசதிகளையும், தேவைகளையும் நகராண்மைக்கழகம் அதிகமாகச் செய்து கொண்டிருந்தது. இச்செய்கையை வன்மையாகக் கண்டித்து, சேரிப் பகுதிகளுக்கும் மற்ற ஏழைமக்கள் வசிக்கும் பகுதிகளுக்கும் நகராண்மைக் கழகம் அதன் உடனடிக் கவனத்தைச் செலுத்தி, அவர்களுக்கான வசதிகளைச் செய்துதரவேண்டுமென்று வாதாடினார். அப்பொழுது சென்னை நகராண்மைக் கழகத்தின் உறுப்பினர்களாய் இருந்த செல்வந்தர்களும், உயர்சாதிக்காரர் என்போரும், 'வரிசெலுத்துபவர்கள்தாங்கள்தான்' என்றும் அதனால் நகராண்மைக் கழகம் தங்களுக்குத்தான் வசதிகளைச் செய்து தரவேண்டும் என்றும் கூறி டாக்டர் நடேசனாரை எதிர்த்தார்கள். அதற்கு அவர், கடுமையான தொத்துநோய்கள் முதன்முதலில் ஆரம்பிப்பது அசுத்தம் நிறைந்திருக்கும் சேரிப் பகுதிகளிலும், ஏழை மக்கள் வாழும் பகுதிகளிலும்தானே ஒழிய, பணக்காரர்கள் மிக்க நாகரிகத்தோடு வாழும் பகுதிகளில் இருந்து அல்லவென்றும் மேலும் இந்நோய்கள் சேரிகளில் ஆரம்பித்து அவர்களோடு போவதில்லை என்றும், பணக்காரர்களின் பகுதிகட்கும் அவை பரவுகின்றன என்றும், ஆகவே பணக்காரர்கள் தம் சுயநலத்தைக் கருதியாவது எங்கு இந்நோய்கள் முதன் முதலில் தோன்றுகின்றனவோ அங்கு—அப்பகுதிகளைச் சுத்தமாக வைத்திருக்கப் பாடுபட வேண்டும் என்றும் விளக்கி, அவர்களின் எதிர்ப்புகளைத் தவிர்த்து ஏழை மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்து தந்தார்.

பித்தாபுரம் கல்லூரியில் சிறந்த ஆசிரியராகப் பணியாற்றி கல்வித் துறையில் நல்ல அனுபவம் பெற்றிருந்த டாக்டர் சி. நடேசனார், சென்னை நகராண்மைக் கழகத்திலிருந்து சென்னைப் பல்கலைக்கழக மன்றத்திற்கு (செனட்) உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அக்காலத்தில் பல்கலைக்கழக மன்றத்தில் உயர்சாதியினர், மேட்டு குடியினர், சமுதாயத்தின் மேல்தட்டில் இருப்பவர்களே பெரும்பாலும் நிறைந்திருந்தனர்.

அம்மன்றத்தில் அவர், பல்கலைக் கழகக் கல்வி ஏழை மக்களின் சக்திக்குக் கிடைக்கக் கூடியதாக இருக்க வேண்டுமென்றும், பிற்பட்ட வகுப்பினருக்குக் கல்வி நிலையங்களில் பல சலுகைகள் கொடுக்க வேண்டுமென்றும் வாதாடினார். கீழ்குடி பிள்ளைகளுக்குக் கல்லூரிகளில் இடம் கிடைக்கப் பல முறைகளில் பாடுபட்டார். கல்லூரிகளில் பிள்ளைகளைச் சேர்ப்பதில் அவர்கள் வாங்கிய 'மார்க்குகளை' மட்டும் கவனத்தில் எடுத்துக் கொள்வது சரியல்ல என்றும், அவர்களுடைய குடும்ப சூழ்நிலைகளைக் கவனிக்க வேண்டுமென்றும் கூறினார்.

ஏழைக் குடும்பத்தில் இருக்கும் ஒரு மாணவன், தன் குடும்பத்தின் பல இக்கட்டான சூழ்நிலையில், தானே படிக்க வேண்டிய துர்ப்பாக்கியமான நிலையில் இருக்கிறான்; ஆனால் படித்த—பணக்காரக் குடும்பங்களில் இருக்கும் மாணவர்கள் பல வசதிகள் நிறைந்த சூழ்நிலையில் இருக்கிறார்கள்; ஆகவே, தேர்வு பெறுவதற்கான போதிய மார்க்குகள் வாங்கும் ஒரு ஏழை மாணவன், அதிக மார்க்குகள் வாங்கும் பணக்கார மாணவனை விடச் சிறந்தவன் — பாராட்டப்பட வேண்டியவனுமாவான்; ஆகவே, அத்தகையவர்களுக்குத்தான் கல்லூரியில் முதலிடம் தரவேண்டும்—என்றெல்லாம் வாதாடினார்.

தமிழ் வளர்ச்சியில் எப்போதும் ஆர்வம் கொண்டு அதன் வளர்ச்சிக்குச் சென்னைப் பல்கலைக் கழகமும் பாடுபட வேண்டுமென்று எடுத்துக் கூறினார்.

அவர் சென்னை நகராண்மைக் கழகத்தின் உறுப்பினராக இருந்ததால், நகராண்மைக் கழகத்திற்குத்தான் பெருமையாய் இருந்ததே ஒழிய, அதனால் அவருக்குப் பெருமை என்பதில்லை. அவர் எப்போதும் சிறுபான்மை சமுதாயத்தினரான முகம்மதியர், கிறித்துவர்பால் அன்பு செலுத்தியவர். ஒருசமயம், சென்னை நகராண்மைக் கழகத்தின் தலைவர் பதவிக்கு அவர் பெயர் முன்மொழியப்பட்டதும், சர். மகமது உஸ்மான் பெயரையும் மற்றொருவர் முன்மொழிந்தார்; உடனே டாக்டர் நடேசனார், உஸ்மான் அவர்களே தலைவராக வரட்டும் என்றுகூறி, தான் போட்டியிலிருந்து விலகிக் கொண்டார். அத்தகைய விரிந்த மனப்பான்மை கொண்டவர் நம் டாக்டராவார்கள்.

நமது இயக்கம் எந்த நோக்கங்களுமின்றி துவங்கப்பட்டது அல்ல. பல உயர்ந்த குறிக்கோள்களைக் கொண்ட அவ்வியக்கத்தில், தன் முழுக்



டாக்டர் டி. எம். நாயர்



வெள்ளுடை வேந்தர் சர். பி. தியாகராயர்

கவனத்தையும் செலுத்தி உழைத்தார். திராவிட இயக்கம் ஆரம்பித்ததும் தென்னிந்தியர் அனைவரும் ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உண்மையை அவர்களிடம் பரப்ப வேண்டும் என்ற நோக்கத்தில் திராவிட மன்றம் என்ற அமைப்பை ஏற்படுத்தி, நாமெல்லோரும் திராவிடர் என்ற உணர்ச்சியை முதல் முதலில் ஊட்டியவர் டாக்டர் நடேசனார் அவர்களேயாவார்கள். அக்காலத்தில் இவ்வுணர்ச்சியைப் பரப்ப அவரோடு உழைத்தவர் மற்றொருவரும் இருந்தார். அவர்தான் சைவசித்தாந்தத்தைப் பரப்பி வந்த திரு. டி. கோபால் செட்டியாராவார். முன்னவர் திராவிட உணர்ச்சியை வளர்ப்பதிலும், பின்னவர் திராவிடக் கலாச்சாரத்தை பரப்புவதிலும் ஈடுபட்டிருந்தனர்.

டாக்டர் நடேசனார் ஒரு சிறந்த மக்கட் தலைவராகவும் இயக்கத்தைத் திறம்பட நடத்தக்கூடியவராகவும் விளங்கினார். அவர் எப்போதும் பதவிக்காக ஆசைப்பட்டவரல்லர். தான் ஒரு கட்சியில் சேர்ந்தால் அக்கட்சி மூலம் தனக்கு என்ன நன்மைகள் கிடைக்கும் என்று எண்ணக் கூடிய பலர் இன்று இருக்கிறார்கள். ஆனால் அவர் அந்த எண்ணத்தோடு இல்லாமல் தன்னால் கட்சிக்கு என்னென்ன செய்ய முடியும் என்று ஆய்ந்து சேவை புரிந்தார். அவர் நீதிக்கட்சியின்பால் கொண்டிருந்த நம்பிக்கை அளவிடற்கரியதாகும்.

அவர் சென்னை சட்டமன்றத்திற்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கேயும் பிற்பட்ட இனத்தாரின் உரிமைகளுக்காக வாதாடினார். அச்சபையில், நாட்டிலே வேலையில்லாக்கொடுமை வளர்ந்து வருவதைப் பற்றி அன்றே எச்சரித்தார். அரசாங்கம் அப்போது ஒரு குழுவை நியமித்து அரசாங்க ஊழியர்களின் ஊதிய நிர்ணயத்தைப் பற்றி ஆராயுமாறு உத்தரவிட்டிருந்தது. அந்தக் குழு, பலரின் எண்ணங்களையும் கேட்டறிந்து குறித்துக் கொண்டிருந்தது. அக்குழுவினரிடம் டாக்டர் நடேசனார் கூறிய கருத்துக்கள் இன்றும் போற்றுதற்குரியன. அரசாங்க ஊழியர்களின் அதிக அளவு ஊதியம் ஒரு மாதத்திற்கு ரூ. 1000-க்கு மேற்படாமலும் குறைந்த அளவு ஊதியம் நூறு ரூபாயாகவும் இருக்க வேண்டும் என்று அன்றே கூறியிருக்கிறார்.

டாக்டர் நடேசனார் எப்பொழுதும் ஒருசிலர் சிறந்த தலைவர்களாக ஆவதைவிட அந்த இனமே சிறப்பு வாய்ந்த இனமாக மாற வேண்டும் என்று எண்ணி அதற்காகவே பணியாற்றினார்.

அக்காலத்தில், தனிப்பட்டோர் சிலருடைய மனைகளில் வீடு கட்டிக் கொண்டு வாடகை தந்து குடியிருந்த மக்கள் அனுபவித்த தொல்லைகள் பலவாகும். அதையுணர்ந்து, குடியிருப்போரின் துயரங்களைப் போக்குவதற்கும் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கும், கவர்னரைக் கண்டு உரையாடி குடியிருப்போர் பாதுகாப்புச் சட்டம் என்ற ஒன்றை மிக அவசரமாக சட்டமன்றத்திலே கொண்டுவரச் செய்து நிறைவேற்றி, அதை அமுலாக்கியதின் மூலம் பல்லாயிரக்கணக்கான ஏழை மக்களின் துயர் துடைத்தவர் நம் டாக்டர் நடேசனாராவார்கள்.

இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக அவர் மிகவும் பாடுபட்டவர். அவர் வசித்த திருவல்லிக்கேணி பகுதியில் இந்துக்களும் — மகமதியர்களும் ஒரு குடும்பத்தாரைப் போல் பழகியமைக்கு மூலகாரணம் டாக்டர் நடேசனாரின் அரிய சேவையேயாகும்.

கடைசியாக அவர் ஈடுபட்டிருந்த பொதுத்தேர்தலில் வெற்றிகரமான முடிவு அறிவிக்கப்படுவதற்கு முன்பே அவர் உயிர் நீத்தார். அவரின் சவ ஊர்வலம் இலட்சக் கணக்கான மக்கள், துயரத்தின் உருவங்களாகப் பின்தொடர நடந்தது.

நமது இயக்கம் பிறப்பதற்கு முன்னரே, 1912-ம் ஆண்டு ''சென்னை ஒற்றுமைக் கழகம்'' ( Madras united league ) என்ற பெயரில் டாக்டர் நடேசனார், ஒரு அமைப்பை தானே உண்டாக்கினார். சமூகத்தில் கீழ் மட்டத்திலிருப்பவர்களின் வாழ்வு மலர, சமதர்ம இலட்சிய அடிப்படையில் உருவாக்கப்பட்ட முதல் அமைப்பு இதுதான். டாக்டர் நடேசனாரே அதன் செயலாளர் பொறுப்பை ஏற்று நடத்தி வந்தார்கள்.

முதியவர்களுக்கு கல்வி அறிவு புகட்டுவதே (Adult education) அந்த அமைப்பின் முதல் வேலையாக அமைந்தது. அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்கள் கௌரவ ஆசிரியர்களாக, நாள்தோறும் மாலை நேரத்தில் கல்வி அறிவு புகட்டி வந்தனர். திருவல்லிக்கேணி பெரிய தெருவில் டாக்டர் நடேசனாரின் மருத்துவமனை கட்டிடத்தில் இத்தொண்டு துவங்கியது.

பிற்காலத்தில் சென்னை மாகாணத்தின் முதல்வராக விளங்கிய



பொப்பிலி அரசர்

பனகால் அரசரும், ''தி ஸ்டாண்டர்ட்'' ( The Standard ) என்கிற ஆங்கில நாளேட்டின் ஆசிரியருமான திவான் பகதூர் கருணாகரமேனனும் உடனிருந்து ஒத்துழைப்பு நல்கினர். முதலாண்டு விழாவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. 500-க்கு மேற்பட்டவர்கள் உறுப்பினர்களாக சேர்ந்தனர். அமைப்பின் பெயரும் மாற்றப்பட்டது. ''திராவிடர் சங்கம்'' ( Dravidian Association ) பிறந்தது. இச்சங்கம் நல்ல முறையில் பல சமூகப் பணிகளில் ஈடுபட்டு தொண்டாற்றியது. இதன் முதலாண்டு விழா சென்னை, திருவல்லிக்கேணி, இந்து உயர்நிலைப்பள்ளி யில் உயர்நீதிமன்ற நீதிபதி சி. கிருஷ்ணன் தலைமையில் கொண்டாடப் பட்டது. அந்த விழாவில்தான் திராவிட இயக்கத்தின் தூண்களாக விளங்கிய டாக்டர் டி. மாதவன் (டி.எம். நாயர்) அவர்களும், சர். பி. தியாகராய (செட்டியாரும்)ரும் பங்கு கொண்டு சிறப்பு சொற்பொழி வாற்ற அழைக்கப்பட்டிருந்தனர்.

வெளியூர்களில்ருந்து உயர் கல்வி பயில சென்னைக்கு வரும் மாணவர் கள் தங்கவும், நல்ல உணவு வசதி பெறவும் 'திராவிடர் இல்லம், ( Dravidian Home ) என்ற புதிய அமைப்பு, டாக்டர் நடேசனார் மேற்பார்வையில் அக்பர்சாகிப் தெருவில் அமைக்கப்பட்டது.

குட்டக்குட்ட குனிந்து பழக்கப்பட்ட பின்தங்கிய மக்களுக்கும், ஏன் என்று கேட்க நாதியற்ற நிலையிலிருந்த ஏழை எளிய மக்களுக்காக வாதாடவும், நியாயத்திற்குப் போராடவும், கட்டுக் கோப்பான ஒரு அமைப்பு இருப்பதன் பயனை படிப்படியாக மக்கள் உணர முற்பட்டனர். தங்களுக்கென ஒரு வலிமைமிக்க அமைப்பு நாடு முழுவதும் உருவாக வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியது.

மக்கட் தொகை அடிப்படையில் 3 சதவிகிதத்தினராக இருந்த மக்கள் சமுதாயத்தில் மிகுந்த செல்வாக்கு பெற்றும், பெருவாரியான மக்கள் மீது ஆதிக்கம் செலுத்திடவும், அரசினர் வழங்கிய சலுகைகளைக் கொண்டு அடைந்த முன்னேற்றம், 1913-ம் ஆண்டு வெளிப்பட வேண்டியதாயிற்று. சர்வீஸ் கமிஷன் முன் சாட்சியமளித்தவர்கள் வெளிப்படுத்திய புள்ளி விவரங்கள் நாட்டு மக்களின் கண்களை திறந்தன. சிறுபான்மையாளரான மேட்டுக் குடியினர் 'பெரியதனம்' செய்வதை எல்லோரும் கண்டு வியக்க நேரிட்டது.

சிவில்சர்வீஸ் போட்டி பரிட்சையில் வெற்றி பெற்ற 16 பேர்களில் 15 பே. மேட்டுக் குடியினர்!

என்ஜினியர் வேலைக்கு நடத்தப்பட்ட தேர்வில் வெற்றிபெற்ற 21 பேர்களில் 17 பேர் மேட்டுக் குடியினர்!

அப்போது பதவி வகித்த டிபுடி கலெக்டர்களில் 140 பேர்களில் 77 பேர்கள் மேட்டுக் குடியினர். அதே போன்று பதவி வகித்த 128 மாவட்ட முன்சீப்புகளில் 93 பேர் மேட்டுக் குடியினர்!

இப்படி வெளியான புள்ளி விவரங்கள் சமூக கொடுமைகளைக் கண்டும் வாளாயிருந்தவர்களுக்கும், சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வைக் கண்டும் அலட்சியப் போக்குடன் வாழ்ந்த கீழ் மட்டத்தினருக்கும் விழிப் புணர்ச்சியை ஏற்படுத்தியது.

ஒரு சாரார் வாழவும் பலர் வேதனைக்கீதம் பாடவும் மேலும் இடம் தரலாகாது என்ற ஞானோதயம் பிறந்தது.

எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்—எல்லோரும் இன்ப துன்பத்தை சரி சமமாக பகிர்ந்து கொள்ள வேண்டும்—எல்லோரும் சமதர்ம பாதையை நோக்கி பீடுநடை போட வேண்டும் என்று நாடு முழுவதும் புதிய கருத்து வலுப்பெற்று வேகமாக பரவியது. அதற்கு முக்கிய பங்கு கொண்டவர் டாக்டர் நாயர்!

சமூக நீதிக்குப் போராடிய வீரர் — டாக்டர் நாயர்!
திராவிட இன உணர்ச்சிக்கு வித்தூன்றியவருள் ஒருவர்—டாக்டர் நாயர்!

தன்மான உணர்வும் தாயகப் பற்றும் மிகுந்த அரசியல் தலைவர் டாக்டர் நாயர்!

''டாக்டர் டி.எம். நாயர் அவர்கள் 15.1.1868-ல் பாலக்காட்டில் பேரும் புகழும் வாய்ந்த ஒரு செல்வக்குடியில் பிறந்தவர். டாக்டரின் தந்தை ஒருமாவட்ட நீதிபதியாகப் பணியாற்றியவர். அவர் அந்தக் காலத்திலேயே முற்போக்குக் கொள்கையும், கருத்தும் கொண்டவராக இருந்தார். அவருடைய நல்லியல்புகள், அவர்தம் மகனிடம் படிந்தன.

டாக்டர் நாயரின் முழுப் பெயர், தாரவார்த் மாதவன் நாயர் என்பதாகும். அவர் 1889-ம் ஆண்டில் மருத்துவத் துறையில் மேற்கல்வி பெற எடின்பரோ பல்கலைக் கழகத்திற்குச் சென்றார். இங்கிலாந்தில் அவர் ஏழாண்டுகள் தங்கி மருத்துவத்துறையில் நன்கு தேர்ந்தார்.

அக்காலத்தில் இங்கிலாந்தில் லிப்ரல் கட்சியினர் ஆட்சி நடந்தது. அக்கட்சியைச் சேர்ந்த கிளாட்ஸ்டோன், மார்லி ஆகியோரின் கருத்துக் களையும், கொள்கைகளையும் டாக்டர் நாயர் பெரிதும் விரும்பினார். அவர் இங்கிலாந்தில் தங்கியிருந்த காலத்தில் மருத்துவக் கல்வி பயிலு வதுடன் நின்றுவிடாமல், அரசியல், சமுதாயம், கல்வி, ஊராட்சி அமைப்பு முதலிய துறைகளிலும் நாட்டம் செலுத்தி ஆழ்ந்த அனுபவ அறிவைப் பெற்றார். காது, மூக்கு, தொண்டை ஆகியவற்றின் நோய்களுக்குச் சிகிச்சை செய்வதில் தனித்தன்மை பெற்று விளங்கிய டாக்டர் நாயரிடம், இங்கிலாந்து நாட்டு மக்கள் கூட நல்ல நம்பிக்கையும் பெருமதிப்பும் வைத்துச் சிகிச்சை பெற வருவார்கள்.

டாக்டர் நாயர் இங்கிலாந்தில் இருந்த காலத்தில் பேரறிஞர் பெர்னாட்ஷா சிட்னி வெப் முதலியவர்களுடனும் நெருங்கிப் பழகியவர்; அவர், நகராட்சி நாட்டாட்சி மன்றங்களின் நடைமுறைகளையும் நன்கு தெரிந்து தெளிவு பெற்றிருந்தார்.

1897-ல் அவர் சென்னைக்குத் திரும்பினார். 'உனது பணி என்ன என்பதை முதலில் திட்டமிடு, பிறகு பணியாற்று' என்பது அவருடைய தெளிந்த கொள்கையாகும். அவர் சென்னையில் நகராட்சி மன்ற உறுப் பினராகி நல்ல பணியாற்றினார். அவரது பணி இந்நூற்றாண்டின் தொடக் கத்தில் பல நல்ல அமைப்புமுறைகள் ஏற்பட உதவியாயிருந்தது. ரிப்பன் பிரபுவின் ஆதரவினால் அவர் உள்ளாட்சிக் கழகங்கள் (மாவட்ட, தாலூகா போர்டுகள்) செம்மையாக அமைய ஆவன செய்தார்.

மருத்துவப் பேரறிஞர் என்ற முறையில் அவர் சென்னை நகரத்திற்கு சுகாதாரத் துறையில் எண்ணற்ற சீர்திருத்தங்களைச் செய்தார். சென்னை நகரில் சாக்கடை, வடிகால் திட்டங்களைச் செம்மைப்படுத்தி நல்ல முறை யில் இயங்கச் செய்தார். குறிப்பாக, சேரிப்பகுதிகளிலும், தாழ்நிலப் பகுதிகளிலும் நல்ல சுகாதார, ஒளி வசதிகளைச் செய்ய அரும்பாடு பட்டார். ஏழை மக்களுக்கான வசதிகளைச் செய்வதில் தனி அக்கறை காட்டினார். சென்னை நகருக்குப் பாதுகாப்புள்ள வடிகட்டிய குடிநீர் வழங்குவதற்கு அவர் செய்த ஏற்பாடு குறிப்பிடத் தக்கது.

டாக்டர் நாயர், சென்னை நகராட்சியின் வருமானத்தை—பொருளா தாரத் துறையை உயர்த்தாமல் கிடைத்த உடைமைகளின் மீது வரிவிதிக்க ஆலோசனை தெரிவித்தார். அவர் நகராட்சித்துறை பொருளாதார நிபுணராகவும் திகழ்ந்தார். சென்னை சட்டக் கல்லூரியில், நகராட்சியும், பொருளாதாரமும் என்ற தலைப்பில், அவருடைய சொற்பொழிவுகள் பல நிகழ்ந்தன. அச்சொற்பொழிவுகளையெல்லாம் திரட்டி சென்னை 'இக்கின் பாதம்ஸ்' நிறுவனத்தார் நூலாக வெளியிட்டிருக்கின்றனர்.

டாக்டர் நாயர் அவர்கள், இலஞ்சம், ஊழல் ஒழுங்கீனங்கள் ஆகிய வற்றை அறவே ஒழிக்கப் பாடுபட்டார். ஆட்சித்துறையில் நிலவிய சீர்கேடுகளை நீக்கித் தூய்மையான பணி நடைபெறப் பாடுபட்டார். குடியாட்சி என்பது ஊழல்கள் இல்லாத அரசாக இருக்க வேண்டும் என்பது அவரது அவா.

டாக்டர் நாயர் பாட்டாளி மக்களுக்குச் செய்த தொண்டும் குறிப்பிடத் தக்கதாகும். இங்கிலாந்தில் அவர் இருந்தபோது அங்கே தொழிற்கட்சி ஆட்சி நடைபெற்றதால், எதிர்கால உலகம் தொழிலாளர்கள் கையில்தான் உள்ளது என்பதை உணர்ந்த நாயர், தாயகம் திரும்பியதும் இங்கு தொழிலாளர் பிரச்சினைகளில் ஈடுபட்டு பல அரிய



'நீலமுடிமன்னர்' பனகால் ராமராய நிங்கவாரு

காரியங்களைச் சாதித்திருக்கிறார். அவருடைய தொழிலாளர் பணி அரசியலாரையும் வியப்புறச் செய்தது. தொழிலாளர் பிரச்சினை குறித்து ஆராய ஏற்படுத்தப்பட்ட குழுவில் அவர் உறுப்பினராக இருந்து, தொழிலாளருக்கான பல நல்ல ஆய்வுரைகளை வழங்கியிருக்கிறார். அவருடைய ஆய்வுரைகள் பலவற்றை மார்லே பிரபு ஏற்றார்.

அக்காலத்தில் இருந்துவந்த மருத்துவக் கல்லூரி, மருத்துவ ஆராய்ச்சிக் கூடங்கள் முதலியவற்றில் நிலவிய குறைபாடுகள் பலவற்றைக் களைந்து செம்மையுடன் திருத்தி அமைத்தார். மருத்துவத் தேர்வுக் குழுவில் உறுப்பினராக இருந்து இறுதி மூச்சுள்ளவரை பணியாற்றியிருக்கிறார். பதிவு பெற்ற மருத்துவர்கள் என்ற ஒரு பிரிவினரை ஏற்படுத்த முதல் முதலில் காரணமாக இருந்தவர் டாக்டர் நாயரே ஆவார்.

சமுதாயத் துறையில் அவர் தீண்டாமையை ஒழிக்க அரும்பாடு பட்டார். இதற்கென நல்ல பிரச்சாரம் புரிந்து வந்தார்.

தீண்டாமை ஒழிப்புப் பணியில் பிறருக்கு வழிகாட்டியாக முதலில் தமது இல்லத்தில் நடைபெறவேண்டிய எல்லாப் பணிகளுக்கும் ஆதித்திராவிடர்களையே அமர்த்திக் கொண்டார்.

அக்காலத்தில், சென்னை மயிலாப்பூர் குளத்தில் ஆதித்திராவிட மக்கள் குளிக்கக்கூடாது என்ற கட்டுப்பாடு இருந்தது. அந்தக் கட்டுப்பாட்டை சட்டப்படி நீக்க வேண்டும் என்று கருதினார். மயிலாப்பூர் குளத்திற்கு நகராட்சி மன்றத்தால் இலவசமாக வழங்கப்படும் தண்ணீர், தாழ்த்தப்பட்ட மக்கள் தரும் வரிப்பணத்தினாலும்தான் வழங்கப்படுகிறது; ஆனால் தாழ்த்தப்பட்டவர் அதில் குளிக்கக்கூடாது என்றால், அப்படி மறுப்புத் தெரிவிப்பவர்கள் அந்தத் தண்ணீருக்காக நகராட்சி மன்றத்திற்கு தனியாக வரி செலுத்த வேண்டுமென்றார். அவர்கள் வரி செலுத்த ஒப்புக் கொண்டார்களே தவிர, தாழ்த்தப்பட்ட இன மக்கள் குளத்தில் குளிப்பதற்கு அனுமதிக்கவில்லை. அன்றுமுதல் டாக்டர் நாயர், தீண்டாமை ஒழிப்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்டார்.

அக்காலத்தில் சென்னை மேல் சட்டமன்றத்தில் 32 உறுப்பினர்களே இருந்தனர்; அவர்களில் சர். பி. தியாகராய(செட்டியார்)ரும், டாக்டர் நாயரும் சிறப்பு உறுப்பினராகத் திகழ்ந்தனர். இந்த நல் வாய்ப்பைப் பயன்படுத்தி ஊராட்சி, நகராட்சிகளின் சட்டத்தைத் திருத்தி நல்ல முறையில் அமைத்தார். இதனால், அவருடைய செல்வாக்கு மேலும் உயர்ந்தது. அப்பொழுது 'இம்பீரியல் லெஜிஸ்லேடிவ்' கவுன்சிலில் இருந்த 13 இடங்களையும் உயர் ஜாதியினரே கைப்பற்றி உறுப்பினராக இருந்து வந்தனர். இதற்குக் காரணம், அக்காலத்தில் படித்துப் பட்டம் பெற்ற பெரும்பாலானவர் அந்த சமூகத்தினர். இந்நிலையை மாற்றி அமைக்க விழைந்த டாக்டர் நாயர் அவர்கள், உறங்கிக் கிடந்த மக்களை, சமுதாய—அரசியல் துறைப் பணிகளில் ஈடுபடும்படி வற்புறுத்திப் பிரச்சாரம் செய்தார்.

அதன் பின்னர், விழிப்படைந்த மக்கள் அரசியல் துறையிலும், ஆட்சித் துறையிலும் பங்கு பெற்று சிறிது சிறிதாக உயர் நிலை எய்தத் துவங்கினர்.

இந்த இலட்சியத்திற்காகவே, 'ஜஸ்டிஸ்' என்ற ஆங்கில நாளிதழுக்குத் தாமே ஆசிரியராக இருந்து பணிபுரிந்தார். திரு. நாயர், அவருடன் சர். பி. தியாகராயர் போன்ற அறிவிற் சிறந்த பெரியோர்கள் பலரும் துணைநின்றனர்.

டாக்டர் நாயர், தமிழிலும், ஆங்கிலத்திலும் பொதுக்கூட்டங்களில் நன்றாகப் பேசக்கூடிய நாவன்மையைப் பெற்றிருந்தார்.

டாக்டர் நாயர் அவர்கள் சுயமரியாதை உணர்ச்சியும் தாயகப் பற்றும் மிகுந்தவர்.

முதல் உலகப் போர் நடந்து கொண்டிருந்த சமயம், யுத்தக் கப்பல் ஒன்றிற்கு கௌரவ டாக்டராக நமது நாயர் நியமிக்கப்பட்டார்.

அப்பொழுது அக்கப்பலிலிருந்த ஆங்கிலத் தளபதி ஒருவன், நாயரை ஏளனமாகப் பேசினார். உடனே நாயர், தம்மிடமிருந்த கைத்துப்பாக்கியை எடுத்து அவன் மார்புக்கு நேராக நீட்டி, நீ பேசிய இழிமொழிகளைத் திரும்பப் பெற்று மன்னிப்புக் கேட்டுக் கொள்; இல்லையேல், உன்னைச் சுட்டுக் கொன்று விடுவேன் என்று ஆத்திரத்துடன் கூறி நின்றார்.






சர். பி. டி. ராஜன்

அதைக் கண்டதும் ஆங்கிலத் தளபதி வேறு வழியின்றி, அருகிலிருந்தவர்களின் உதவியால் டாக்டர் நாயரின் செல்வாக்கை அறிந்து தனது செய்கைக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

மற்றொரு சமயம், சென்னை மருத்துவ இலாகாவின் தலைவராக இருந்த (சர்ஜன்—ஜெனரல்) வெள்ளையர், ஆங்கிலேயர்தான் தூய்மையானவர்கள்; இந்தியர்கள் அழுக்குப்படிந்தவர்கள் என்று பேசினார். அதையறிந்த நாயர், நம்நாட்டினரை இப்படி இழிவாகப் பேசினாரே ஒரு பொறுப்புள்ள அதிகாரி என்று மனம் புண்பட்டு, வேறொரு கூட்டம் கூட்டி அதில் அந்த வெள்ளை அதிகாரிக்குச் சரியான சூடு கொடுத்தார். பிறகு வெள்ளை அதிகாரியும் தம் நாத்துடுக்கை அடக்கிக் கொண்டார்.

இதிலிருந்து டாக்டர் நாயர் தம்மையும் தாயகத்தையும் பழித்தவரை எளிதில் விடமாட்டார் என்பதை அறியலாம்.

டாக்டர் நாயர் ஒருபுறம் வெள்ளையரையும், மற்றொருபுறம் சுயநலவாதிகளையும் எதிர்த்துப் போராடி, நாட்டுக்குப் பல்வேறு நல்ல பணிகளைப் புரிய வேண்டியிருந்தது. அவர், பெரும்பான்மையினரான மக்களை மிகச் சிறுபான்மையினரான மேட்டு குடியினர் வஞ்சித்து அடக்கி ஒடுக்கி ஆளுவதைக் கண்டித்தார்.

1914-ம் ஆண்டு சென்னை சட்டமன்றத்தில் தானே ஒரு சட்டத்தைக் கொண்டு, அதற்கு வாதாடி, பிறருடைய ஆதரவு பெற்று, அரசு ஏற்றுக் கொள்ளச் செய்தவர் டாக்டர் நாயர். இந்திய அரசியல் வரலாற்றில் முதன்முதலில் தனிநபர் முயன்று சட்டமாக்கிய சிறப்பு நமது நாயருக்குத்தான் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

திருமதி பெஸன்ட் அம்மையார் தன்னை எதிர்த்து தொடர்ந்த மான நஷ்ட வழக்கில், வழக்கறிஞர் உதவியின்றி தானே வாதாடி வெற்றியும் கண்டவர் நமது நாயர்.

அவரை இருதய நோயும், நீரிழிவு நோயும் படாதபாடு படுத்தியது. ஆனால் அவர் தன் பிணியின் கொடுமையை பிறருக்குக் காட்டிக் கொள்ளாது துன்பத்தை தாங்கிக் கொண்டு அயராது பொதுப்பணியாற்றினார்.

'ஆன்டிசெப்டிக்' ( Antiseptic ) என்ற ஆங்கில மருத்துவ ஏட்டின் ஆசிரியராகவும், 'ஜஸ்டிஸ்' ஆங்கில நாளிதழின் ஆசிரியராகவும் அவர் பணியாற்றினார். பலநாள் தொலைபேசியின் மூலமே 'ஜஸ்டிஸ்' ஏட்டில் வெளிவர வேண்டிய தலையங்கப் பகுதியை திறம்பட கூறியவர் நாயர்.

தொடக்கத்தில் அவர் காங்கிரசில் சேர்ந்து தொண்டு செய்து வந்தார். 1898-ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மகா சபையில் ஒரு தீர்மானத்தின் மீது பேசினார். அடுத்த ஆண்டு லெட்சுமணபுரியில் நடைபெற்ற மகாசபை கூட்டத்தில் முக்கிய பேச்சாளராக விளங்கினார். ஒரு மாநாட்டின் தொண்டர் படைக் தலைவராகப் பணியாற்றினார். 1907-ல் சித்தாரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்கு தலைமை வகித்தார்

அதே டாக்டர் நாயர் நீதிக்கட்சியில் முக்கியமானவராக விளங்கிய போது எதிரிகள் அவரை, நாத்துடுக்குடன் தாக்கியும், பழிகளை சுமத்தியும் கட்டுக்கட்டிப் பேசிடத் தலைப்பட்டனர்.

வெள்ளையர் ஏஜண்டு !
வெள்ளையனுக்கு வால் பிடிப்பவர் !
ஏகாதிபத்தியத்தின் தாசன் !
தேசப்பற்றில்லாத் துரோகி !
காட்டிக் கொடுக்கும் கூட்டத்தின் தலைவன் !

இப்படி எத்தனையோ பழிகளை அள்ளி வீசினர், அவர் பாமர மக்களின் கோட்டையாக விளங்கிய திராவிடர் இயக்கம் காலத்திலேயே பொல்லாத பழிகளுக்கு ஆளாக நேர்ந்தது.

பெருவாரியான மக்களின் கருத்தை ஏற்று இயங்குவதே ஜனநாயக அரசிற்கு அடிப்படை என்பதை திறம்பட எடுத்துரைத்த முதல் அறிஞர் நமது நாயர்! சாதி ஆதிக்கத்தை வன்மையாகக் கண்டித்து போர்க்குரல் எழுப்பிய! முதல் சீர்திருத்த செம்மல் நமது நாயர்.

சிறுபான்மையினரின் நலத்திற்கும், பாதுகாப்பிற்கும், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் (Communal G. o.) இன்றியமையாதது என்பதை வற்புறுத்திய அரசியல் வித்தகர் நமது நாயர்! மக்கள் அனைவரும், சரிசமமாக சம உரிமையோடு, சமநீதி பெற்று, ஏற்றத் தாழ்வின்றி வாழ வேண்டும் என்ற உயரிய சமதர்ம இலட்சியத்திற்கு வித்திட்டவர் நமது நாயர்.

இரசிகப் பெருமக்களுக்கு

எங்கள்

பொங்கல் வாழ்த்துக்கள்!

★

சதர்ன் மூவிஸ்

கோபாலபுரம்

கோவை

641018



வாடிக்கையாளர் அனைவருக்கும்

எங்கள்

பொங்கல் வாழ்த்துக்கள்

★

ஃ ஹோட்டல் ஈரானி

ஃ ராஜ்பவன்

ஃ கஸ்தூரி லாட்ஜ்

கோயமுத்தூர்



ஃ ஆதரவாளர்

அனைவருக்கும்

அன்பு வாழ்த்துக்கள்

ஸ்ரீமதி இன்ஜினீயரிங்

ஒர்க்ஸ்

138 பட்டேல் ரோடு

கோயமுத்தூர்-9.



எங்கள் இதயம் கனிந்த

பொங்கல் நல் வாழ்த்துக்கள்!

ரசிகர்களே...

பொங்கல் முதல்

அருளில்

புண்ணியம் செய்தவள்

இருதயாவில்

இளையதலைமுறை

—தியேட்டர் இருதயா

—தியேட்டர் அருள்

பிரிட்டிஷ் பாராளுமன்ற கூட்டு குழுவை சந்தித்து நமதுகோரிக்கைகளை வலியுறுத்த டாக்டர் நாயர் இலண்டன் சென்றபோது அவருக்கு ஏகாதிபத்திய அரசு தடை விதித்தது. எதையும் வெளிப்படையாக யாரிடமும் பேசக் கூடாது என்றும், எழுதக் கூடாது என்றும் கட்டளையிடப்பட்டது. பின்னர் சர். தாமஸ் பார்தோ தலையிட்டு நாயரின் கருத்தை அறிய வழிகோலினார். அங்கு நோய் வாய்ப்பட்டிருந்த நிலையில், மரணப் படுக்கையிலிருந்து நமக்காக வாதாடி அரிய யோசனைகளைக் கூறி தனது கடைசி மூச்சை விட்டார். அவரது உடல் 'கோலடரீஸ் கிரீன்'எனும் இடத்தில் தகனம் செய்யப்பட்டது. டாக்டர் ஏ.ஆர். மேனன் நாயரின் அஸ்தியை சென்னைக்குக் கொண்டு வந்தபொழுது, சென்ட்ரல் ரயில் நிலையத்தில் மக்கள் திரண்டு வந்து கூடியிருந்தனர். பலர் கண்ணீர் வடித்து நின்றனர். ஆதிதிராவிட பெருங்குடி மக்கள், தொழிலாளர்கள், "அஸ்திக்' கலசத்தைத் தொட்டு அருமைத் தலைவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

இந்தியாவை அடிமைப்படுத்தி ஆண்ட ஆங்கிலேயர் முதல் உலகப் போரில் 1914-ம் ஆண்டு ஈடுபட்டிருந்தனர். அந்தப் போரில் ஈடுபட்ட பிரிட்டனுக்கு இந்தியர்கள் ஆள் பலமும் பொருள் உதவியும் அளித்து ஆங்கிலேயர் வெற்றிபெற துணை நின்றனர். அதற்கு கைமாறாக இந்தியர்களுக்கு மேலும் மேலும் புதிய பொறுப்புகளையும் அதிகாரங்களையும், அளிக்க வெள்ளையர் கட்சி வாக்குறுதியளித்தது.

"இந்திய அரசியலில் இந்தியர்களுக்கு அதிகப்படியான பங்களித்து பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இந்தியாவுக்குப் பொறுப்பாட்சி அளிப்பதே பிரிட்டிஷ் அரசின் நோக்கம்"

என்று இங்கிலாந்து பாராளுமன்றத்தில் இந்தியா மந்திரி மான்டெகு ஒரு அறிக்கை வெளியிட்டார். இந்த அறிக்கை 1917-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20-ம் நாள் இந்திய அரசின் தனி 'கெஜட்டில்' வெளியிடப்பட்டது.

அந்த காலத்தில் இந்தியர்களின் குறைபாடுகளை பிரிட்டிஷ்காரர்களுக்கு தெரிவித்து பரிகாரம் தேடவும், ஆள்வோருக்கும், ஆளப்படுவோருக்கும் ஒருவிதத் தொடர்பை உண்டு பண்ணவும் இந்திய நலன் விரும்பும் பெரியவர்களால் முதன் முதல் இந்திய நேஷனல் காங்கிரஸ் ( Indian National Congress ) தோற்றுவிக்கப்பட்டது. துவக்கத்தில் இது மிதவாதிகளின் ( Moderates ) அமைப்பாகவே இருந்தது. ஆண்டுதோறும் கூடும் மகாநாடுகளில் 'ராஜவிஸ்வாசப் பிரமாணம்' நிறைவேற்றும் நிலை இருந்தது.

சென்னை மாகாணத்தில் அந்த இயக்கம் பரவியது. அதன் வளர்ச்சிக்காக இங்குள்ளவர்கள் தீவிரமாக பாடுபட்டனர். 1887, 1894, 1903, 1908, 1914 ஆகிய ஆண்டுகளில் காங்கிரஸ் மகாசபையின் வருடாந்திர கூட்டத்தை சென்னையில் கூட்டினர்.

நீதிக்கட்சியை துவங்குவதற்கு முன்னர் டாக்டர் டி. மாதவனும் (T. [redacted]. Nair) சர். பி. தியாகராய (செட்டியார்)ரும் காங்கிரஸ் மகாசபையில் ஆரம்ப காலத்தில் தீவிரமாக பங்கு கொண்டிருந்தனர்.

1916-ம் ஆண்டு சென்னை சட்டசபையில் இருந்து மத்திய சட்டசபைக்கு டாக்டர் 'டி. மாதவன் (டி.எம். நாயர்)அவர்களைத் தேர்ந்தெடுக்க வாக்களிக்கப்பட்டது. ஆனால் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. ஆச்சர்யப் படத்தக்க வகையில் அவர் தோற்கடிக்கப்பட்டார்; பி.என். சர்மாவும், வி. எஸ். சீனிவாச(சாஸ்திரியும்) தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த சம்பவம் எல்லோரிடத்திலும் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது.

தங்களுக்கென ஒரு அமைப்பு வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்றது.

மேலும், காங்கிரஸ் மகாசபையின் அகில இந்திய அமைப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அனைவருமே தென்னகத்தில் மேட்டுக் குடியினராவர். சமுதாயத்தின் கீழ்மட்டத்தில் இருந்த பெருவாரியான சமூகத் தலைவர்கள், திறமையும் தகுதியும் பெற்றிருந்தும், அரும்பணியாற்றி புகழ் பெற்றிருந்தும் காங்கிரஸ் மகாசபையின் பதவிகளையோ பொறுப்புகளையோ பெற்றிடவில்லை. பலர் பரிதாபமாக தோற்கடிக்கப்பட்டனர். மேலும் 1907-ம் ஆண்டு சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபையில் "திலகர்' தலைமையில் தீவிரவாதிகள் தலைமையை கைப்பற்ற முனைந்து தோல்வி கண்டதும் காங்கிரஸ் மகாசபையில் பிளவுகள் ஏற்பட்டன. தீவிர வாதிகளுக்கும், மிதவாதிகளுக்குமிடையே சுமுக நிலையை உண்டாக்க 1914-ம் ஆண்டு டாக்டர் அன்னிபெசண்ட் அம்மையார் முயன்றார். அதில் அம்மையார் தோல்வியை அடைந்தார்கள்.

பின்னர் "ஹோம்ரூல்" இயக்கத்தை தனியாக டாக்டர் பெசன்ட் அம்மையார் துவக்கினார்கள். அந்த புதிய இயக்கம் சென்னையில்தான் 25-9-1915-ல் துவக்கப்பட்டது. தனது கருத்துக்களை பரப்ப 'நியூ இந்தியா' என்ற பத்திரிகையும் வெளிவந்தது. அம்மையாரின் புதிய இயக்கத்திற்கு இங்குள்ள மேட்டுக் குடியினரே ஆதரவளித்தனர். அதற்கு நியாயமான காரணமும் இருந்தது.

திலகரும், பெசன்ட் அம்மையாரும் பழங்கால இந்து சமுதாய முறைகளிலே நம்பிக்கை கொண்டிருந்தனர். ராஜாராம் மோகன்ராய், ஜோதிபாபுலே போன்றவர்கள் துவக்கிவைத்து; ஜஸ்டிஸ் மகாதேவ் கோவிந்த ராணடேவும், அவருடைய சீடரான கோகலே போன்றவர்களால் ஊக்குவிக்கப்பட்ட சமுதாய மறுமலர்ச்சியிலோ, சீர்திருத்தத்திலோ — "ஹோம்ரூல்" இயக்கத்தினர் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை.

பெசன்ட் அம்மையார் நிறுவிய தியசாபிகல் சங்கம் (Theosophical Society) இந்து மதத்திற்கு அரணாகவும், ஜாதி வேற்றுமைகளை கொண்ட சமுதாய அமைப்புகளின் பெருமையை பாதுகாத்திடும் நிலை இருந்தது. அதனால் தென்னாட்டில் முன்னேறிய சமூகத்தைச் சேர்ந்த மேட்டுக் குடியினர் பெசன்ட் அம்மையாரின் "ஹோம்ரூல்" இயக்கத்தில் தீவிர பங்கு கொண்டு, நமது இயக்கத்தை தாக்கிட புதிய புகலிடம் கண்டனர்.

திலகரின் பிடியில் காங்கிரஸ் கட்சி சுமார் 20 ஆண்டு காலம் இருந்தது. அதற்கு முன்னர் காங்கிரஸ் மகாசபை சமுதாய சீர்திருத்த மாநாடுகளை அரசியல் மாநாட்டு நிகழ்ச்சிகளுடன் நடத்தி வந்தது. ஆனால், தென்னகத்தில் கூட்டப்பட்ட காங்கிரஸ் மகாசபையின் மாநாடுகள், சமுதாய சீர்திருத்தங்களின் அவசியத்தை பேசுவதற்குக்கூட வாய்ப்புகள் அளிக்கப்படவில்லை. அரசியல் மாநாடு மட்டுமே நடைபெற்று வந்தது. சமுதாய சீர்திருத்த மாநாடுகள் இங்கே நடத்தப்படக் கூடாது என திலகர் எதிர்த்தார்.

அதே சமயம் காங்கிரஸ் மகாசபையிலும் சாதி கண்ணோட்டம்' வகுப்பு உணர்வு போன்ற தீய சக்திகள் தலைவிரித்தாடியது! காங்கிரஸ் மகாசபையின் வளர்ச்சிக்காக பாடுபட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் திரு. வி. கல்யாணசுந்தர (முதலியார்), டாக்டர் வரதராஜுலு நாயுடு, சி.என். முத்துரங்க முதலியார், பெரியார் ஈ.வெ.ரா. ஆகியோர் ஆவார்கள்.

Phone: 23033 Grams: KAYARSONS

WISH YOU ALL
A HAPPY PONGAL

K. R. & Sons
Jewellery

Jewellers & Diamond Merchants
Big Bazaar Street
COIMBATORE-641001

LET PONGAL
CROWN YOU
WITH SUCCESS

The New Theatres
Carnatic Talkies (P) Ltd.

114, Big Bazaar Street
COIMBATORE-1




காரைக்குடியில் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் மகாசபை கூட்டத்தில் திரு. சி.என். முத்துரங்க முதலியார் திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டார். இதனால் மேலும் பலர் விழிப்படைய நேர்ந்தது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் சமுதாயத்தின் கீழ் தளத்தில் உள்ள மக்கள் தங்களுக்காக தனி அமைப்பு ஒன்று அவசியம் என்று மேலும் தீவிரமாக கருதியதிலும், அதற்கான ஆக்க வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டதிலும் தவறில்லை.

பிறக்க வேண்டிய உரிய நேரத்தில், நீதியின் அடிப்படையில், நியாயமான கோரிக்கைகளை முன்நிறுத்தி உருவாக்கப்பட்டதே நமது இயக்கம்!

1916-ம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 20-ம் நாள், நமது வரலாற்றில் மறக்க முடியாத நாள்! இந்திய அரசியல் வரலாற்றில் நலிந்த சமூகத்தினருக்கு நல்வாழ்வளிக்க வழி கோலிய நாள்!

அன்று சென்னை பூவிருந்தவல்லி, நெடுஞ்சாலையில் குடியிருந்த வழக்கறிஞர் திரு. டி. எத்திராஜி (முதலியார்) இல்லத்தில் நமது இயக்கம் பிறந்தது!

சர். பி. தியாகராயர், டாக்டர் டி. மாதவன் நாயர், டாக்டர் சி. நடேச (முதலியார்), பனகால் அரசர் உள்பட பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஏராளமான பிரமுகர்கள் ஒன்றுகூடி, கலந்துபேசி, ஒருமனதுடன் பல நல்ல முடிவுகளை மேற்கொண்ட நாள்!

நமது கருத்துக்களை வெளியிடவும், வற்புறுத்தவும், நமக்கென்று ஏடுகள் நடத்த முடிவு செய்தனர். அதற்கென்று தென் இந்திய மக்கள் சங்கம் ( South Indian peoples Association ) நிறுவினர். நமது இயக்கத்தின் ஆக்கப் பணிகளுக்கான நிதியை திரட்டும் பொறுப்பும் இதனிடமே ஒப்படைக்கப்பட்டது. ஒரு பங்கு ரூ. 100 வீதம் 1000 பங்குகளைக் கொண்ட மூலதனத்துடன் இந்த நிறுவனம் செயல்படத் துவங்கியது.

''ஜஸ்டிஸ்'' (ஆங்கில நாளிதழ்), திராவிடன் (தமிழ் நாளிதழ்), ஆந்திர பிரகாசிகா (தெலுங்கு நாளிதழ்) துவங்கப்பட்டன. மக்களின் அரசியல் பிரச்சினைகளைக் கவனிக்க 'தென் இந்திய நல உரிமைச்சங்கம். (South Indian Liberal Federation ) என்ற பெயருடன் நமது இயக்கம் பிறந்தது.

சர்.பி. தியாகராயர் கட்சியின் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார் அவரே நமது இயக்கத்தின் முதல் செயலாளர்!

அடுத்து சில திங்களில் கட்சியின் சட்ட திட்டங்களும் (Constitution) உருவாக்கப்பட்டன.

சமுதாயத்தின் அடித்தட்டில் உள்ள மக்களின் அரசியல் முன்னேற்றம், பொருளாதார முன்னேற்றம், சமூக முன்னேற்றம், மற்றும் தனி நபர்களின் ஒழுக்கம் மேம்பாட்டை பேணிக்காப்பதும், கட்சியின் முக்கிய நோக்கம் என்று பிரகடனப் படுத்தப்பட்டது. மேலும் அனைத்து சமூகத்தினரின் உரிமைகளை பாதுகாப்பது. படிப்படியாக மக்களை பக்குவப்படுத்தி திட்டமிட்ட அரசியல் முன்னேற்றத்திற்கும் மாற்றங்களுக்கும் பாடுபடுவது கட்சியின் இலட்சியங்கள் என அறிவிக்கப்பட்டது.

பலாத்காரம் வெறுக்கத்தக்கது!
ஜனநாயக முறையே சிறந்தது!
என்று இயக்கம் துவக்கப்பட்ட காலத்திலேயே, வேட்டு முறையை வெறுத்து ஒதுக்கி, ஓட்டுமுறையை வகுத்துக் கொண்டனர் நம் தலைவர்கள்.

தலைவர்களிடையே காணப்பட்ட தனிச் சிறப்பு — எல்லோரும் சமுதாய சீர்திருத்தத்தில் (Social Reform) பற்று கொண்டிருந்ததேயாகும். சமுதாய சீர்திருத்தப் பணியை ஒதுக்கி வைத்துவிட்டு அரசியல் சீர்திருத்தத்தில் ( Political Reform ) மட்டும் நம்பிக்கை கொள்வது பயனற்றது என்பதை நன்கு உணர்ந்தே கட்சி செயல்பட்டது.

1916-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் செயலாளர் என்ற பொறுப்பில் சர். பி. தியாகராயர், இயக்கத்தின் அடிப்படை கொள்கை பிரகடனம் (Manifesto) வெளியிட்டார்.

அந்த நீண்ட அறிக்கையில் புள்ளி விவரங்களோடும், நியாய வாதங்களோடும், நமது இயக்கத்தின் இலட்சிய பயணத்தை விரிவாக விளக்கினார்.

பல்வேறு துறைகளில் பெருவாரியான மக்களின் இழப்புகளை சுட்டிக் காட்டி, புதிய நிலைமைக்கு ஆயத்தமாக வழிமுறைகளை வகுத்தளித்தார்.

சம உரிமைக்கும், சம தர்மத்துக்கும் பாடுபட நாட்டு மக்களுக்கு விடப்பட்ட முதல் அழைப்பே அந்த அறிக்கை!

படிப்படியாக அரசியல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, இந்த நாட்டு மக்கள் அனைவரும் போதிய தகுதியையும், திறமையையும் அனுபவத்தையும், நல் அறிவையும், பொறுப்புணர்ச்சியையும் பெற்றிட முதலில் வழிவகுக்க வேண்டும் என்று துறைத்தனத்திற்கு பின்தங்கிய மக்கள் சார்பாக பல தலைமுறைகளாக அடிமைப்பட்டு, தாழ்ந்த நிலையில் தவித்திடும் மக்கள் சார்பாக அந்த அறிக்கை பரிந்துரைத்தது.

இதனால் நல்ல பலனும் ஏற்படத் துவங்கியது, நாடெங்கும் நமது இயக்கம் பரவியது. திட்டமிட்டபடி மூன்று நாளேடுகள் – மூன்று மொழிகளில் வெளிவந்தன.

கேட்பாரற்ற நிலையில், விருப்பம்போல பிறர்வாழ்வை பறித்து; பூரிப்புடன் வாழ்ந்த ஆதிக்க வெறியர்கள்; நமது இயக்கத்தை எதிர்க்க தலைப்பட்டனர்.

அரசியல் மேதை சர். பி. தியாகராயர் அவர்கள் 1852-ல் பிறந்தவர் செல்வக் குடும்பத்தில் பிறந்தவராயினும் வாழ்க்கையில் எளிமையைக் கடைப் பிடித்தார். அவருடைய காலமும், சூழ்நிலையுமே அவரை சிறந்ததோர் இலட்சியவாதியாக்கின.

அவர் 1876-ல் சென்னைப் பல்கலைக் கழக பட்டதாரியானார்: சில ஆண்டுகளுக்குப் பிறகு சென்னைப் பல்கலைக் கழகத்தின் உறுப்பினரானார். பல்கலைக் கழகங்கள் எல்லா அதிகாரங்களும் பெற்று ஒரு சுதந்திர நிறுவனமாக இயங்க வேண்டுமென்பதற்காக அவர் தீவிரமாகப் போராடினார்.



ராஜாஜி

நாட்டுப் பற்றும், தொண்டுணர்ச்சியும் கொண்ட தியாகராயர் மக்களிடையே விழிப்புணர்ச்சியை உண்டாக்கவும், கல்லாமையை அகற்றவும், வறுமையை ஒழிக்கவும் பாடுபட்டார். கல்வியைப் பரப்ப அவர் பல கல்வி நிலையங்களோடு தொடர்பு கொண்டிருந்ததுடன், தாமே ஒரு பள்ளியையும் சென்னையில் நிறுவினார். அதுதான் இப்பொழுது அவர் பெயரால் ஒரு கல்லூரியாக இயங்கி வருகிறது. தொழிற்கல்வியின் இன்றியமையாமையை உணர்ந்து சென்னை வேப்பேரியில் செங்கல்வராயன் தொழிற்கல்வி நிலையம் உருவாவதற்கும் அரும்பாடுபட்டார்.

நம்நாடு படிப்படியாக சுதந்திரம் பெறவேண்டும் என்ற வேட்கை கொண்டிருந்தார். சுதந்திரத்தின் முதற்படியாக நகராட்சி மன்றங்களைக் கைப்பற்றவேண்டும் என்று கருதினார். அதன்படி அவர் சென்னை நகராண்மைக் கழக உறுப்பினரானார். ரிப்பன்பிரபு காலத்தில் நகராட்சிச் சட்டம் திருத்தப்பட்டதும், சென்னை நகராட்சியின்முதல் தலைவராக சர். தியாகராயர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் தலைவரானதும் நகராட்சி மன்றத்தில் ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கினார். ஏழை மக்கள் வதியும் பகுதிகளிலும், சேரிப்பகுதிகளிலும் முதற்கவனம் செலுத்தி சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்தார்.

பல இன்னல்களுக்கிடையேயும்தன்னம்பிக்கையுடன் எதையும் தாங்கும் இதயமுடையவராய்ப் பணியாற்றினார்.

மிண்டோ—மார்லி சீர்திருத்தத்தையொட்டி சென்னை மேல்சபையில் நகராட்சி மன்றத்தில் பிரதிநிதியாக இருமுறை சர். தியாகராயர் உறுப்பினராக இருந்து ஏழை—பிற்பட்ட சமுதாயத்தின் உரிமைகளுக்காக வாதாடினார்.

1914-ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற காங்கிரசு மாநாடு ஒன்றிற்குப் பார்வையாளராகச் சென்றிருந்த தியாகராயர், அதில் ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு, காங்கிரஸ் தென்னாட்டிற்குகந்த கட்சியல்ல; வங்காளத்துக்கும் பம்பாய்க்கும்தான் உகந்தது என்று கூறினார். அன்று முதல் அவருடைய அரசியலில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது.

முதல் உலகப் போர் துவங்கியதும் மாண்டேகு பிரபு உலகப்போரின் காரணங்களை விளக்கியும், இந்தியருக்குஆட்சித்துறையில் நேரிடையான பங்கு அளிப்பதாகவும் ஒரு அறிக்கை வெளியிட்டார். அதை தியாகராயர் அவர்கள் வரவேற்று, நிர்வாகப் பொறுப்பை ஏற்க மக்களைத் தயாராக்க எண்ணினார்.

ஆங்கிலேய சுரண்டல்காரரிடமிருந்தும், அயல்நாட்டு கூட்டிலிருந்து விடுவித்துக்கொள்வதுதான் உண்மை விடுதலை என்று அவர் முடிவு செய்தார். தென்னக பூர்வீக குடிமக்கள் பெரும்பாலோர் நிர்வாகத்தில் பங்குகொள்ள வேண்டும் எனும் நோக்கத்தோடு அவர் பாடுபட்டார்.

ஜனநாயகம் என்பது பெரும்பான்மையினரால் நடத்தப்படுவதாகும்; பெரும்பான்மையான சமுதாயம்தான் இந்நாட்டை ஆள வேண்டும்; அதுதான் ஜனநாயகம்—என்று அவர் திடமாகக் கருதினார்.

இந்தக் குறிக்கோளை அடைய அவர் நீதிக்கட்சியைத் தோற்றுவித்தார். நீதிக்கட்சி உண்மை நீதியை—பலரும் ஒத்துக்கொள்ளும் நிலையை நிலைநாட்டப் பாடுபட்டது. அக்கட்சி, சுயநல சூழ்ச்சிக் கும்பல்களை எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது.

நீதியும் நேர்மையும் தாராள மனப்பான்மையும் கொண்ட நீதிக்கட்சி நிர்வாகத்தில் சிறுபான்மை சமுதாயத்திற்கு கிடைக்க வேண்டிய உரிமைகளைவிட அதிகமாகவே கிடைத்தன. குறிப்பாக முகம்மதிய சமுதாயத்திற்கு நியாயத்துக்கு அதிகமாகவே உரிமை கிடைத்தது; அதைப்போலவே பல சிறுபான்மையினரும் உரிமை பெற்றனர். இவ்வாறு அரசியலில் தூய பணியாற்றிய அவரைத்தான், பதவி வெறியர் என்று ஒருசாரார் பிரச்சாரம் செய்தனர்.

நீதிக்கட்சிக் காலத்தில்தான், தென்னாட்டில் திராவிட கலாச்சாரம் பற்றி மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது.

ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் வரை சென்னை நகராண்மைக் கழகத்தில் உறுப்பினராக இருந்த அவர் தூய வாழ்வு வாழ்ந்து வந்தார். தம்மிடமிருந்த செல்வமனைத்தையும் பொதுவாழ்வில் வாரி இறைத்துவிட்டு ஓட்டாண்டியானார். இறுதிக் காலத்தில் அவருடைய பேரன், ஒருவேலை பார்த்துத்தான் தன் வாழ்க்கை நடத்தவேண்டும் என்றநிலை வந்தது.



அன்னிபெசண்ட் அம்மையார்



தந்தை பெரியார்

“பிறப்பினால் உயர்வு தாழ்வு, கற்பிக்கும் மரபு இங்கு இருந்ததல்ல! சமூகக் கொடுமைகளை எதிர்த்து 2400 ஆண்டுகளுக்கு முன்னரே புத்தர்போராடினார். பின்னர் பற்பல சீர்திருத்தவாதிகள் முயன்றனர். தோல்வியே கண்டனர். சாதிக் கோட்டையை தகர்த்தெறிய இதுவே தக்கதருணம்!” என்று துணிவுடன் தயங்காது முதன் முதலில் மக்களை தட்டி எழுப்பிய பெரியவர் சர். பி. தியாகராயர்!

நெசவாளருக்கு ஊக்கமளித்து, கைத்தறியை பேணிக் காத்திட்டவர் தியாகராயர். சுதேசி இயக்கம் வலுப்பெற்று வரும் நேரத்தில் கைத்தறிக்கு வாழ்வளித்தவர். அவர். வாணிபம் செழித்திட 1910-ம் ஆண்டிலேயே தென்னிந்திய வர்த்தக சபா ( South India chamber of commerce ) நிறுவி பல தொழில்கள் சீராக நடைபெற அதன் தலைவராக பல ஆண்டுகள் பாடுபட்டார்.

ஆரம்ப கல்வியும், தொழில்கல்வியும் ஊக்கம் பெற வேண்டுமென்று அறிவுறுத்தி, ஏழை மாணவர்களுக்கு நண்பகல் உணவை இலவசமாக பள்ளிகளில் வழங்கிடும் திட்டத்தை அந்தக் காலத்திலேயே அமுலாக்கியவர், அவர்.

சென்னை தண்டையார்பேட்டையில் உள்ள அவரது இல்லத்திற்கு யார் வேண்டுமானால், எந்தநேரத்தில் வேண்டுமானாலும் சென்று அவரை சந்தித்து குறைகளை எடுத்துக்கூற எவ்வித தடையும் இருந்ததில்லை.

சென்னை மவுண்ட்ரோடு அஞ்சலகத்தின் எதிரே உள்ள ‘காஸ்மாபாலிடன் கிளப்’ அவருக்கு ஓய்விடமாகும். அங்கும் அவர் எல்லோரிடமும் பழகி அன்பு செலுத்தி நல்லவர் – வல்லவர் – பெரியவர் என்ற பெயரை பெற்றார்

1925-ம் ஆண்டிலே ஜூன் திங்கள் 30-ம் நாள்அவர் மரணமடைந்தச் செய்தி கேட்டு மக்கள திரளாகக் கூடி இறுதி அஞ்சலி செலுத்தினர்.

பிறர் வாழ வழிகாட்டிவிட்டு, சொந்த குடும்பத்தை வறுமையில் வாட செய்துவிட்டு பிரிந்தார் அந்த பெரியவர்.

துவக்கத்தில் ஜஸ்டிஸ் ஆங்கில நாளிதழுக்கு திரு. கருணாகரமேனன் ஆசிரியராக பணியாற்ற இசைந்தார். அவர் இத்துறையில் நல்ல முன் அனுபவம் பெற்றவர். இதை அறிந்த எதிரிகள் சதிபுரிந்தனர். கடைசி நேரத்தில் அவர் மனம்மாறி மறுப்பு தெரிவித்துவிட்டார். உடன் டாக்டர் நாயரே ஆசிரியர் பொறுப்பேற்று, தான் இறக்கும்வரை ஆசிரியராக தொண்டுபுரிந்தார். பலவேலைகளுக்கு இடையே, அவர் புரிந்த எழுத்துப் பணி நமது இயக்கத்திற்கு மதிப்பிட இயலாதது.

எதிரிகளின் கூற்றை அம்பலப்படுத்தி, பகைவர் முகாமை தகர்த்தெறிவதில் அவர் வல்லவர். ‘ஜஸ்டிஸ்’ ஏட்டின் தனிச் சிறப்பே, அதனை எதிரிகள் தவறாது படித்துவந்ததே யாகும்.

பிற்காலத்தில் மக்கள், தென் இந்திய நல உரிமைச் சங்கம் (S.I.L.F.) என்ற பெயருடன் நமது கட்சியை அழைக்கும் நிலைமாறி ‘ஜஸ்டிஸ்’ ஏட்டின்



பெயருடன் ''ஜஸ்டிஸ் கட்சி'' என்றே கூற முறபடடன.

டாக்டர் நாயருக்குப் பிறகு; உலகப் புகழ்பெற்ற ஆங்கில அறிஞர் திரு. ஏ.இராமசாமி முதலியார் அப்பணியைத் தொடர்ந்தார்.

நாவன்மை படைத்த நமது தலைவர்களின் மேடைப் பேச்சுகளும், எழுத்து வேந்தர்கள் அந்தக் காலத்திலேயே நமக்கு கிட்டியதும்; இயக்கம்; அச்சமின்றி, முறையாக, எங்கும் எளிதில் பரவிட உதவியது. நாட்டு மக்களின் ஆதரவு நமது இயக்கத்திற்கு திரண்டது. நல்லோர் நெருங்கினர். நாடு பல நல்லவற்றை கண்டது.

எதிரிகளுக்கு ஏமாற்றம் ஏற்பட்டது.

ஏசினர்!

தூற்றினர்!

மக்கள் ஏமாற்றமடையவில்லை!

அதுமட்டுமல்ல! அந்தக் காலத்திலேயே நம்மை ஒழித்துக்கட்ட திட்டமிட்டு செயல்பட்டனர்.

பண்பட்ட அரசியலுக்கு பக்குவப்படாத ஏமாளிகளை ஏவி, சென்னை மாகாண சங்கம் என்ற புதிய அமைப்பை உருவாக்கி, நம்மை தாக்கிப் பேசி சீர்குலைத்திட திரு. கேசவப்(பிள்ளை) தலைமையில் பலரை தூண்டிவிட்டனர் "ஹோம் ரூல்' இயக்கத்தினர்! அந்த முயற்சி ''கெடுவான் கேடு நினைப்பான்" என்ற கதையில் முடிந்தது!

கடை விரித்தோம் — வாங்குவாரில்லை என்ற நிலை ஏற்பட்டு சில திங்களில் இருக்குமிடம் தெரியாது வேகமாக மறைந்துவிட்டது!

போலிக் கூத்துக்கு மக்கள் மயங்கிடவில்லை!

எங்கு நோக்கினும் சிவப்பு வண்ணக் கொடியில் நமது 'தராசு' சின்னம் பட்டொளி வீசிப்பறக்கும் காட்சி; தென்னக மக்களின் உள்ளத்தில் புதிய தெம்பையும், இன்பத்தையும் அளித்தன.

எங்கும் கட்சிக் கூட்டங்கள் கொட்டகை நிரம்பி வழியும் நிலையில் மக்கள் அலைமோதியவண்ணம், தலைவர்கள் கருத்து மழை பொழிந்தனர்.

அதிலும் டாக்டர் டி. எம். நாயர் மண்டபத்தில் பேசும் நிலை மாறி, திறந்த வெளியில் பேச வேண்டிய நிலை அந்தக் காலத்திலேயே ஏற்பட்டது.

இருந்தும் எதிரிகள் நமது கட்சிக்கு பாமர மக்களின் ஆதரவு இல்லை என்ற பல்லவியே பாடினர்!

அது சீமான்களின் கட்சி என்று கேலி பேசிப் பழக்கப்பட்டவர்கள் திணறிடும் நிலை ஏற்பட்டது.

எத்தனையோ மாநாடுகளை அப்போதே கூட்டினர். அதிலும் குறுகிய காலத்தில் பல்வேறு இடங்களில் நமது மாநாடுகள் நடைபெற்றன.

1917-ம் ஆண்டில்! ஆம் ஒரே ஆண்டில்!

| | |
|---|---|
| அக்டோபர் | 19-ல் கோவை மாநாடு |
| ,, | 27, 28-ல் ஆந்திராவில் மாநாடு |
| நவம்பர் | 3—ல் நெல்லை மாநாடு |
| ,, | 4-ல் ராயல சீமையில் மாநாடு |
| ,, | 11, 12— பெஜவாடாவில் மாநாடு. |

இப்படி பல்வேறு இடங்களில் கூடிய நமது மாநாடுகள், எதிர்பார்த்த பலன்களைவிட அதிகமாகவே நமக்கு அளித்தது.

பல்வேறு மொழியினர் நமது அணியில்!

பல்வேறு மதத்தினர் நமது முகாமில்!

பல்வேறு சாதியினர் நமது படைவரிசையில்!

அப்படி கூடிய மக்களிடையே வேற்றுமைகள் காணப்படவில்லை. எல்லோரும் சம உரிமையோடு, சகோதர மனப்பான்மையுடன் கூடினர்.

பெரிய ஊர்வலங்களில், அலங்கரிக்கப்பட்ட 'சாரட்' வண்டிகளில் (COACH) தலைவர்களை வாழ்த்தி அழைத்துச் சென்று மாநாடுகளை சிறப்பித்தனர்.

செய்வதறியாது தலைகுனிந்தனர் எதிரிகள்!

தூற்றித்திரிந்தவர்கள் வாய்மூடித் தவித்தனர்!

பகைவர்கள் கொட்டம் தானாக அடங்கியது.

அடுத்து 1917-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் 28, 29 தேதிகளில், சென்னை மாகாண நீதிக்கட்சி மாநாடு சென்னை வெலிங்டன் திரையரங்கில் கூடியது. கொட்டகையில் போதிய இடமில்லாத காரணத்தினால், வெளியே ஒலிபெருக்கிகள் மூலம், மாநாட்டு நிகழ்ச்சிகளை பல்லாயிரக்கணக்கான மக்கள், வெளியே கூடிநின்று கவனித்து வந்தனர். சென்னை மாநகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது.

நல்ல தரமான அரசியல் விளக்கங்களை அளித்து தலைவர்கள் அறிவு மழை பெய்த காட்சி மறக்க முடியாதனவாகும்.

- ''எவர்மீதும் உள்ள பகையினால் இயக்கம் தோன்றிடவில்லை — எல்லோரிடமும் அன்பை அடிப்படையாகக் கொண்டது!''
- ''எங்களுக்கு சீர்திருத்தத்தில் மிக்க அக்கறை உண்டு. அதனால் தான் ''ஹோம் ரூல்'' இயக்கத்தை எதிர்க்க வேண்டியிருக்கிறது. ஆனால், ''ஹோம் ரூல்'' அல்லது ''சுயராஜ்யம்'' எங்கள் இலட்சியமாகும். அதனை அடைவதற்கு நாங்கள் கூறும் வழி வேறு. படிப்படியாக சுதந்திரம் பெறவேண்டும் என்று நாங்கள் கூறுகிறோம்.''
- ''எங்கள் கட்சி எங்களை பாதுகாத்துக்கொள்ளவே தோன்றியது. இது ஒரு 'தற்காப்பு இயக்கம். சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே செயல்படுவோம்.''
- ''இந்தியா சுயராஜ்யம் பெறவேண்டுமானால் ஒடுக்கப்பட்டவர்களும், பின்னணியில் நிற்கும் சமூகங்களும் முன்னேற்றம் அடைந்தே தீரவேண்டும். எல்லா சமூகங்களும், சம அந்தஸ்து, சமதர்மப் பங்குகள் பெறவேண்டும்.''
- ''இந்த மாகாணத்தைப் பொறுத்தவரையில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் மிகமிகத் தேவை''. நாங்கள்— வீண்கனவு காண்போரல்ல — காரியவாதிகள், பாமரமக்கள் மனதிலே தப்பெண்ணங்களையும், வீண் நம்பிக்கைகளையும் உண்டுபண்ண நாங்கள் விரும்பவில்லை.''
- ''ஆரம்பக் கல்வி அறிவை எல்லோரும் பெறவேண்டும். அத்துடன் விவசாயக் கல்வி, தொழிற்கல்வியும் வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை மேலும் தீவிரமாக துறைத்தனம் செய்திட வேண்டும். தாய்மொழியில் கல்வி பயிலும் நிலையை அடைய வேண்டும்!''



- ''கூட்டுறவுத்துறைமூலம் விவசாயிகள் உதவிபெற வேண்டும்.''
- ''புதிய விவசாய முறைகள் எங்கும் பரவவேண்டும்.''
- ''பஞ்சாயத்துக்களுக்கு அதிகப்படியான அதிகாரமளித்து, பொது மக்களின் கோரிக்கைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்.''
- ''நமது எதிரிகள் எதைச் செய்தாலும், என்ன பேசினாலும் நீங்கள் பதிலுக்கு வெறுக்க வேண்டாம். கேலி பேசுவோர் பேசட்டும். நீங்கள் அதை பொருட்படுத்த வேண்டாம். நீங்கள் தன்நம்பிக்கையோடும், தன்மான உணர்ச்சியோடும் கடமையை செய்யுங்கள். வெற்றிபெறுவது நிச்சயம்.''

நமது மேடைகளில், நமது தலைவர்கள் உதிர்த்த பொன்மொழிகளில் சிலவற்றை மட்டும் தொகுத்தளித்திருக்கிறேன். அந்த கருத்துக்களை ஆராயும் ஆற்றல் மிக்கவர்கள், நம்மை ஒருபோதும் அரசியல் புரட்சிக்காரர்கள் என்றோ — தீவிரவாதிகள் என்றோ—நாட்டில் அமைதியை கெடுப்பவர்கள் என்றோ — சுயநலமிகள் என்றோ—வகுப்புவாதிகள் என்றோ — கூடாத அரசியல் பயின்றவர்கள் என்றோ நிச்சயம் கூறமாட்டார்கள்.

அதுமட்டுமல்ல! இந்திய அரசியல் வரலாற்றிலே சட்டத்திற்கு உட்பட்டு, ஜனநாயகப் பாதையில் பண்பட்ட அரசியல் பயின்று, பலருக்கு எடுத்துக்காட்டாக அன்றே விளங்கினோம் என்பது தெளிவாகப் புலப்படும்

எதிர்ப்பிலே வளர்ந்த இயக்கம் நமது இயக்கம்!

ஏசல்களையும், பழிகளையும் தாங்கிக்கொண்டு வளர்ந்தது நமது இயக்கம்! அறிவுப் போர் நடத்தியது நமது இயக்கம், ஆயுதங்களை நம்பிடவில்லை அதனால்தான் எதிரிகள் தோற்கவும், நாம் வளரவும் நேர்ந்தது!

சந்தர்ப்பவாதிகளான எதிரிகள் பலவேடங்கள் போட்டு, புதுப்புது நாடகங்களை ஆட நேர்ந்தது.

1911-ல் ஆங்கிலேயர் ஆட்சிக்கு வரம்புக்கு அதிகமாக பாராட்டுகளை தெரிவித்த 'பெசண்ட்' அம்மையார் 1916-ம் ஆண்டு ஆங்கிலேயரி ஆட்சியை வரம்புக்கு மீறி கண்டிக்கும் காட்சியை நாட்டுமக்கள் கண்டு எள்ளி நகையாடினர்.

1917-ம் ஆண்டு டிசம்பர் 24-ம் நாள் அப்பொழுது வைஸ்ராயாக இருந்த லார்ட் செம்ஸ்போர்டும் இந்தியா மந்திரி திரு· மாண்டேகுவும் சென்னைக்கு வருகை புரிந்தனர். இம்மாநிலத்தின் 4 கோடி மக்களின் குறைகளை நமது தலைவர்கள் எடுத்துக் கூறினர்.

இறுதியில் நியாயங்கள் வென்றன! நீதி நிலைத்தது! நாம் விரும்பிய வகுப்புவாரி பிரதிநிதித்துவ கொள்கையை பிரிட்டிஷ் பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டு; அதற்குத் தக்கவாறு இந்திய அரசியல் சீர்திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டது.

இராஜாக்கள் — ஜமீந்தார்கள் — மிட்டாதார்கள் — பணக்காரர்கள் — சீமான்கள் பிரபுக்களை கொண்ட கட்சி என்று ஜஸ்டிஸ் கட்சியை குறை கூறினர் பலர். ஆனால் அந்த கட்சியினர்தான் நடைமுறைக்கு சாத்தியமான கோரிக்கைகளை கண்யமாக எழுப்பி, அந்த கோரிக்கைகளை அடைய சட்டத்திற்கு உட்பட்டு ஜனநாயக ரீதியில் போராடி, மகத்தான வெற்றியை இந்தி மாநிலத்து மக்களுக்கு பெற்றுத் தந்தனர், என்பதை உலக வரலாறு புகட்டும்.

ஒரு சொட்டு ரத்தம் சிந்தவோ, அடக்குமுறைக்கு இடமளிக்கவோ, நமது இயக்கம் காரணமாக இருந்திடவில்லை. 1919-ல் லண்டனில் நிறைவேற்றப்பட்ட இந்திய சீர்திருத்த மசோதா, இரட்டை ஆட்சி (Dyarchy) முறைக்கு வழிவகுத்தது.

மக்களுக்கு வாக்குரிமை அளித்து, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் குறிப்பிட்ட சில அதிகாரங்களை கொடுத்து, துறைத்தனத்தில் அதிகப்படியான பங்கும் பொறுப்பும் அளிப்பதே இந்த இரட்டைஆட்சியின் (Dyarchy) அடிப்படை நோக்கமாகும். முழு அதிகாரம் பெற்று சுதந்திரமாக வாழ மக்களை பக்குவப்படுத்துவதே இந்த அடிப்படை இலட்சியம். இருந்தும் இத்திட்டத்தை காங்கிரஸ் மகாசபை ஏற்கவில்லை. ஆனால் ஒரு சில காங்கிரஸ்காரர்கள் சுயராஜ்யக் கட்சி என்ற புதிய அமைப்பை உருவாக்கிக் கொண்டு தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சியை எதிர்த்து போட்டியிட்டனர்.

அரசியல் சட்டத்தை தோற்கடிப்பதே (Wreck) அவர்களின் இலட்சியம்.

வங்காள மாநிலத்தில் சுயராஜ்ய கட்சியினர் பெருவாரியான பலத்தை பெற்றனர். ஆனால் அமைச்சர்அவை அமைத்து நிர்வாகத்தில் தரப்பட்ட பங்கை ஏற்று மக்களுக்கு இயன்றதை அவர்கள் செய்திடவில்லை.

பம்பாய் மாநிலத்திலும் புதிய அரசியல் சீர்திருத்தம் தோல்வி கண்டது.

ஐக்கிய மாகாணத்திலும், பஞ்சாப் மாநிலத்திலும் இரட்டை ஆட்சி முறை வெற்றிபெறவில்லை.

ஆனால், சென்னை மாநிலத்தில் மட்டும் இரட்டை ஆட்சிமுறை, வெகு சிறப்பாக, துவக்கப்பட்ட காலத்திலிருந்து இதுவரை, எவ்வித தடையுமின்றி செயல்பட்டது.

இதனால், நல்ல அரசியல் அறிவு மேலும் பெறவும் பாராளுமன்ற ஜனநாயக முறையின் தனிச்சிறப்புகளை மக்கள் அறியவும், தகுதி படைத்த பலர் சட்டமன்ற விவாதங்களில் பங்கு கொண்டு நாட்டுக்காக வாதாடவும், சட்டத்தின்மூலம் மக்களின் குறைகளை இயன்ற அளவிற்கு போக்கிடவும், புதிய பொன்னான வாய்ப்பினை தென்னக மக்கள் மட்டுமே பெற்றனர்.

நல்ல நிர்வாகத் திறமையை பலர் புதிதாக பெறும் வாய்ப்பும் ஏற்பட்டது.

முதல் பொதுத் தேர்தல் 30-11-1920-ல் நடைபெற்றது. ஜஸ்டிஸ் கட்சி பெருவாரியான இடங்களை பெற்று, எவருடனும் கூட்டு சேராமலும், எவரையும் ஆசைக்காட்டி அழைத்துக்கொண்டு பலம் பெருமலும் நல்ல



நிலையான (stable) அமைச்சர் அவையை அந்த காலத்திலேயே அமைத்தது.

நீதிக்கட்சியின் அமைச்சர் அவையை தலைமை ஏற்று நடத்துமாறு சர். பி. தியாகராயர் அழைக்கப்பட்டார்.

ஆனால், அவர் அதனை ஏற்கவில்லை. தன்னுடைய கட்சியினர் அந்த காரியத்தை செய்திட வழிவகுத்துக் கொடுத்து திரு. ஏ. சுப்பராயலும் (ரெட்டியார்) அவர்களை முதல்வர் பதவிக்கு நியமித்து, தான் கட்சிப் பணியை தொடர்ந்து ஆற்றிட வசதியைத் தேடிக்கொண்டார். பதவி கிடைத்த உடன் ;தன்னுடைய இலட்சியங்கள் முழுமையாக நிறைவேறி விட்டதாக அவர் தப்புக் கணக்குப் போடவில்லை. அவர் பதவி வெறியர் அல்லர்! பதவியை நாடி ஓடியவருமில்லை! சிறந்த இலட்சியவாதி!

நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர் பெண்களுக்கும் தகுதி அடிப்படையில் வாக்குரிமை அளித்தனர்.

தென்னிந்திய அரசியல் ஏற்றத்திற்கு, சட்டமன்றத்தில் நீதிக்கட்சி புரிந்த சாதனை அக்கட்சியின் சாதனைகளில் மிக முக்கியமான ஒன்றாகும் (One of the most important contributions of the Justice Party to South Indian public life was its legislature Achievements)
என்று கலிபோர்னியா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் ஜார்ஸ்கி (Irschick) மிகவும் அழகாக மதிப்பிட்டு புத்தகம் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது.

காதல் திருமணங்களையும், கலப்புத் திருமணங்களையும் செய்து கொள்பவர்களுக்கு பாதுகாப்பளிக்க தனியாக ஓர் திருமணச் சட்டத்தையும் (Special Marriage Act) கொண்டுவந்தனர். இச்சட்டம் 3-8-1921ல் நிறைவேற்றப்பட்டது.

அறநிலைய பாதுகாப்புச் சட்டம் (H. R. E. Act) பலத்த எதிர்ப்புக்கிடையே நிறைவேற்றப்பட்டது.

சிறு தொழில்களை ஊக்குவித்து, கூட்டுறவுத் துறையைப் பேணி; ஆரம்பக் கல்விக்கும், இலவசக்கல்விக்கும், பள்ளி மாணவர்களுக்கு பகல் இலவச உணவுக்கும் பாடுபட்டனர். சென்னை பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக் கழகம், ஆந்திர பல்கலைக்கழகம் நீதிக் கட்சி காலத்தில் உருவாக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

தேவதாசி ஒழிப்பு மசோதா கொண்டுவரப்பட்டது. 'வகுப்புவாரி பிரதிநிதித்துவமுறை (Communal G.O.) அமுலாக்கப்பட்டது. தீண்டாமையை ஒழிக்கும் நோக்குடன் அந்த வகுப்பு சிறுவர்களை சேர்க்க மறுத்த கல்விக்கூடங்களுக்கு அரசு உதவியளிக்க மறுத்தது.

கல்வி நிலையங்கள் பெருகவும், நெடுஞ்சாலைகள், மருத்துவமனைகள், நீர்பாசனத் திட்டங்கள் கொண்டுவரப்பட்டன. உள்நாட்டு மருத்துவத்தை (Indegenous Medicines) ஊக்கிவைக்க கல்லூரி ஒன்று தனியாக ஏற்படுத்தப்பட்டது. இனாம் சட்டத்தை திருத்தி, உழவருக்கு உதவி புரிந்தனர்.

இப்படி எத்தனையோ நற்காரியங்கள் செய்து முடித்தனர் இரட்டை ஆட்சி காலத்தில்,

குறிப்பிட்ட சில இலாக்காக்களின் பொறுப்பை மட்டுமே பெற்று, வரையறுக்கப்பட்ட சில அதிகாரங்களை மட்டுமே கொண்டு, வியக்கத்தக்க திறமையை உலகுக்குக் காட்டிய பெருமை நமது இயக்கத்திற்கு அன்றே ஏற்பட்டது.

சட்டம் போற்றப்பட்டது!

ஒழுங்கு காக்கப்பட்டது!

R. C. No. 250356 Phone: 32702

## REVATHI ENGINEERING WORKS

Engineering Contractors

375-A, Thadagam Road

Coimbatore-641040

Undertaking:

Structurals Fabricating Works

Welding Etc.

Steel Trusses Steel Windows

„ Grills „ Doors

Collapsible Gate, Compound Gates, Steel Water Tanks, Rubbish Cart, Night Soil Cart, Water Cart, Bins Extra

**நிர்வாகம் முறைப்படுத்தப்பட்டது!**
**அமைதி நாட்டப்பட்டது!**

**சமநீதி வகுக்கப்பட்டது!**

**ஏற்றம் காணப்பட்டது!**

**ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டது!**

இந்த நிலை வேறு எந்த மாநிலத்திற்கும் கிட்டவில்லை என்பது இந்திய அரசியல் வரலாறு புகட்டும் உண்மை.

அந்த காலத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் விவாதங்களில் மட்டுமே சொற்போர் நடத்தினர். வெளியே ஒருவருக்கொருவர் உரையாடி அளவளாவி பழகுவர். சட்டமன்றத்தில் குழப்பங்கள் ஏற்படுவதும், உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்வதும் நீதிக்கட்சி காலத்தில் அறியாத ஒன்று.

1923-ம் ஆண்டுநவம்பரில் இரண்டாவது பொதுத் தேர்தல் நடைபெற்றது. இதிலும் நீதிக்கட்சியே பெருவாரியான இடங்களை கைப்பற்றியது. 1926-ல் நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி அதிகப்படியான இடங்களை பெற்றிருந்ததே தவிர, மெஜாரிட்டி பலம் பெறவில்லை. அதனால் யார் மந்திரி சபை அமைப்பது என்பதும், இரட்டை ஆட்சிமுறை தோல்வியடைய வேண்டுமா என்ற கவலையும் ஏற்பட்டது.

நெருக்கடி நேரத்தில் நல்வழிகாட்டிய நமது தலைவர்கள் டாக்டர் நாயரையும் சர். பி. தியாகராயரையும் இழந்து தவித்த காலம் அது.

எப்படியும் ஆட்சியை கைப்பற்ற வேண்டும் என்று அப்போதைய கட்சித் தலைவர் பனகால் அரசர் நினைத்திருந்தால் முடிந்திருக்கும்.

உதிரிகளை நாடி, சுயேச்சை உறுப்பினர்கள் பக்கம் அவர் பார்வை பட்டிருந்தாலே போதும், ஓடோடி வந்திருப்பர். ஆனால் அதை அவர் விரும்பவில்லை. நல்ல ஜனநாயக நெறிகளின் இருப்பிடமான நீதிக்கட்சிக்கு தரக்குறைவான அரசியல் பிடிக்காது போனது வியப்புக்குரியதல்ல!

டாக்டர் சுப்பராயன் தலைமையில் அமைச்சர்அவையை நிறுவிடவும், அதற்கு நீதிக்கட்சியின் ஆதரவை அளித்திடவும் அவர் முடிவு செத்தார். பிற்காலத்தில் டாக்டர் சுப்பராயன் நீதிக்கட்சியில் சேரும் நிலை ஏற்பட்டது.

பண்புக்கும், நிர்வாக திறமைக்கும் பெயரெடுத்த பனகால் அரசரும் 15–12–28-ல் மரணமடைந்தார்.

கட்சிக்கு புதிய தலைவர் தேர்ந்தெடுக்க 5–9–29-ல் நீதிக் கட்சி மாநாடு கூடியது. பலத்த போட்டி ஏற்பட்டது.

நீதிக்கட்சி நாடாண்ட காலத்தில் மாநில முதல்வர்களாக இருந்தவர் தங்கள் பதவியை திறம்பட வகித்தனர்.

17–12–1920-ல் முதல்வர் பதவி ஏற்ற திரு. ஏ. சுப்பராயலு ரெட்டியார் 11–7–1921 வரை அப்பதவியை வகித்து மரணமடைந்தார்.

அடுத்து பனகால் அரசர் அப்பதவியை ஏற்றார். அவர் 9–[illegible]–1866-ல் ஆந்திரத்தில் செல்வச்சீமான் குடும்பத்தில் பிறந்தவர். தெலுங்குமொழியிலும், சமஸ்கிருதம், ஆங்கில மொழியிலும் நன்கு பாண்டித்யம் பெற்றவர். மாநிலக் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றவர். அறநிலைய பாதுகாப்பு சட்டம் நிறைவேற்றிட அரும்பாடுபட்டவர். உள்நாட்டு மருத்துவத்திற்கு ஊக்கமளித்தவர். பாராளுமன்ற ஜனநாயக முறையை பாதுகாத்து பேணி வளர்த்தவர். எதிர்க்கட்சிகளுக்கு மதிப்பளித்து நடந்து கொண்டவர். பழகுவதற்கு இனியவர் என்று எதிரிகள்கூட பாராட்டினர். இரட்டையர் ஆட்சிக்கு நெருக்கடி ஏற்பட்ட நேரத்தில் விவேகத்துடன் டாக்டர் சுப்பராயன் தலைமையில் அமைச்சர் அவை ஏற்படுத்தி, எதிரிகளை வியப்பில் ஆழ்த்தினார். அவரை பேச்சுவீரர் என்பதைவிட செயல்வீரர் என்றே கூற வேண்டும். அவர் 15–12–1928-ல் மரணமடைந்தார்.

1930-ல் நீதிக்கட்சி பெற்ற மகத்தான வெற்றிக்குப் பிறகு திரு. பி. முனுசாமி (நாயுடு) முதல்வரானார். கட்சிக்கு புத்துயிர் ஊட்டி, வெற்றிக்கு அயராது பாடுபட்ட சர். பி. டி. இராசன் அவர்கள் கட்சியின் தலைவராகி முதல்வர் பதவி ஏற்க வேண்டும் என்று பெருவாரியானவர்கள் விரும்பினர். ஆனால் அவர் அதை விரும்பவில்லை. போட்டியை தவிர்க்கவும், கட்சி பிளவு படக்கூடாதுஎன்ற நல்லெண்ணத்துடனும் அவர்அவ்வாறு செய்தார். திருவாளர் முனிசாமி திறமையில் குறைந்தவரல்ல என்பதை தன்னுடைய நிர்வாகத்தில் சிறப்பாக நடத்திக்காட்டினார்.

கட்சித் தலைவரே முதல்வர் பதவியை வகிப்பது நீதிக்கட்சியின் வழிமுறை. அடுத்து நடைபெற்ற தலைவர் தேர்தலில், மீண்டும் சர். பி. டி. இராசன் அவர்களையே தலைவர் பதவி ஏற்கும்படி பலர் வற்புறுத்தினர். மீண்டும் போட்டியை தவிர்க்கவும், கட்சியின் நலனைக் கருதியும் பி. டி. இராசன், பொப்பிலி அரசர் பதவி வகிக்க சாதகமாக விட்டுக் கொடுத்தார். 5–11–1932-ல் பொப்பிலி அரசர் முதல்வரானார். கட்சிப் பணிகளுக்காக தனது செல்வத்தையே இழந்தார் என்று சரித்திரத்தை படைத்தார். தந்தை பெரியாரின் நீதிக்கட்சியின் வளர்ச்சிக்கும், தன்மான இயக்கப் பிரச்சாரத்திற்கும் பேராதரவு தந்தவர் பொப்பிலி அரசர்.

அமைச்சர் அவையில் இடம்பெற மற்றஅமைச்சர்களை தேர்ந்தெடுப்பதில் நீதிக்கட்சி சிறந்த வழிகாட்டியாக விளங்கியது. எதை யாரிடம் ஒப்படைத்தால் சிறப்போ அதனைச் செய்தது.

சாதியின் அடிப்படையிலோ, மதத்தின் அடிப்படையிலோ, செய்திடவில்லை. குறிப்பிட்ட எவரையும் திருப்திப்படுத்த வேண்டிய அவசியமோ, எவரையும் ஏமாற்றவேண்டும் என்ற எண்ணமோ இருந்ததில்லை.

பெரியார் கட்டாய இந்தியை எதிர்த்து சிறையில் இருந்த நேரம், அவரை கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். அவர் இந்த நாட்டின் 'ரூஸோ' என வருணிக்கப்பட்டவர். தந்தை பெரியார் தலைமையில் இயக்கம் கண்ட முன்னேற்றத்தை இச்சிறு கட்டுரையில் சுருக்கமாக தொகுத்துக் கூறுவது இயலாத காரியம் — அப்படி செய்வது, முறையும் ஆகாது!

இன்று மக்கள் பெற்றுள்ள புதுவாழ்விற்கு வழிகோலியவர் அவர். அதற்கு தனி வரலாறே எழுதிடவேண்டும்.

நமது இயக்கத்திற்கு 20-ம் நூற்றுண்டின் தலைச் சிறந்த மேதைகள் பலர் தலைவர்களாக — அமைச்சர்களாக — பேச்சாளர்களாக — எழுத்தாளர்களாக — தியாகசீலர்களாக — உத்தமர்களாக — பண்பாளர்களாக — நல்ல வழிகாட்டிகளாக கிடைத்தது இந்த தலைமுறையினருக்கு பெருமையளிப்பதாகும்.

அப்படிப்பட்டவர்களை பற்றி விரிவாக, விளக்கமாக வரலாற்று ரீதியாக, எழுதிடவேண்டும் என்பது உண்மை. வரும் தலைமுறையினருக்கு அது பயனளிக்கும் என்பதில் ஐயம் இல்லை. ஆனால், நமக்கு அது பெரிய காரியம். ஏன் என்றால் நமது பாரம்பரியமும், நம் பட்டாளமும் பெரியது— அந்தப்பட்டியலும் பெருகிக்கொண்டே இருக்கிறது.

முழுமையான வரலாறும் ஒரு கட்டுரையில் எழுதிமுடிக்க இயலாது.

மாற்றார் நம் இயக்கத்தின் மீது கொட்டிக் குவித்து வரும் பழிகள்; வீண் புரட்டுகள் என்பதை தெளிவுபடுத்தவே, நமது இயக்கத்தின் சில முக்கியமான சிறப்புகளை மட்டுமே இயக்கத்தின் மணிவிழா நேரத்தில் நினைவு கூர முடிகிறது.

தமிழ்மொழிக்காக பாடுபட்டு, தமிழ்ச் சங்கத்தின் தலைவராக 'தமிழவேள்' என்ற பெயர் பெற்றார் சர். பி. டி. இராசன்.

எதிரிகள்கூட இனியவர் பண்பாளர் — பெரியவர் என்று அழைத்திடும் தகுதியுடன் மறைந்தார். சர்வகட்சியினரும் அவரிடம் நன்மதிப்பு கொண்டிருந்தனர்.

கொள்கையை விட்டுக் கொடுத்து, இலட்சியங்களை கைவிட்டு, பதவிக்காகவும் பணத்திற்காகவும் கட்சி மாறும் அரசியல் துரோகம் புரிபவர் நீதிக்கட்சி காலத்தில் இருக்கவில்லை.

மக்கள் எந்த நேரமும் தடையின்றி சந்திக்க அவர் குடியிருந்த 'பாலையம் இல்லத்திற்கு' கதவுகளை (Gates) கூட அவர் பொருத்திடவில்லை.

தாழ்த்தப்பட்டவர்கள்!

முஸ்லீம்கள்!

கிருத்துவர்கள்!

எல்லோரும் நிம்மதியுடன் வாழ்ந்து, நீதிக்கட்சியையேதங்களின்கோட்டையாக — கேடயமாக — திருக்கோயிலாக மதித்து வந்தனர்.

காங்கிரஸ் இயக்கத்தை ஒழித்துக்கட்ட ஆங்கிலேயர் மேற்கொண்ட முயற்சிகளை நீதிக்கட்சியினர் ஏற்க மறுத்தனர். காவல்துறையை ஏவி, கடுமையான அடக்குமுறையில் ஈடுபட்ட நேரத்தில் வெள்ளையரின் வெறிச்செயலை கண்டிக்க, சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் நீதிக்கட்சி சார்பாக டாக்டர் நடேசனார் பங்கு கொண்டு மற்றவர்களைவிட தீவிரமாகக் கண்டித்தார்.

காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான திரு. வி. க. மீது தேசத் துரோக குற்றம் சாட்டி நாடுகடத்த, ஆங்கிலேயர் ஆட்சி முனைந்ததை அறிந்து, ஜஸ்டிஸ் மந்திரி சபை பதவியில் இருந்து விலகும் என எச்சரித்தது; அந்த உத்தரவை வாபஸ் பெறச் செய்தார் சர். பீ. தியாகராயர்.

சுதந்திரம் பெற்ற பின்னர் மக்கள் இன்றைய பாரதப் பிரதமர் தூய ஜனநாயகத்திற்கு மீண்டும் நல்ல நிலையான செல்வாக்கு ஏற்பட சில நல்ல நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதே, இன்றைய ஜனநாயக அரசியலுக்கு விளக்க மளிப்பதாகும்.

மலரட்டும் தூய ஜனநாயகம். ஓங்கி வளரட்டும் நாகரீக நல்ல அரசியல் நெறிமுறைகள். நீதிக்கட்சியின் காலத்தில் வளர்க்கப்பட்ட நல்ல அரசியல் முறைகளை இன்று நாம் நினைவில் கொண்டு, நாட்டு மக்களின் நினைவுக்கு எடுத்துச் சொல்லி, மீண்டும் நல்ல தூய்மையான ஜனநாயக அரசியல் எங்கும் ஒளிவிட்டு தழைக்கவே நாம் எல்லோரும் பாடுபடவேண்டும்.

நமது இயக்கத்தின் சாதனைகளும், தனிச்சிறப்புகளும், ஜனநாயகப்பலமும், தலைவர்களின் பெருமையும் பிற்காலத்து மக்களுக்கு பல பயனுள்ள படிப்பினைகளைக் கொண்டதாகும். அயல்நாட்டு அராய்ச்சியாளர்களின் புகழுரைகளை பெற்றனவாகும்.

நம்மைப் பற்றி சக்ரவர்த்தி சி. ராஜகோபாலாச்சாரியார் கூறியிருக்கும் கருத்தினை படியுங்கள்.

> "பிராமணரல்லாதார் இயக்க நோக்கங்கள் பலவற்றில் எனக்கு அனுதாபம் உண்டு. சமூக அமைப்பில் பல அநீதிகள் இருந்தன. அவைகளை ஒழிக்க அரசியல் தலைவர்கள் முயலவில்லை. குறைபட்டோரை அவர்கள் அலட்சியம் செய்தனர். அரசியல் மூலமின்றி சமூகக் குறைபாடுகளை ஒழிக்க முடியாதென கண்டு டாக்டர் நாயர், பிராமணரல்லாதார் இயக்கத்தை தோற்றுவித்தார். ஆகவே, அவ்வியக்கத்தினல் அநேக நன்மைகள் உண்டாகி இருப்பதை நான்ஒப்புக்கொள்கிறேன். இவ்வியக்கத்தினல் முன்னம் விஷயங்களை ஆராய்ந்து பார்க்காதவர்கள் இப்போது பார்க்கிறார்கள். முன் விளங்காமல் இருந்த பல விஷயங்கள் இப்போது தெளிவாக விளங்குகின்றன. எவரையும் வெறுக்குமாறு பிராமணரல்லாதார் கூறவில்லை. நம்மவர்களுக்குள் நல்லெண்ணத்தையும், ஒற்றுமையையும் வளர்க்க இந்த சந்தர்ப்பம் பெரிதும் உதவி புரியுமென்று நம்புகிறேன்."

இயக்கத்தின் மணிவிழா கொண்டாடும் நமக்கு, இதைவிட யாரிடமிருந்து நற்சான்று வேண்டும்?

இதோ மற்றொரு மேதையின் படப்பிடிப்பு! 1903-ம் ஆண்டு முதல் 1957 வரை பல சட்டமன்றங்களில் பணியாற்றிய சர். சி. பி. இராமசாமி அய்யர் நம்மைப் பற்றி இப்படி கூறியிருக்கிறார்.

> 1920—முதல் 1927 வரை நான் சட்டசபை உறுப்பினனாக இருந்தபோது பாராளுமன்ற முறைகளைக் கண்டறிந்த பலருடன் பழக நேரிட்டது! நல்ல பாராளுமன்ற முறையைக் கற்றறிந்த பலர் அந்த சபையில் இருந்தனர். அவர்களில் முதல்வர் சர். பி. தியாகராய செட்டியார் ஆவார். அரசியலில் எனக்கும் அவருக்கும் மாறுபாடு இருப்பினும் அவர் எங்கள் குடும்பத்திற்குபிடித்தமான உற்றார் என்ற நிலையில் பழகியுள்ளார்.
>
> தீவிரமாக தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவார். ஆனால் பதவி ஆசையே அவருக்கு இருந்ததில்லை!
>
> பனகல் அரசர் பதவியை ஏற்றார். அவரும் சர். தியாகராயரைப் போலவே சட்டசபையில் அதிகம் பேசமாட்டார்.
>
> பேசவேண்டிய அவசியம் நேரும்போது, சுருக்கமாக — தெளிவாக அவர்கள் பேசுவார்கள், மற்றவர்கள் பேச நல்ல வாய்ப்பு அளித்தனர்.
>
> அவர்களுடைய பெருந்தன்மையும், அறிவாற்றலும் வெகுவாகப் பாராட்டத்தக்கனவாகும்.
>
> நானும் சர். ஏ. இராமசாமி முதலியாரும், விவாத நேரத்திலும் கொள்கைகளை விளக்கும்போதும் தீவிரமான தாக்குதலில் ஈடுபடுவோம். ஆனால், பேச்சு முடிந்ததும் நாங்கள் எப்போதும் போல சந்திப்போம், அளவளாவி மகிழ்வோம்."

நமது பாரம்பர்யத்தின் சிறப்பை உணர்த்திட வேறு என்ன ஆதாரம் வேண்டும்? நமது பின்னணியே தனிச் சிறப்புடையது.


**With the best compliments from:**

Phone: 26074 Grams: 'Pumpmotor'

# BHARAT FOUNDRY

Manufacturers of:

**'B T F' Pumps, Motors, Monoblocks**

*Ammankulam Road, Pappanaickenpalayam*

COIMBATORE-641037




*With Best Compliments*
*From :*

**LITH PROCESS**

88, Suryanarayana Chetty Street,
Royapuram, Madras - 600 013.

# கலர் லைன் ஆப்டோன்
# பிளாக்குகள் செய்ய
# சிறந்த இடம்
# சாமுண்டீஸ்வரி பிராசஸ்

1, கிருஷ்ணசாமி அய்யங்கார் தெரு,
தியாகராயர்நகர் — சென்னை-17
தொலைபேசி 440433

அஞ்சுகம் பதிப்பகத்திற்காக சென்னை- 600034 முரசொலி' அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஆசிரியர் மாறனால் 52-ஏ கோடம்பாக்கம் நெடுஞ்சாலை சென்னை 600034-லிருந்து வெளியிடப்படுகிறது.

பதிவு எண், எம்: 7436 முரசொலி பொங்கல் மலர் 1977 (14-1-77 இதழுடன் இணைந்தது)

